REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மார்ச் 18 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 තිනකරන්
1932-2024 ANNIVERSARY
வரு. 92 இல. 67 | Monday 18, March, 2024 | 28 பக்கங்கள் | 50/-


# மாற்றமுறும் உலகுக்கேற்ப மாசற்ற ஊடக கலாசாரம்





92

1932–2024

ANNIVERSARY

## ஒன்பது தசாப்தம் கடந்த வெற்றிப் பயணம்




92வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் தினகரனுக்கு எமது வாழ்த்துக்கள்!!



JEYECHANDRANS
Wellawatte/ Pettah
இல. 433, காலி வீதி, கொழும்பு 06. தொலைபேசி : 0114528438
இல. 145, பிரதான வீதி, கொழும்பு 11. தொலைபேசி : 0112448860






HNB லீஸிங் வேளாண் சக்தி மகிழ்ச்சியின் அறுவடை

எதிர்வரும் பருவகாலத்தில் அறுவடையை மேலும் செழிப்பானதாக மாற்றிக் கொள்வதற்கு டிரக்டர் மற்றும் ஹாவெஸ்டர் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் உங்களுக்காக

குறைந்த ஆரம்ப கொடுப்பனவு
குறைந்த வட்டி வீதம்
இலகுவான கொடுப்பனவு வசதி
பருவகால தவணைக் கொடுப்பனவு

நீங்களும் அருகில் உள்ள HNB கிளைக்கு விஜயம் செய்யுங்கள்,
அல்லது 0775 660500 | 0112 660 330 | 0112 660 331 அழையுங்கள்

HNB லீஸிங் | கெமி புதுவ | Hayleys | SINGER SRI LANKA

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஃபிச் ரேட்டிங் A (lka) ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி/Hatton National Bank PLC - PQ 82

# நகர்வலம்



# 14 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட காலி 'செரின் ரிவர் பார்க்' பூங்கா

## ஜனாதிபதியால் திறந்து வைப்பு





காலி, ஹொலுவாகொட "செரின் ரிவர் பார்க்" சுற்றுச்சூழல் பூங்கா அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

செரின் ரிவர் பார்க் காலி நகரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள ஹோலுவாகொடவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பூங்காவின் பரப்பளவு சுமார் 14 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பூங்காவின் நிர்மாணப்பணிகள் இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு 440 மில்லியன் ரூபாவாகும்.

ஹொலுவகொட செரின் ரிவர் பார்க் ஏரி, நடைபாதைகள், சுரங்கப்பாதைகள், சிறுவர் பூங்காக்கள், கடைத் தொகுதிகள், சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்றவற்றைக் கொண்டுள்ளதோடு சூரிய சக்தியால இவை இயங்குகிறது.

விவசாயப் பயிர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் பிற பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்யும் திட்டமும் இதன் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இந்த பூங்காவில் இருந்து வக்வெல்ல, வட்டரேக மற்றும் காலி வரை சுற்றுலாத்துறைக்கு முன்னுரிமை கொடுத்து படகு சேவையொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# 'தினகரன்' தமிழ் பேசும் வாசகர்களின் பேரபிமானத்தை பெற்ற பத்திரிகை

## வாழ்த்துச் செய்தியில் ரவூப் ஹக்கீம் எம்.பி



இலங்கை தமிழ் இதழியல் வரலாற்றில், நூற்றாண்டை எட்டிப் பிடிக்கும் நிலையில், 92 ஆவது அகவையை கொண்டாடும் "தினகரன்" மற்றும் "தினகரன் வார மஞ்சரி" என்பன, தமிழ் பேசும் வாசகர்கள் மத்தியில் பல தசாப்த காலங்களாகப் பேரபிமானத்தைப் பெற்றிருக்கின்றன.

ஊடகத்துறை ஜாம்பவான்களான பேராசிரியர் கா. கைலாசபதி, கலாசூரி சிவகுருநாதன் முதலான தலைசிறந்த ஆளுமைகள் உட்பட பலர் இவற்றின் பிரதம ஆசிரியர்களாகப் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், தினகரனுக்கு அனுப்பியுள்ள தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

Lake House என்று அழைக்கப்படும் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடுகளான இவை கால ஓட்டத்தில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடியனவாக புதுப்பொலிவுடன் வெளிவருவதற்கு தற்போதைய பிரதம ஆசிரியர் நண்பர் செந்தில் வேலவர் உடன் ஆசிரியர் பீடத்தினரும்,ஏனைய ஊழியர்களும் அர்ப்பணிப்புடனான சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருவதையிட்டு, இந்தநிறுவனத்தில் முன்னர் பணிபுரிந்தவன் என்ற மகிழ்ச்சியில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தினகரன் பத்திரிகையின் நடுநிலைத் தன்மையை நான் பாராட்டுகிறேன்

## மர்ஜான் பளீல் எம்.பி வாழ்த்து



92ஆம் வருட வெற்றிப்பாதையில் இன்று காலடியெடுத்து வைக்கும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடகப்பணி தொடர்ந்தும் சிறக்க வேண்டுமென முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் அகவை 92ஆம் வருடத்தில் கால்வைத்துள்ள தேசிய பத்திரிகையான தினகரன் பத்திரிகை ஊடக தர்மங்களை பேணி வருவதோடு, நடுநிலைமையான தன்மையை தொடர்ந்தும் பேணி வருகின்றமையை நான் பாராட்டுகிறேன்.

மேலும் வாசகர்கள் மத்தியில் இப்பத்திரிகை தனியிடத்தை பெறுவதற்கும் அதன் வெற்றிக்கும் மேற்சொன்ன விடயம் பிரதான காரணமென நான் நம்புகிறேன்.

உண்மையில் காலாகாலமாக நான் தினகரன் வாசகன் என்பதை முதலில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்தோடு எனது அரசியல் பயணத்தை அழகூட்டியதில் தினகரன் பத்திரிகைக்கு பாரியதொரு பங்களிப்பு உள்ளது.

மேலும் தற்போதைய பிரதம ஆசிரியரான தே. செந்தில்வேலவர் தலைமையிலான ஆசிரியர் குழாத்தினர் இப்பத்திரிகையின் முன்னேற்றத்திற்கு வழங்கி வருகின்ற அர்ப்பணிப்பான சேவைக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் இந்நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் சமூகத்துக்கு தினகரன் பத்திரிகை சிறந்த சேவையை வழங்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிணற்றில் விழுந்து சிறுமி உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மதுரங்குளி, விருதோடை பிரதேசத்தில் சிறுமி ஒருவர் வெள்ளிக்கிழமை (15) மாலை கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

மதுரங்குளி விருதோடை பகுதியைச் சேர்ந்த 06 வயதுடைய பாத்திமா சனா எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுமி வெள்ளிக்கிழமை (15) மாலை 6.30 மணிக்கு தனது வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் வாளி ஒன்றின் உதவியுடன் தண்ணீர் எடுக்கச் சென்றவேளையில் கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கிய சிறுமி மீட்கப்பட்டு, புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




கோயம்புத்தூரில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ ராமலிங்க சௌதாம்பிகை அறிவியல் மற்றும் வணிகக் கல்லூரியின் ஆண்டு விழாவின் போது, இலங்கையின் துணை உயர் ஆணையர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரன், கலாசார நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கினார்.

# காட்டு யானை தாக்கி உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

காட்டு யானையின் தாக்குதலில் விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர். மதவாச்சி பொலிஸ் பிரிவின் லிந்தவெவ பகுதியில் கடந்த 14 ஆம் திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். லிந்தவெவ, மதவாச்சி பகுதியை வசிப்பிடமாக கொண்ட 61 வயதுடைய விவசாயி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, சம்பவ தினம் மாலை தனக்கு சொந்தமான சேனையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

# தினகரனின் பயணம் தொடரட்டும்

## சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து



92 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் தினகரன் பத்திரிகை தமிழ் பேசும் மக்களுக்கு சிறப்பான சேவையை ஆற்றிவருவதோடு தினகரன் பத்திரிகைக் குடும்பத்தின் ஆசிரியக் குழுவினர், செய்தியாளர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் தொடர்ந்து தமிழ் சமூகத்துக்கு சிறப்பான பணியை ஆற்றவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.தினகரன் பத்திரிகை அரச பத்திரிகைகளில் முன்னணி செய்திப் பத்திரிகையாக கடந்த 92 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்குச் செய்திப்பணி ஆற்றி வருகிறது.தினகரன் தன்னுடைய பயணத்தை ஆரம்பித்தபோது தமிழ் மக்களுக்கான இலங்கை சுதந்திரம் அடையாத காலமாகும். இப்பத்திரிகை அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது தமது பணியை தமிழ் பேசும் மக்களுக்காக முன்னெடுத்து வருகிறது.ஒரு பத்திரிகையான தினகரன் பத்திரிகை இன்றும் தலைநிமிர்ந்து உயிர் வாழ்கிறது என்பது பாராட்டப்படவேண்டிய ஒரு சாதனையாகும்.

www.nsb.lk



NSB இடமிருந்து
புனிதமான தாய்மைக்கும்,
நாட்டின் எதிர்கால சந்ததிக்கும்

செனெஹசே தாயாத
(பாசத்தின் அன்பளிப்பு)

தேசிய சேமிப்பு வங்கியின் 52வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
2024 மார்ச் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை பிறக்கும்

குழந்தைகளுக்கு ரூ. 2,000/- வைப்புடன்
NSB ஹப்பன் கணக்குகள் பரிசாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை அருகிலுள்ள NSB வங்கிக்
கிளையில் பெற்றுக் கொள்ளுங்கள்

LRA AAA (Stable)
100% முழுமையான அரச உத்தரவாதம்

* நிபந்தனைகள் உண்டு

0112 379 379
1972
அழைப்பு நிலையம்

உங்கள் பணத்திற்கு பாதுகாப்பான இடம் தேசிய சேமிப்பு வங்கி

NSB

ரமழான்
தொழுகை நேரம்

| திகதி | 14-18 |
| --- | --- |
| ஸஹர் முடிவு | 04.48 |
| ஸுபஹ் | 05.03 |
| சூரிய உதயம் | 06.18 |
| ழுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஹ்ரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

2024 மார்ச் 18 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 තිනකරන්

வரு. 92 இல. 67 | Monday 18, March, 2024 | 28பக்கங்கள் | 50/-


## பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில்

## பிரபுக்கள் பாதுகாப்புச் சேவையில் சுமார் 5,000 பொலிஸார் கடமையில்

### அனைவரையும் விலக்கிக் கொள்ள நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியல்வாதிகள் உட்பட பல்வேறு நிலைகளில் உள்ள வர்களுக்கு அனாவசியமான விதத்தில் வழங்கப் பட்டுள்ள பொலிஸ்

06






# தினகரன்

THINAKARAN තිනකරන්

## தினகரனின் 92 வருட கால சாதனை நிறைந்த பயணம்!

பல்லாயிரம் வாசகர்களின் பேரபிமானம் மிகுந்த பத்திரிகையான தினகரன், தனது 92 ஆவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றது. எமது அன்பார்ந்த வாசகர்களுடன் இணைந்து இன்றைய தினத்தை நாம் பெருமையுடன் கொண்டாடுகின்றோம்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையுலகில் 'தாய்வீடு' எனப் போற்றப்படுகின்ற பத்திரிகை நிறுவனம் லேக்ஹவுஸ் ஆகும். எமது நாட்டில் முதன் முதலில் மாபெரும் பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸ் நிறுவனத்தை ஆரம்பித்தவர் அமரர் டி.ஆர். விஜேவர்தன என்ற ஊடகத்துறை பிதாமகன் ஆவார். ஆங்கிலம்,

04

editor.tkn@lakehouse.lk

## நாட்டில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக

# இல்ல விளையாட்டுப் போட்டிகளை புத்தாண்டுக்கு பின் நடத்தவும்

### பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவுறுத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் கடும் வெப்ப நிலையை கருத்திற் கொண்டு பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டிகளை தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறையின் பின்னர் நடத்துமாறு கல்வியமைச்சு அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. அது தொடர்பில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கடும் வெப்ப நிலையையும்

06






## இலங்கை – இந்திய மீனவர் விவகாரம்

# தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த தயார்

### உத்தியோகபூர்வ அழைப்பு இன்று அல்லது நாளை கிடைக்கும்



இலங்கை, இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு வருமாறு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார். அவரது அழைப்பு

06


92வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் தினகரனுக்கு எமது வாழ்த்துக்கள்!!



எந்த வைபவத்திற்கும் ஏற்ற சிறந்த ஆடைத் தெரிவுகளுக்கு ஒரே இடம்

114 Main St, Colombo 11
0112 320 009


## பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில்

# அமைச்சர் பந்துலவின் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு விழாவில் விருதுகள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை

06







35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 05ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 07

# தினகரனின் 92 வருட கால சாதனை நிறைந்த பயணம்!

**(ஆசிரிய தலையங்கம் தொடர்)**

**சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் பத்திரிகைகளை முதலில் ஆரம்பித்த அமரர் டி.ஆர். விஜேவர்தன, தனது அடுத்த கனவாக தினகரன் பத்திரிகையை 1932 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தின் கீழ் எமது நாடு இருந்த வேளையில், இலங்கையின் அனைத்து இனமக்கள் மத்தியிலும் தேசியப்பற்றை ஊட்ட வேண்டுமென்ற நோக்கில் அமரர் விஜேவர்தன தமிழ்ப்பத்திரிகையான தினகரனை ஆரம்பித்தார்.**

**லேக்ஹவுஸ் நிறுவனத்தின் வெளியீடான தினகரன் அன்று தொடக்கம் இன்று வரை தலைநிமிர்ந்தவாறு வெற்றிப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றது. தினகரனின் சாதனைப் பயணத்தின் 92 ஆண்டுகளின் நிறைவு தினம் இன்றாகும்.**

**தினகரன் பத்திரிகைக்கென்று தனித்துவமான சிறப்புகள் அதிகம் உள்ளன. அக்காலத்தில் தென்னிந்திய செய்திகளிலும், இலக்கியங்களிலுமே இலங்கை வாசகர்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. இலங்கைப் பத்திரிகைகளிலும் இந்திய வாசனையே நிறைந்திருந்தது.**

**அவ்வாறான நிலைமையை மாற்றியமைத்து, உள்நாட்டு இலக்கியத்தைக் கட்டியெழுப்பிய பெருமை தினகரனை மாத்திரமே சாரும். தினகரனில் பேராசிரியர் கைலாசபதி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில், தினகரன் பத்திரிகை ஊடாக ஈழத்து இலக்கியவாதிகள் உருவாகினர். இலங்கையின் முற்போக்கு இலக்கியவாதிகளை முதன் முதலில் உருவாக்கிய பெருமை தினகரனையே சாரும். இலைமறைகாயாக மறைந்து கிடந்த இலக்கிய ஆர்வலர்களை தினகரன் ஊடாக இலக்கியவெளிக்குக் கொண்டு வந்தவர் பேராசிரியர் கைலாசபதி.**

**தென்னிந்திய இலக்கியங்களையும் அந்நாட்டின் செய்திகளையும் நம்பியிருந்த மக்களுக்கு உள்நாட்டு இலக்கியத்தை ஊட்டிய பெருமை தினகரனுக்கு மட்டுமே உள்ளது. அத்துடன் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிய பத்திரிகையும் தினகரனே ஆகும்.**

**அன்று முதல் இன்று வரை இலக்கியவாதிகளுக்கும் மற்றும் வாசகர்களுக்கும் விருந்தளிக்கும் தலைசிறந்த பத்திரிகையாக தினகரன் பத்திரிகையானது வாசகர்களின் கரங்களில் தவழ்ந்து வருகிறது. தனது 92 வருட காலப் பயணத்தில் சாதனைகள், சோதனைகள் பலவற்றைக் கடந்து என்றுமே சரிந்து விடாமல் வெற்றியுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றது உங்கள் அபிமான தினகரன்.**

**எமது அன்பார்ந்த வாசகர்களுடன் இணைந்து தினகரனின் 92 ஆவது பிறந்ததினத்தை இன்று கொண்டாடுவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.தினகரனின் 92 ஆவது பிறந்ததினவிழா கொண்டாட்டம் இன்று காலை லேக்ஹவுஸ் நிறுவனத்தில் கோலாகலமாக நடைபெறுகின்றது. நிறுவனத் தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கின்றனர்.**

**இப்பத்திரிகையின் பெருமைக்கு உரித்தாளிகள் எமது அபிமான வாசகர்களேயாவர் என்பதை நாம் நன்றியுடன் இவ்விடத்தில் பதிவு செய்கின்றோம். எமது வாசகர்கள் தலைமுறை தலைமுறையாக வழங்கி வருகின்ற பேராதரவு காரணமாகவே தினகரன் பத்திரிகையினால் தலைசாயாமல் நெஞ்சுரத்துடன் பயணம் செய்ய முடிகின்றது.**

**வாசகர்களின் பேராதரவு தொடர்ந்தும் எமக்குக் கிடைக்குமென்று நம்பிக்கையில், எமது வாசகர்களுடன் இணைந்து தினகரனை வாழ்த்துகின்றோம்.**

editor.tkn@lakehouse.lk

# இலங்கை தமிழ்ப்பத்திரிகை உலகில் என்றும் வாழும் நாமம் கைலாசபதி



## தினகரனுக்கான செல்நெறியை வகுத்த ஊடகப் பேராசான்

தேசியப் பத்திரிகைக்கான செல்நெறியை தினகரன் ஊடாக உருவாக்கிய அதன் முன்னாள் ஆசிரியர் பேராசிரியர் கைலாசபதியை தமிழ்ப்பத்திரிகை உலகம் என்றுமே மறந்துவிட முடியாது.

இலங்கை தமிழ் இலக்கியத்தின் தனித்துவத்தை வலியுறுத்திய அதேசமயம், பொதுவான தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கினையும் கவனத்திலெடுத்து செயற்பட்டமை பேராசிரியரின் தனித்துவமான சிறப்புகளில் ஒன்றாகும்.

தேசிய இலக்கிய செல்நெறி காரணமாக ஒவ்வொரு பிரதேசம் சார்ந்த மண்வாசனையும் மக்களின் சமகால பிரச்சினைகளும் இலக்கியத்தின் பாடுபொருள்களாயின. அந்தவகையில் வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்து இலக்கியப் படைப்புகளை தினகரன் பத்திரிகையின் ஊடாக வெளிக்கொணர்ந்ததில் பேராசியருக்கு முக்கிய பங்குண்டு.

அவர் தினகரன் பிரதம ஆசிரியராகப் பதவியேற்ற காலத்தில் பலதரப்பட்டோரைதன்னோடுஇணைத்துக்கொண்டு செயற்படத் தொடங்கினார். தன்னுடன் ஒத்த கருத்துடையவர்கள் மாத்திரமின்றி, மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும் தினகரனில் எழுதுவதற்கான களத்தை அமைத்துக் கொடுத்தார்.

செ. கணேசலிங்கன், சில்லையூர் செல்வராசன், அ.ந. கந்தசாமி, சுபைர் இளங்கீரன், என்.எஸ்.எம். இராமையா, சி.வி. வேலுப்பிள்ளை, வரதர், வ.அ. இராசரத்தினம், நந்தி, கனக. செந்திநாதன், சிற்பி சரவணபவன், தேவன், அ. முத்துலிங்கம், என். கே. ரகுநாதன், கே.டானியல், எஸ். பொன்னுத்துரை, டொமினிக் ஜீவா, பெனடிக்ற்பாலன், நீர்வை பென்னையன், ஏ. இக்பால், முதலானோர் அன்றைய தினகரன் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சி.வி. வேலுப்பிள்ளையின் வாழ்வற்ற வாழ்வு, எல்லைப்புறம், பார்வதி, முதலியன தொடர்கதையாக வெளிவந்தன.

பல புதிய அம்சங்களும் பரிசோதனைகளும் தினகரனில் இடம்பெற்றன. வாசகர்கள் பங்கெடுக்கக் கூடிய வகையில் திங்கட்கிழமைகளில் திங்கள் விருந்து, புதன்கிழமைகளில் புதன்மலர் , வெள்ளிக்கிழமைகளில் முஸ்லிம் மஞ்சரி, சனிக்கிழமைகளில் மாணவர் உலகம் என்பன வெளிவந்தன.

ஈழத்தின் மூத்த தலைமுறை வாசகர்கள் சவாரித்தம்பர், சின்னக்குட்டி முதலான பாத்திரங்களை மறந்திருக்க மாட்டார்கள். இவர்கள் கற்பனைப் பாத்திரங்கள்.

அந்தக் கேலிச்சித்திரங்களில் நடமாடிய அவர்கள், வடபுலத்தின் ஆத்மாவை பிரதிபலித்த சமூகப் பாத்திரங்கள்.

அந்தப் பாத்திரங்களை படைத்தவர் தான் பின்னாளில் 'சிரித்திரன்' என்ற சஞ்சிகையை வெளியிட்ட சிவஞானசுந்தரம். அவரது ஆற்றலை இனம்கண்டு தினகரன் அலுவலகத்திற்கு அழைத்து, தினமும் குறிப்பிட்ட பாத்திரங்களை வைத்து சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டிய கேலிச்சித்திரக்கதைகளை எழுத வைத்தவர் கைலாசபதி.

அக்காலத்தில் காலையில் தினகரனில் கண்விழிக்கும் இலங்கை தமிழ், முஸ்லிம் வாசகர்கள், முதலில் பார்க்கும் பகுதி குறிப்பிட்ட சவாரித்தம்பர், சின்னக் குட்டி பாத்திரங்கள் என்ன சொல்கின்றன? என்பதைத்தான்.

காவலூர் இராசதுரை, சுபைர் இளங்கீரன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, எச். எம். பி. மொஹிதீன், பி. ராமநாதன், சில்லையூர் செல்வராசன், இ.முருகையன், கே. கணேஷ், பிரேம்ஜி, அகஸ்தியர் ஆகியோர் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள்.

கைலாசபதி வாரம் ஒரு தடவையாவது அவர்களையெல்லாம் வரவழைத்து கலந்துரையாடுவாராம். அவர்களின் வாசிப்பு அனுபவங்களை கேட்டுத் தெரிந்து கொள்வதுடன்,அவர்களிடம் வேலையும் வாங்குவாராம். இவ்வாறு Team Work இல் ஈடுபட்டவர்தான் கைலாசபதி.

அவரது அந்த அப்பழுக்கற்ற Team Work யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் தோன்றியபோதும் அவரிடத்தில் குடியிருந்தது.

1970 இற்குப் பின்னர் தோன்றிய இடதுசாரிகளும் அங்கம் வகித்த கூட்டரசாங்கத்தின் காலத்தில் 1972 ஜனவரி மாதம் 09 ஆம் திகதி கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் ஒன்றியத்தின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில், தமிழகத்திலிருந்து இலங்கைக்கு இறக்குமதியான தரமற்ற பல வணிக இதழ்களை கட்டுப்படுத்த வேண்டும் என்றிருந்தது.

அதற்கான கட்டுப்பாடும் வந்தது. அதனால், இலங்கையில் பல புதிய இலக்கிய சிற்றேடுகள் வெளிவந்தன. திரைபடக் கூட்டுத்தாபனம் தோன்றியது. பல ஈழத்து திரைப்படங்களின் உருவாக்கத்திற்கு அரச மானியம் கிடைத்தது.

கைலாபதி, தினகரனை விட்டு வெளியேறிய பின்னர் ஈழத்தில் 1972 இற்குப் பின்னர் எத்தனையே சிற்றிதழ்கள் வெளியாகின. அவற்றில் சிலவற்றில் தொடர்ந்தும் எழுதி அந்த இதழ்களின் உள்ளடக்கத்தின் தரத்தையும் அவர் உயர்த்தினார்.

அவரது இதழியல் பங்களிப்பு என்பது தினகரனுடன் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. அதற்கும் அப்பால், ஈழத்து தமிழ் சிற்றிதழிலும் அவருடை கருத்தாக்கம் வேரூன்றியிருந்தது.

மரகதம், மல்லிகை, புதுவசந்தம், புதுமை இலக்கியம், சமர், தாயகம் மற்றும் இடதுசாரி பத்திரிகைகளான தொழிலாளி, தேசாபிமானி, செம்பதாகை முதலனாவற்றிலும் கைலாசபதி தொடர்ந்து எழுதினார்.

ஜனமகன், அபேதன், அம்பலத்தான், உதயணன், அம்பலத்தாடி முதலான புனைபெயர்களில் கட்டுரைகளையும் பத்தி எழுத்துக்களையும் கைலாசபதி எழுதினார்.

சுவாமி ஞானப்பிரகாசர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், இளங்கீரன் உட்பட பலரைப் பற்றிய ஆக்கங்களையும் மல்லிகையில் எழுதியிருக்கிறார்.

1974 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மல்லிகை இதழில் அவர் எழுதிய 'முழுமை பெறும் இலக்கிய இயக்கம்' என்ற கட்டுரை, ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் செல்நெறியை துலக்கமாக பதிவுசெய்திருந்தது.

இவ்வாறு அவர் இதழ்களில் எழுதிய கனதியான ஆக்கங்களினாலும் குறிப்பிட்ட சிற்றிதழ்கள் தரத்தில் சிறந்திருந்தன. கைலாசபதியின் கருத்துக்களிலிருந்து முரண்பட்டவர்கள்கூட, அவர் தம்மைப் பற்றி எத்தகைய கண்ணோட்டம் கொண்டிருக்கிறார் என்பதை அறிவதில், ஆராய்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

பாரதி நூற்றாண்டு காலத்தில்தான் பேராசிரியர் கைலாசபதி கொழும்பு அரசினர் மருத்துவமனையில் 1982 டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி காலமானார்.

இன்றைய நவீன தொழில்நுட்ப மற்றும் கணினி, மின்னஞ்சல், முகநூல், டுவிட்டர் யுகத்தில் பல ஊடகங்கள் வெளியாகின்றன.

'டவுன்லோட் ஜேர்னலிஸம்' பெருகியிருக்கிறது. 'கட் அன்ட் பேஸ்ட்' மரபு உருவாகியிருக்கிறது. நபரின் உருவத்தை மாற்றி பதிவேற்றி போட்டோ ஷொப்பாக வைரலாக பரவவிடும் கலாசாரம் வளர்ந்திருக்கிறது. இந்த திருக்கூத்துக்களையெல்லாம் பார்க்காமல் எங்கள் கைலாஸ் மறைந்து விட்டார்.

தொடக்கத்தில் நான் குறிப்பிட்ட எனது பாட்டனார் தொ. மு. சி. ரகுநாதன் பற்றிய கட்டுரை மல்லிகையில் 1982 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் வெளியானது.

அதனை எழுதியவர் அவருடை நீண்டகால நண்பர் பேராசிரியர் கைலாசபதி. அதன் இறுதியில், 'பாரதி நூற்றாண்டு விழாக்கள் நடைபெறும் இவ்வாண்டில் சிறந்த பாரதி ஆய்வாளர் ஒருவரின் வருகை வரவேற்கத்தக்கது' என எழுதியிருந்தார். எனது பாட்டனார் ரகுநாதன் அந்தக் கட்டுரையைப் பார்த்தார்.

அது வெளிவந்து, ஐந்து மாதத்தில் கைலாஸ் விடைபெற்றார். எனது பாட்டனார், 1983 தொடக்கத்தில் தமிழகப் பேராசிரியர் எஸ். ராமகிருஷ்ணன் மற்றும் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனுடன் கொழும்பு வந்து, வெள்ளவத்தை 42 ஆம் ஒழுங்கையில் 29 ஆம் இலக்கத்தில் அமைந்திருந்த கைலாசபதியின் இல்லத்திற்கு வந்து அவரது துணைவியார் சர்வமங்களம் மற்றும் குழந்தைகள் சுமங்களா, பவித்ராவிடம் தனது ஆழ்ந்த துயரத்தை பகிர்ந்து கொண்டார்.

கைலாஸ் என்றும் எம்முடன் வாழ்கிறார் என்றே நினைக்கத் தோன்றுகின்றது.

(மூத்த எழுத்தாளர், ஊடகவியலாளர்
**லெ. முருகபூபதியின்**
பதிவுகளிலிருந்து)

# சுற்றுலாப் பயணிகளை வரவேற்க தயாராகின்றது அறுகம்பைக்குடா





'உல்லாசப் பயணிகளின் சொர்க்கம்' என வர்ணிக்கப்படும் இயற்கை வனப்புமிக்க பொத்துவில் அறுகம்பைக் குடாவுக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் இவ்வருடம் வருகை தரவுள்ளனர். இதற்கான விரிவான ஏற்பாடுகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன.

கடலலை நீர்ச்சறுக்கல் விளையாட்டுக்கு சர்வதேச ரீதியில் பெயர்பெற்று விளங்கும் அறுகம்பைக் குடாவுக்கு பிரதி வருடமும் எப்ரல் முதல் செப்டம்பர் வரை உலக நாடுகளின் உல்லாசப் பயணிகள் பெருமளவில் வருகை தருவது வழமையாகும். வழமை போன்று, இம்முறையும் உல்லாசப் பயணிகள் வருகை தரவுள்ளனர்.

அதிகளவான உல்லாசப் பயணிகள் பொத்துவில் உல்லை, அறுகம்பைக்குடா பிரதேசங்களுக்கு வருகை தரவுள்ளதாகவும், அதற்கான முன்பதிவுகள் இடம்பெற்றுள்ளதாகவும் தனியார் விடுதி உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிடம், உணவு உள்ளிட்ட முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதில் பிரதேசத்திலுள்ள தனியார் ஹோட்டல் உரிமையாளர்கள் மும்முரம் காட்டி வருகின்றனர். அதற்கான முன்னாயத்த வேலைகளில் அவர்கள் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

விடுதிகளின் விஸ்தரிப்பு, புனரமைப்புப் பணிகளில் அவர்கள் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள, பொத்துவில் அறுகம்பைக்குடா, மட்டக்களப்பு, பாசிக்குடா, திருகோணமலை நிலாவெளி கடற்கரைப் பிரதேசங்கள் சர்வதேச மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளால் பெரிதும் விரும்பப்படும் சுற்றுலாத் தலங்களாகும். குறித்த பிரதேசங்களுக்கு சர்வதேச உல்லாசப் பயணிகள் மாத்திரமன்றி, உள்ளூர் உல்லாசப் பயணிகளும் பெருமளவில் வருகை தந்து பொழுதுபோக்கி வருகின்றமை வழமையாகும்.

இலங்கைக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளை கொழும்பிலிருந்து கிழக்கு சுற்றுலாத் தலங்களுக்கு விமானம் மற்றும் ஹெலிகொப்டர் ஊடாக வான் வழியில் பயணிக்கும் ஏற்பாடுகளும் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த ஏற்பாடுகளை இலங்கை சுற்றுலா கைத்தொழில் மன்றத் தலைவர் ஏ.எம்.ஜௌபர் மேற்கொண்டிருந்தார்.

## இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

அண்மைக் காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளில் அதிகமானவர்கள் துவிச்சக்கர வண்டிச் சவாரி பயணத்தில் அதிகம் நாட்டம் காட்டி வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களுக்கிடையில் நீண்ட தூரப் பயணங்களை அவர்கள் துவிச்சக்கர வண்டியில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சுற்றுலா பருவகாலத்தை முன்னிட்டு திருகோணமலையிலுள்ள புறாமலை

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கோவிட்19 வைரஸ் பரவல் அசாதாரண நிலை காரணமாக, இலங்கைக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகள் தொகையில் கணிசமானளவு வீழ்ச்சியேற்பட்டிருந்தது. அது மாத்திரமன்றி, கிழக்கு உல்லாசப் பிரதேசங்கள் சோபையிழந்து, வெறிச்சோடிக் காணப்பட்டன.



உல்லாசப் பயணிகளின் வருகை பாதிப்படைந்ததைத் தொடர்ந்து உல்லாசப் பயணத்துறை போதிய வருமானமின்றி பெரும் சவால்களை எதிர்கொண்டது. நாட்டுக்கு கிடைக்கும் பெருந்தொகை அந்நியச் செலாவணியும் கிடைக்காமல் போனது.

இத்துறையில் ஈடுபட்டிருந்த பலர் தொழில்வாய்ப்பை இழந்திருந்தனர். உல்லாசப் பயண

ஹோட்டல்கள் தினசரி நிர்வாகச் செலவுகளுக்கேனும் போதியளவு வருமானமின்றி பெரும் பாதிப்பை எதிர்கொண்டன. உல்லாசப் பயணத்துறையுடன் இணைந்த இதர தொழில்துறையாளர்களும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அதுமாத்திரமன்றி, கடந்த 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்தும் உல்லாச பயணத்துறைக்கு பாரியளவு இழப்பேற்பட்டதை மறந்துவிட முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக சோபையிழந்த உல்லாசப் பயணத்துறை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நிலையிலேயே, கொவிட் 19 முடக்கம் ஆட்கொண்டது.

தற்பொழுது எதுவித பிரச்சினைகள், சிக்கல்கள் இன்றி உல்லாசப் பயணத்துறை சுதந்திரமாக இயங்கி வருகின்றமை நமக்கெல்லாம் மகிழ்ச்சியானதாகும்.

ஆ கையால், இலங்கையர் என்ற வகையில் உல்லாசப் பயணிகளை அன்புடன் வரவேற்பதற்கும், அவர்களுக்குத் தேவ்யான உதவி, ஒத்துழைப்பு, உபசரிப்பினை வழங்குவதற்கும் நாங்கள் ஒவ்வொருவரும் தயாராக வேண்டும்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மார்ச் 18 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் பங்குனி 05
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி






## தர்மத்தை ஊக்குவிக்கும் மார்க்கம்

இஸ்லாத்தில் தர்மம் செய்தல் பெரிதும் ஊக்குவிக்கப்படும் ஒரு காரியமாகும். என்றாலும் அது தனியே பணத்தால், பொருளால் பிறருக்கு வழங்கப்படுவது மாத்திரமல்ல, அதையும் தாண்டி நமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார, அறிவு, ஆன்மிக மற்றும் பண்பாட்டு வறுமையை நீக்க உழைப்பதும் மிகப் பெரும் தர்மமாகும். இது தொடர்பில் அல்லாஹ் அல் குர்ஆனில், 'இன்னும் நன்மையிலும், பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்.' (05:02) என்றும் 'அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள் (2:195) எனறும் குறிப்பிட்டுள்ளான். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஆதமின் மகனே! மற்றவர்களுக்காகச் செலவிடு. உனக்கு நான் செலவிடுவேன்' என்று அல்லாஹு தஆலா கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி) அபூ ஹுறைரா (ரழி) அவர்கள் அறிவித்திருப்பதாவது, 'அமல்களில் மிகச் சிறந்தது நீங்கள் உங்களது முஃமினான சகோதரரின் உள்ளத்தில் சந்தோஷத்தை ஏற்படுத்துவதாகும். அல்லது அவருடைய கடனை நிறைவேற்றுவதாகும் அல்லது அவருக்கு ரொட்டியை உணவாகக் கொடுப்பதாகும்' (ஆதாரம் தபரானி)

அந்தவகையில் இன்றைய சூழ்நிலையில் நம் நாட்டில் பலர் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதை நாம் அறிவோம். குறிப்பாக அன்றாடம் தொழில் செய்து வாழ்க்கை நடத்தியவர்கள் சிறு சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மற்றும் ஏழை எளியவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்ககள். ஆதலால், சங்கைமிகு ரமழானில் வசதி படைத்தவர்கள் சிரமத்திலுள்ளோர், ஏழைகள் மற்றும் ஸகாத் பெறத்தகுதியானோர்களுக்கு தங்களது ஸக்காத்தையும் ஸதகாக்களையும் உரிய முறையில் தாமாக முன்வந்து வழங்கி உதவுவோம். அல்லாஹ்வின் அருளைப் பெறுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

## காலநிலைக்கு ஏற்ப நீர்ப்பாசன விவசாய திட்டம் மேலும் நீடிப்பு

### 25 மில்.அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு

காலநிலைக்கு ஏற்ப நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தை (CSIAP Climate Smart Irrigated Agriculture Project) மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்காக 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் கீழ் வெளிநாட்டு நிதியில் இந்தத்திட்டப் பணி இந்த ஆண்டு நிறைவடைய இருந்த போதும் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

காலநிலையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதை இலக்காக்கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் அம்பாறை, வவுனியா, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, குருணாகல், போன்ற மாவட்டங்களில் சிறிய ஏரிகள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் அந்த பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான தொழில்நுட்பம் மற்றும் அறிவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் உபகரணங்களும் வழங்கப் படுகின்றன. இத் திட்டம் இவ்வருடத்தில் நிறைவடையவிருந்த போதிலும்,இதனை தொடர்ந்து இந்தவருடமும் நீடிப்பதற்காக விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவைக்கு ஆலோசனையை முன்வைத்தார். இத்திட்டத்தின் பணிகளை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க 25 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஜுல்பள்ளம் மற்றும் கவுந்திஸ்ஸபுர விவசாய தொழில் முனைவோர் கிராமங்களில் இளம் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதுதொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## தவக்கால சிந்தனை



### இரு பெண்கள் இரு வேறு தீர்ப்புகள்

அந்த நேரம் வரைக்கும் மறக்கப்பட்டிருந்த யூத கட்டளையின்படி சூசான்னா என்கிற பெண் சாவிற்குத் தீர்ப்பிடப்பட்ட போது , தானியேல் அவளைப் பாதுகாப்பதை இன்றைய முதலாம் வாசகத்தில் வாசிக்கின்றோம். தங்களது விருப்பத்திற்கு உடன்படாத சூசன்னாவை இரு கெட்ட மனிதர்கள் தங்களது பொய்யான கெட்ட குற்றச்சாட்டிற்கு உட்படுத்துகின்ற போது தானியேல் அவர்களிடமிருந்து அவளைப் பாதுகாக்கின்றார். நற்செய்தியில், மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் சட்டத்தை மேற்கோள் காண்பித்து விபசாரத்தில் பிடிபட்ட பெண் குற்றவாளியென வாதிடுகின்றனர். இத்தனைக்கும் மோசேயின் சட்டம் கூறுவது யாதெனில் விபசாரத்தில் ஈடுபட்ட இருவரும் தண்டிக்கப்பட வேண்டுமென்பதாகும். இங்கு இயேசுவின் எதிரிகளின் நோக்கமெல்லாம் அவரை ஓர் இறுக்கமான சூழ்நிலையில் தள்ளிவிட வேண்டுமென்பதே. அதாவது, மோசேயின் கட்டளைக்குப் பணிந்து அவரது செய்தியாகிய கடவுளின் இரக்கத்தை மீறுவதா? அல்லது மோசேயின் சட்டத்தை மீறி கட்டளையைக் கடைப்பிடிக்காதவர் என்கிற நிலைக்கு தள்ளப்படுவதா?

இயேசு நேரம் எடுத்து நிலத்தில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்தார் பின்னர் அப்பெண்ணை அழைத்த இயேசுவைச் சிக்க வைக்க எண்ணிய வன்மம் நிறைந்தவர்களைப் பார்த்து அவர் கூறியது 'உங்களுள் பாவம் இல்லாதவர் முதற்கல்லை அவள் மீது எறியட்டும்' என்று கூறிவிட்டு தொடர்ந்து நிலத்தில் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது அவர்கள் ஒருவர் பின் ஒருவராக அங்கிருந்து நகர்ந்து கொண்டிருந்தார்கள். இயேசுவும் அப்பெண் மாத்திரமே அங்கிருந்தார்கள். இயேசு நிமிர்ந்து பார்த்து அவளிடம், 'எங்கே அவர்கள்? யாரும் தீர்ப்பிடவில்லையா? நானும் தீர்ப்பிடேன். செல். மீண்டும் பாவம் செய்யாதே.' ஏன்று அனுப்பி வைத்தார். இக்கதைகள் அடுத்தவர்களை தீய முறையில் தீர்ப்பிடுவதனைக் குறித்து கற்பிப்பதோடு நமது வாழ்வில் இரக்கம், கருணை போன்றவற்றை பின்பற்றவும் அழைக்கிறது.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

## 16 விடயங்கள் அடங்கிய செயற்றிட்டம்; நடைமுறைப்படுத்த IMF இணக்கம்

### பொருளாதாரத்தை இயல்புநிலைக்கு கொண்டு வரமுடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை முழுமைப் படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்காக 16 விடயங்களைக் கொண்ட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் தீர்மானமொன்றுக்கு வந்துள்ளன.

governmentdiagnostic ஆட்சியின் வெளிப்படைத் தன்மை என்ற தொனிப் பொருளில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதி ஆளணி பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான சேமசிங்க மற்றும் மத்திய வங்கியின் முக்கியஸ்தர்கள் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளனர்.

முதற்கட்டமாக ஆரம்பத்தில் 14 விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை தரப்பினர் இதன்போது இணக்கப்பாடு தெரிவித்துள்ளதுடன் இரண்டு விடயங்களை படிப்படியாக நடைமுறைப் படுத்துவதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை சுங்கம், தேசிய வருமான வரித் திணைக்களம் ஆகியவற்றின் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்தும் திட்டங்களை முறையாக தயாரித்ததன் பின்னர் அந்த இரண்டு விடயங்களையும் முழுமைப் படுத்துவதை அரசாங்கம் இலக்காகக்கொண்டுள்ளது.

நடைமுறைப்படுத்தப்படும் விடயங்களில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை பலப்படுத்தல், அரச பொறி முறையை முறையாக முன்னெடுத்தல் ஆகியவையும் உள்ளடங்கும்.

## மட்டு. மாவட்டத்தில் காட்டு யானை தாக்குதலில் இருவர் உயிரிழப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தாக்கி இருவர் மரணமடைந்துள்ளனர். மட்டக்களப்பு, மாவட்டத்தில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவு ஈரளக்குளத்தில் நேற்று முன்தினம் இரவும் (16) கிரான் பிரதேச செயலக பிரிவு திகிலிவெட்டையில் நேற்று அதிகாலை (17) மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது. இரு வெவ்வேறு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் நடைபெற்ற மரணத்துக்கான மரண விசாரணைகளை, திடீர் மரண விசாரணை அதிகாரிகளான நஸீர், பவளகேசன் ஆகியோர் கரடியனாறு மற்றும் சந்திவெளி பொலிஸாருடன் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.


ஆவெட்டியாவெளியில் மாடு வளர்ப்பில் ஈடுபட்ட, சித்தாண்டியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான பத்மநாதன் மோகனதாஸ் (45) என்பவர் நேற்று மாலை உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று, பண்ணையை நோக்கி இரவு 09 மணியளவில் நடந்து செல்லும் போது ஈரளக்குளத்தில் வீதியோரமாக நின்ற யானையொன்றினால் தாக்குண்டு சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளார்.




## பேராதனையில் வாகன விபத்து ஒருவர் பலி ,37 பேர் படுகாயம்

### ஆபத்தான நிலையில் ஒருவர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பேராதனை பகுதியில் இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பேராதனை கொப்பேகடுவ சந்தியில் யஹலதன்ன பிரதேசத்திலேயே நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் நெல்லிகலை சர்வதேச பௌத்த மத்திய நிலையத்துக்கு வழிபாடு செய்வதற்காக வந்த 38 பேர் பயணித்த பஸ் வண்டியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சாரதி உட்பட 37 பேர் காயமடைந்துள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ள பொலிசார் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் நெல்லிகலையிலிருந்து பூண்டுலோயா நோக்கி பயணித்த போதே கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சாரதியால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் சுமார் 15 மீற்றர் சரிவான வீதியில் பஸ் சறுக்கிச் சென்று மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் விபத்தில் காயமடைந்தவர்கள் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹல்பொல, பூண்டுலோயா பகுதியைச் சேர்ந்த 79 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்ததாகவும் அத்துடன் காயமடைந்தவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கிளிநொச்சியில் தனிநபர் எதிர்ப்பு



தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கிளிநொச்சி நகரில் நபர் ஒருவர் தனித்து நின்று போராட்டமொன்றை நடத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி) மாநாட்டை எதிர்த்தே தனிநபர் ஒருவர் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

இப் போராட்டம் நேற்று முன்தினம் (16) கிளிநொச்சியில் தேசிய மக்கள் சக்தியின் மாநாடு நடைபெற்ற மண்டபத்துக்கு எதிரே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர் ஏந்தியுள்ள பதாதைகளில் 'இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றம் வரை சென்று பிரித்த பெருமை ஜேவிபியையே சாரும்' மற்றும் 'சொந்த இனத்தையே அழித்த ஜேவிபி எங்கள் இனத்துக்கு எவ்வாறு தீர்வு தரும்' போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராஜ் என்பவரே இவ்வாறு தனி நபர் எதிர்ப்பு போராட்டத்தை வெளியிட்டிருந்தார்.மக்கள் சந்திப்பு இடம் பெற்ற பகுதியை அண்மித்து A9 வீதியில் இவ்வாறு அவர் பதாதைகளை கட்டி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் திட்டம்; விண்ணப்பங்களை ஏற்கும் காலம் ஏப்ரல் 01 ஆம் திகதி வரை நீடிப்பு

ஜனாதிபதி புலமைப்பரிசில் 2024/2025 திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் ஏப்ரல் 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பொருளாதார சிரமங்களுக்கு மத்தியில் தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் ஜனாதிபதி நிதியத்தினால் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஜனாதிபதி கல்விப் புலமைப்பரிசில் 2024/2025 திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பில் பலரது வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கல்விப் புலமைப்பரிசில் திட்டம் தொடர்பில் அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகவும் சகல அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த புலமைப் பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பெற்றோர்கள் உரிய விசாரணைகளை மேற்கொண்டு விண்ணப்பப் படிவத்தை பாடசாலை அதிபரிடம் கையளிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

மேலும், கல்வி அமைச்சின் செயலாளரினால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த பாடசாலைக்கு எத்தனை புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் பிராந்திய கல்விப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டு வலயத்திலுள்ள அதிபர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி, அனைத்துப் பாடசாலைகளிலும் அதிபர்கள் தேர்வுக் குழுவை நியமித்து, 01.04.2024க்குப் பிறகு தங்கள் பாடசாலைக்குக் கிடைக்கும் புலமைப் பரிசில்களின் அளவுக்கேற்ப புலமைப்பரிசில் பெறுவோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பாடசாலைகளால் தெரிவு செய்யப்படும் தகுதியான புலமைப்பரிசில் பெறுவோரின் பட்டியல், விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை கல்வி அமைச்சு ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பிய பின்னர், இந்தப் புலமைப் பரிசில் தொகைகள் 2024 ஏப்ரல் முதல் அடுத்த 12 மாதங்களுக்கு வழங்கப்படும்.

இலங்கையிலுள்ள 10,126 பாடசாலைகளை உள்ளடக்கி, முதலாம் தரம் முதல் 11ம் தரம் வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் (1,00,000) மாணவர்களுக்கான இந்த கல்வி உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், முழுத் திட்டத்திற்கும் ஜனாதிபதி நிதியத்தினால் 360 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட புலமைப் பரிசில் தகுதியாளர்களுக்கு அது பற்றி அறிவித்த பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர் தனது கூட்டுக் கணக்கொன்றை இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் ஆரம்பிக்க வேண்டும். குறித்த வைப்புத் தொகை உரிய வகையில் குறித்த வங்கியினால் மாணவரின் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

அதன்படி, புலமைப் பரிசில் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அதிபரினால் புலமைப்பரிசில் பெற்றவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி வங்கி முகாமையாளருக்கு கடிதமொன்றை வழங்குவார். உதவித்தொகை பெறத் தகுதியான மாணவர் தனது தாய் / தந்தை / பாதுகாவலருடன் அந்தந்த வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களைச் சந்தித்து அறிவுறுத்தலின்படி வங்கிக் கணக்கைத் திறந்து வங்கிக் கணக்கு தொடர்பான தகவல்களை அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கமான www.facebook.com/president.fund மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## போலியான குற்றச்சாட்டுக்கள்

# விஜித ஹேரத் MP க்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

### ரோஹித அபேகுணவர்தன



போலியான குற்றச்சாட்டுக்களை தன் மீது முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

போலியான குற்றச்சாட்டுக்களினால் தனது அரசியல் பயணத்தை பலவீனப்படுத்த முடியாதென்றும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், 'ஊழல் மோசடிக்கு எதிராக செயற்படுவதாக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் குறிப்பிடுகிறது. ஆனால் உண்மையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.ஊழல் மோசடிகளை வெளிக்கொண்டு வரும் கோப் குழுவின் தலைவர் பதவிக்கு திருடர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்' என்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தின் இந்தக் குற்றச்சாட்டை மேற்கோள்காட்டி கோப் குழுவின் தலைவர் ரோஹித அபேகுணவர்தன கடந்த சனிக்கிழமை (16) கொழும்பில் ஊடக சந்திப்பை நடத்தியபோது, "கோப் குழுவின் தலைவராக நான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டேன்.இந்த நியமனம் தொடர்பில் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் என்னை திருடன் என்று விமர்சித்துள்ளார்.எதை திருடினேன்,எங்கு திருடினேன் என்பதை அவர் ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்.ஆகவே இவரது பொய்யான குற்றச்சாட்டுக்கு எதிராக அடுத்த வாரம் சட்ட நடவடிக்கை எடுப்பேன்."

"போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும்,வெறுப்புக்களை தூண்டி விடுவதும் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சிக் கொள்கையாக காணப்படுகிறது. பொய்யான குற்றச்சாட்டுக்களினால் எனது அரசியல் பயணத்தை பலவீனப்படுத்த முடியாது. எமது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சின்னம் தாமரை. அந்த தாமரை சேற்றில் தான் மலர்கிறது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

# இந்திய வீடமைப்பு திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும்

## கேள்விகளை கண்டு எவரும் பதட்டமடையத் தேவையில்லை என்கிறார் மனோ கணேசன்



ஒரு வீடு, ரூபா இரு பத்துஎட்டு இலட்சம் என்ற மதிப்பீட்டுடன், 1,300 வீடுகளை கட்டும் நான்காம் கட்ட பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய வீடமைப்பு வேலை திட்ட பணிகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் நன்கொடை உதவியுடனான இந்தத் திட்டம் தொடர்பில் இந்திய அரசுக்கு நன்றி கூறி, வீடு கட்டும் பணிகளை நாம் வரவேற்கிறோம். அதேவேளை இந்த திட்ட நடைமுறையில் முழுமையான வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும்.

பெருந்தோட்டங்களில் இந்திய உதவியுடான தனி வீடுகள் கட்டும் திட்டத்தை, 2015,2019 ஆண்டு கால நல்லாட்சியின் பங்காளிகளாக இருந்த போது நாம் ஆரம்பித்து வைத்தோம். எமது காலப் பகுதியில் நடைபெற்ற இந்த வீடு கட்டும் பணிகளில், யூஎன்ஹெபிடாட் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித வாழ்விடத் திட்டம் , இலங்கை செஞ்சிலுவை சங்கம், சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் ஆகிய நம்பகத் தன்மை கொண்ட அரசுசார்பற்ற நிறுவனங்கள் கட்டுமான பணிகளை நடைமுறைப்படுத்தலையும், கண்காணிப்பு ஆகிய பொறுப்புகளையும் சிறப்பாக செய்தன.

பணிகளை கூட்டிணைக்கும் பொறுப்பை மாத்திரமே எமது புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு செய்தது. இதனால், இந்திய உதவியுடனான பெருந்தோட்ட வீடமைப்பு திட்டத்தில் முழுமையான வெளிப்படைத் தன்மை அன்று இருந்தது.

இன்று இந்த அரசுசார்பற்ற நிறுவனங்கள் இந்த பொறுப்புகளில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளன. ஆகவே வெளிப்படைத் தன்மை தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன. எமது கேள்விகளை கண்டு எவரும் பதட்டமடைய தேவையில்லை. நாம் நியாயமான கேள்விகளைதான் எழுப்புகிறோம்.

அவற்றுக்கு பொறுப்பில் உள்ளவர்கள் பதில் கூறக் கடமைபட்டுள்ளார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.




மட்டக்குளி, பேர்கியூசன் வீதி, ஸ்ரீபத்ரகாளியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி பூஜையின் போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## அமைச்சர் பந்துலவின்...

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரின் எண்ணக் கருவில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி பொதுத் தராதர உயர்தர மாணவர்களின் இரண்டு வருடத்துக்கான புலமைப் பரிசில் வழங்கும் வேலைத் திட்டமும் நாட்டின் சினிமா கலைஞர்களை பாராட்டும் 'சதராவ தீபனீ' நன்றி பாராட்டு நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள கல்வி பொது தராத உயர்தர தொழில்நுட்ப மாணவர்களில் 250 பேருக்கு ஒரு மாதத்துக்கு 2,000 ரூபா என்ற வகையில் இரண்டு வருடங்களுக்கு 'பிரக்ஞா பந்து' புலமைப் பரிசில் நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டது. இந்த புலமைப் பரிசில்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் மாணவர்களுக்கு வழங்கி வைத்தனர்.

திரைப்பட கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வில் தேசிய விருதுகளைப் பெற்ற திரைப்படங்களில் விசேடமாக தமது பங்களிப்பை வழங்கியுள்ள நடிகை மாலினி பொன்சேக்கா, சுவர்ணா மல்லவாரச்சி, அனோஜா வீரசிங்க, ரவீந்திர ரந்தெனிய போன்ற பிரபல திரைப்பட நடிகர், நடிகைகளுக்கு 'சதராவ தீபனீ' விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.'

இந்த விருதுகளை பிரதமர் தினேஷ் குணவர்த்தன வழங்கி வைத்தார். கலாநிதி பிரனீத் அபேசுந்தரவினால் விழாவில் சிப்புரை நடத்தப்பட்டதுடன் தேசிய சம்பிரதாயத்தை பிரதிபலிக்கும் வகையில் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளின் உயரஸ்தானியர்கள் இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டதுடன் அமைச்சின் செயலாளர்கள் உட்பட உயர் அரச அதிகாரிகளும் விழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

(18.032024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல்நிலைகள் சிறுசிறு கோளாறுகளை ஏற்படும். கடன் சுமையை குறைக்க வழி தேடுவீர்கள். பங்கு சந்தை வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும்.

**ரிஷபம் :** குடும்பத்தில் கலகலப்புக்கு குறைவிருக்காது சுப நிகழ்ச்சி ஒன்று திடீரென முடிவாகி உறவுகளுடன் இணைய வழிவகுக்கும்.

**மிதுனம்:** மாணவர்கள் கல்வியில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டிய காலகட்டம் இதுவாகும். வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவர்.

**கடகம்:** பிரிந்து சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவார்கள். இல்லத்தில் சுப காரியம் நடைபெற வழி வகுக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**சிம்மம்:** பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. எதிர் பாராத இடமாற்றம் பதவி உயர்வு உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கக்கூடும்.

**கன்னி:** பெண்கள் உடல் நலத்தில் அக்கறை செலுத்த வேண்டும். குடும்பத்தில் குதூகலம் கூடும். தொல்லைகளும் நன்மைகளும் கலந்தே காணப்படும்.

**துலாம்:** பிள்ளைகளை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். தடைப்பட்டு வந்த பாகப்பிரிவினை முடிவுக்கு வரும். பங்குச்சந்தையில் முதலீட்டை தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** பிரிந்து சென்ற உறவினர் உங்களை தேடி வரக்கூடும். சுபகாரியம் முடிவாகும். பங்குச்சந்தை வியாபாரம் ஓரளவு லாபம் தரும்.

**தனுசு:** பொருளாதார நிலை கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி இடையே இனிமையான சூழ்நிலை நிலவும்.

**மகரம்:** சகோதர வழியில் கவலை ஏற்படும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்தே செல்லுங்கள். குடும்பத்துடன் ஆன்மீகப் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** ஆலய தரிசனம் செய்யும் பாக்கியம் பெறுவீர்கள். பங்குச் சந்தையில் அன்றாட நிலவரங்களை கவனித்து வந்தால் லாபத்தை ஈட்ட முடியும்.

**மீனம்:** குடும்பத்தில் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு மறையும். சகோதரர்களில் மனக்கசப்பு ஏற்பட்டு விலகும். ஆன்மீகப் பயணம் அமைதி தரும்.

## பிரபுக்கள் பாதுகாப்புச் சேவையில்...

பாதுகாப்பை விலக்கிக் கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத நிலையில் சுமார் 5,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவ்வாறு பிரபுக்களின் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாத போதும் அரசியல்வாதிகள் மற்றும் பல்வேறு நிலைகளில் உள்ள பிரபுக்கள் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்து விரைவில் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் டிரான் அலஸ் அரச புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இவ்வாறு பொலிசார் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் நாட்டின் வழமையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு கடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இல்ல விளையாட்டுப் போட்டிகளை...

கவனத்திற் கொள்ளாது பல பாடசாலைகள் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளமை தொடர்பில் தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்த வகையில் தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறையின் பின்னரும் முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் தொடரும் என்பதால், அந்த சந்தர்ப்பத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும் என்றும் அமைச்சர் வலியுத்தியுள்ளார்.

அதேவேளை, நேற்று நாட்டின் பல பகுதிகளில் வெப்பமானது எச்சரிக்கை மட்டத்தில் காணப்பட்டதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வடமேல், வடமத்திய, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களிலும் மொனராகலை, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில பிரதேசங்களில் 39 45 செல்சியஸ் வரை வெப்பநிலை நீடிக்கும் என்றும் அந்த திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை நாட்டின் சில பிரதேசங்களில் இன்று குறிப்பிடத்தக்களவு உஷ்ண நிலை அதிகமாகக் காணப்படுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. போதியளவு நீரை அருந்துதல், முடிந்தளவு நிழலான இடங்களில் ஓய்வெடுப்பது, வெளியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளை பின்பற்றவேண்டுமென்றும் அந்தத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## தமிழக முதல்வர்...

இன்று அல்லது நாளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கிடைக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. தமிழக முதலமைச்சரை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு வருமாறு பாண்டிச்சேரி கடற்றொழில் மற்றும் மீனவர் நலன் கே.லக்ஷ்மி நாராயணன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கு அவசர அழைப்பு ஒன்றையும் விடுத்துள்ளார்.

எனினும் தமிழக அரசின் உத்தியோக பூர்வமான அழைப்புக்காக காத்திருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ், இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்து வருகின்றமை தொடர்பில் ஆழமான கரிசனைகளைக் செலுத்தி இந்த விவகாரத்துக்கு தீர்வொன்றைப்பெறவேண்டும்என்பதை வலியுறுத்தி பாண்டிச்சேரி அமைச்சர் லக்ஷ்மி நாராணயன் எனக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளாரென்றும் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் அவர், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் தலைமையில் இந்தவிடயம் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு அவசரமாக எதிர்ப்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் தமிழக அரசின் தரப்பினரும் என்னுடன் முதல்வருடனான சந்திப்பு தொடர்பில் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். தமிழக முதல்வரின் உத்தியோக பூர்வமான அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை. அதற்காக நான் காத்திருக்கின்றேன் என்றும் தெரிவித்தார். தமிழக முதல்வருடனான சந்திப்பின் போது, இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதையும், இழுவை மடிப்படகுகள் பயன்பாட்டை தவிர்ப்பதையும் வெளிப்படையாகவே எடுத்துக்கூறுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

# சமாதான நீதவான்களாக பெண்களை நியமிக்க எமது கட்சி நடவடிக்கை எடுக்கும்

## மகளிர் தின நிகழ்வில் இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு





**நுவரெலிய தினகரன் நிருபர்**

எதிர்வரும் காலத்தில் சமாதான நீதவான்களாக பெண்களை நியமனம் செய்வதற்கு மலையக மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஏனெனில் அவர்களுக்கு கொடுக்கின்ற ஒரு கௌரவமாக நாம் கருதுகின்றோம். இது தொடர்பாக நாம் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவிடம் கலந்துரையாடியுள்ளோம். அதனை அவரும் ஏற்றுக் கொண்டுள்ளார் என மலையக மக்கள் முன்னணி தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு எங்களுடைய பெண்கள் கடந்த 200 வருடங்களாக பங்களிப்பு செய்து வந்தாலும் அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும். எதிர்காலத்தில் இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின நிகழ்வு நேற்று (17) இராகலை நகரில் ஜெமினி மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் கட்சியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

சுர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாற்றத்தை நோக்கிய மலையகம் எனும் தொனிப் பொருளில் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.மகளிர் தினத்தில் விசேட பேச்சாளராக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி பேகம் ரஹ்மான் கலந்து கொண்டார். கட்சியின் கவுன்சில் உறுப்பினர்கள், மத்திய குழு தொழிற்சங்க நிர்வாக குழு உறுப்பினர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# தெமட்டகொடை கைரியாவில் அடிக்கல் நாட்டு விழா



**ருசைக் பாரூக்**

கொழும்பு, தெமட்டகொடை கைரிய்யா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் துபாய், சயீடா பௌண்டேசனின் நிதியுதவியில் சுமார் 11 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்கு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று (17) கல்லூரி அதிபர் ஜனாபா ஏ.எல். எஸ். நஸீரா ஹஸனார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌஸி கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் ரிஸ்வி முப்தி, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரிஷாட் பதியுத்தீன், சயீடா இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# இந்திய பாராளுமன்ற தேர்தல் ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பம்



## 07 கட்டங்களாக வாக்களிப்பு

இந்திய பாராளுமன்றத் தேர்தலின் வாக்களிப்பு ஏப்ரல் மாதம் ஆரம்பமாவதாக இந்திய தலைமை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இத் தேர்தல் 07 கட்டங்களாக நடைபெறவுள்ளதுடன் ஜூன் 04ஆம் திகதி வாக்குகள் எண்ணப்படுமென்றும் தலைமைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்களிப்பு நடத்தப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் 18 ஆவது பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு ஏப்ரல் 19ஆம் 26ஆம் திகதிகளிலும், மே மாதம் 07ஆம்,13ஆம் 20 ஆம் 25ஆம் மற்றும் ஜூன் மாதம் முதலாம் ஆகிய திகதிகளிலும் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி நடத்தப்படும் முதல் கட்ட வாக்குப்பதிவின்போது தமிழ்நாடு உட்பட 21 மாநிலங்களைச் சேர்ந்த 102 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்படும். அன்றைய தினம் தமிழ்நாட்டின் 39, புதுச்சேரியின் ஒரு தொகுதிக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடத்தப்படும் என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஏப்ரல் 26ஆம் திகதி இரண்டாம் கட்டத் தேர்தலில் 89 தொகுதிகளிலும் மே 07ஆம் திகதி 03 ஆம் கட்ட தேர்தலில் 94 தொகுதிகளிலும், மே 13ஆம் திகதி 04ஆம் கட்ட தேர்தலில் 96 தொகுதிகளிலும், மே 20 ஆம் திகதி 5ஆம் கட்ட தேர்தலில் 49 தொகுதிகளிலும், மே 25 ஆம் திகதி 06 ஆம் கட்ட தேர்தலில் 57தொகுதிகளிலும், ஜூன் 01ஆம் திகதி 57 தொகுதிகளிலும் வாக்களிப்பு நடத்தப்படவுள்ளன.

# பண்டிகைக் காலம் காரணமாக வேலைவாய்ப்பு வீதம் அதிகரிப்பு

## மத்திய வங்கி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பண்டிகை காலத்தையிட்டு நாட்டில் வேலை வாய்ப்பு வீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. பண்டிகைக் காலத்தில் புதிதாக ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 48. 5 வீதமாக காணப்பட்ட வேலை வாய்ப்பு பெப்ரவரி மாதத்தில் 51 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் சேவைகளுக்கான கொள்வனவாளர் முகாமைத்துவ சுட்டெண் 53 புள்ளிகளாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கேக், பாண் விற்பனை 40 வீதத்தால் வீழ்ச்சி

## பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பேக்கரி உற்பத்தி பொருட்களான கேக் வகைகள் மற்றும் பாண் ஆகியவற்றின் விற்பனை 40 வீதத்தால் வீழ்ச்சி யடைந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவிக்கையில், பாண் மற்றும் கேக் வகைகள் மட்டுமின்றி ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விற்பனையும் 25 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பேக்கரி உற்பத்தி உணவுப் பொருட்களுக்கு உபயோகப்படுத்தும் மூலப்பொருட்களின் விலைகள் கடந்த காலங்களில் அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கு இணையாக பாண்,கேக் வகைகள் உள்ளிட்ட ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டது.

இந்த விலை அதிகரிப்பு காரணமாகவே பேக்கரி உற்பத்தி உணவுப் பொருட்களின் கேள்வியும் குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.






# மானுடவியல்



உடனே, அவயவத்திலே யாதொரு சேட்டையுமின்றி, வாதனையினாலே திருக்கரங்கள் சிரத்தின் மேலேறிக் குவிய, உரோமாஞ் சங்கொள்ள, நாத்தழும்ப, விழிநீர்த்தாரை கொள்ள, சிவானந்தசாகரத்தில் அமிழ்ந்தி நின்று, "கற்றாங்கெரி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்பு திருமாளிகையை வலஞ்செய்து புறப்பட்டு, திருமுன்றிலிலே நமஸ்கரித்து எழுந்து, கோபுரவாயிலைக் கடந்து பணிந்து, நான்கு திருவீதிகளையுந் தொழுது, அங்கே எழுந்தருயிருத்தற்கு அஞ்சி, திருவேட்களத்தை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடிக் கொண்டு அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார். அங்கெ

ளி

157

முந்தருளியிருந்து கொண்டே, சிதம்பரத்துக்கும் வந்து சபாநாயகரைத் தரிசிப்பார். அப்படியிருக்கு நாளிலே, திருக்கழிப்பாலைக்குப் போய், சுவாமி தரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடினார். அவர் பாடுந் திருப்பதிகவிசைகளை யாழ்ப்பாணரும் யாழிலிட்டு வாசிப்பாராயினார். ஒருநாள் பிள்ளையார் திருவேட்களத்தைக் கடந்து சிதம்பரத்தை அடைந்த பொழுது, சபாநாயகருடைய திருவருளினாலே தில்லை வாழந்தணர் மூவாயிரரும் சிவகணநாதராய்த் தோன்றக் கண்டு, அத்தன்மையைத் திருநீலகண்டப் பெரும்பாணருக்குங் காட்டினார். தில்லைவாழந்தணர்கள் பிள்ளையாரைக் கண்டவுடனே வணங்க; பிள்ளையார் அவர்கள் வணங்குமுன் தாமும் வணங்கி, திருக்கோயிலிற் பிரவேசித்து, சபாநாயகரை வணங்கி "ஆடினாய் நறுநெய்யோடு பாறயிர்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தத் திருப்பதிகத்திலே "நீலத்தார் கரியமிடற்றார்" என்னுந் திருப்பாட்டிலே தில்லைவாழந்தணரைத் தாங்கண்டபடி கூறி, அவர்கள் "தொழு தேத்து சிற்றம்பலம்" என்று அருளிச் செய்தார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தெய்வீக திருமணங்கள் நிகழ்ந்த பங்குனி

பங்குனி மாதத்தில் சூரியன் மீன ராசியில் பயணம் செய்வதால் மீன மாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தில் தான் இலைகளை உதிர்த்த தாவரங்கள் தளிர்க்க ஆரம்பித்து பசுமையாக மாறுகிறது. இது வசந்த காலத்தின் தொடக்கமாக உள்ளது. சிவபெருமான் பார்வதியை கைத்தலம் பற்றிய மாதம் என்ற சிறப்பை பெறுகிறது பங்குனி. தெய்வீக திருமணங்கள் நடைபெறும் இந்த மாதத்தில் பல திருவிழாக்கள் நடைபெற உள்ளன.



புராணங்களில் சொல்லப்பட்டு இருக்கின்ற சகல மங்கல காரியங்களும் பங்குனி மாதத்தில் தான் நடந்திருக்கின்றன என்று ஆன்மீக ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். இந்த மாதத்தில் அன்னதானம், வஸ்திரதானம் மட்டுமல்லாமல் சின்ன சின்ன தானங்கள் செய்தால் கூட ஆயிரம் பசுக்களை தானம் செய்ததற்கு ஈடாகும் என்று ஞானிகள் சிலாகித்துக் கூறுகிறார்கள்.

பங்குனி மாதத்தில் உத்திரம் நட்சத்திர காலத்தில் விரதமிருந்து முருகப்பெருமானை மனம் உருக வேண்டினால் திருமணம் நடைபெறாமல் ஏக்கத்தோடு இருக்கின்ற அனைவருக்கும் அந்தப் பாக்கியம் சித்திக்கும் என்று புராணம் கூறுகிறது. பங்குனி மாதத்தில் வருகின்ற தேய்பிறை ஏகாதசிக்கு விஜயா ஏகாதசி என்று பெயர். அன்று விரதம் இருந்து இறைவனை வழிபட்டால் எடுத்த காரியம் தடையில்லாமல் நடக்கும். எதிரிகளை வெற்றி கொள்ளலாம். மேலும் பொருளாதார முன்னேற்றம் அபாரமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ராவணன் சீதையை சிறை எடுத்து சென்று விட்டார். எப்படி மீட்டு வருவது என்று ராமர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அப்பொழுது அங்கே வந்த ஒரு முனிவர் இந்த விஜயா ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். அதன்படி விரதம் இருந்து தான் சீதையை ராமர் மீட்டு வந்தார் என்று ஏகாதசி விரத மகாத்மியம் தெரிவிக்கிறது.

பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் சிவன் பார்வதி, முருகன்தெய்வயானை, ராமர் சீதை, ஆண்டாள் ரங்க மன்னார் போன்ற தெய்வங்களின் திருமணங்கள் நடந்ததாக புராணங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் அர்ஜூனன் மகாலட்சுமி ஆகியோர் இந்த நாளில் தான் அவதரித்திருக்கிறார்கள். இந்த நாளில் மேற்கொள்ளப்படும் விரதம் கல்யாண விரதம் என்று அழைக்கப்படுகிறது.






கண்டி நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் அண்மையில் இடம்பெற்ற கொடியேற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19906) முருகன் அழித்த ஆறு பகைவர்கள் யார்?**
ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.

**19907) முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் எத்தனை?**
மூன்றாகும்.

**19908) சூரபத்மனை வதம் செய்தது எங்கே?**
திருச்செந்தூர்

**19909) தாரகாசுரனை வதம் செய்தது எங்கே?**
திருப்பரங்குன்றம்

**19910) இந்த இருவரின் சகோதரன் யார்?**
சிங்க முகாசுரனை

**19911) சிங்க முகாசுரனை வதம் செய்தது எங்கே?**
போரூர்.

**19912) முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் என்னென்ன இருக்கும்?**
அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல்

**19913) முருகப்பெருமானின் இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் என்னென்ன இருக்கும்?** கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில்

**19914) சிலம்பன் என்ற பெயர் யாருக்குரியது?**
முருகனுக்கு

**19915) முருகனுக்கு சிலம்பன் என்ற பெயர் ஏன் வந்தது?**
மலைகளில் குடி கொண்டுள்ளதால்

**19916) விசாகன் என்ற பெயர் யாருக்குரியது?**
முருகனுக்கு

**19917) முருகனுக்கு விசாகன் என்ற பெயர் ஏன் வந்தது?**
மயிலில் சஞ்சரிப்பவன் என்பதால்

**19918) முருகனிடம் எந்த கொடி இருக்கிறது?**
கோழிக் கொடி

**19919) குக்குடம் என்று அழைப்பது எதனை?**
முருகனின் கோழிக் கொடியை

**19920) இந்தக் கோழி எதை உணர்த்துகிறது?**
வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.

**19921) முருகனை எத்தனை முறை வலம் வருதல் வேண்டும்?**
ஒரு முறை


**19922)முருகப் பெருமானை வணங்க உகந்த நாட்கள் எவை?**
சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய், ஆகிய இவை அனைத்துமே

**19923)காங்கேயன் என்று அழைப்பது யாரை?**
முருகனை

**19924)முருகனை காங்கேயன் என்று அழைப்பது ஏன்?**
கங்கையால் தாங்கப்பட்டதால்

**19925)முருகன் ஏன் கந்தன் என்று பெயர் கொண்டான்?**
சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால்

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 80



அனுபவமும் ஞானத்தை பெறுவதற்கான வழியே. உலக வாழ்க்கையை உற்று நோக்கி பார்த்தால். இதை நாம் உணர முடியும். பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதேபோல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். இம்முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும்.

எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு.

எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வசக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.

# ஸ்ரீ சக்கரம்

பலருக்கும் ஒரு சந்தேகம் உண்டு. ஸ்ரீ சக்கரமும், ஸ்ரீ மஹா மேரு எனப்படும் யந்திரமும் ஒன்றேதானா இல்லை வெவ்வேறானவையா என்பதே அந்த சந்தேகம். உண்மை என்ன என்றால் இரண்டுமே ஒன்றுதான். ஸ்ரீ மஹா மேருவின் சமதளப்படுத்தப்பட்ட வடிவமே ஸ்ரீ சக்கரம் என்பதாகும். ஸ்ரீ சக்கர யந்திரத்தை கோடுகளாக வரைந்தால் அது ஸ்ரீ சக்ரம் எனவும் அதற்கு மலை போன்ற அடுக்கடுக்கான நிலையிலான முப்பரிமாண உருவ வடிவம் கொடுத்தால் அது ஸ்ரீ மஹா மேரு எனவும் கூறப்படும். பார்வைக்கு சாதாரணக் கோடுகளும் முக்கோணங்களுமாகத் தெரியும் ஸ்ரீசக்கரம் ஆதிபராசக்தியின் இருப்பிடம் மட்டுமல்ல, சர்வசக்தியும் இதில் அடக்கம் என்பதே இதன் மகிமை.

பண்டாஸுர வதத்திற்குப் பிறகு ஸ்ரீபுரம் என்னும் நகரத்தில் அவளுடைய அரண்மனையில் எல்லா தேவதைகளும் சூழ்ந்திருக்க தன்னுடைய கணவர் காமேஸ்வரருடன் லலிதாம்பிகை வீற்று இருக்கையில் ஒரு சிறிய விஷயத்திற்காக உக்கிரம் அடைந்த தேவியின் முகத்தில் இருந்து வாசினிகள் என்ற தேவதைகள் வெளிவந்து அவள் முன் நின்றபோது அந்த தேவதைகளை நோக்கி தான் யார், தன் சக்தி எப்படிப்பட்டது என்பதை அனைவருக்கும் கூறுமாறு தேவி கூற அதன்படி வசினி உட்பட எட்டு வாக்கு தேவதைகள் மிக ரகசியமான மந்த்ரமாக ஆயிரம் நாமங்களைக் கொண்ட 'லலிதா சகஸ்ரநாமம்' ஸ்லோகத்தினை உருவாக்கினர். அம்பிகையானவளின் உக்கிரத்தைத் தணிக்க சர்வேஸ்வரன் அந்த உக்கிரக் கலையையே ஸ்ரீசக்கரமாக ஸ்தாபித்து, ஆகர்ஷித்து அம்பிகைக்கு எதிரில் வைத்து அவளை சாந்தப்படுத்த, பார்வதி தேவி, அன்னை லலிதாம்பிகையாக உருமாறி உலகிற்கு காட்சி தந்தாள்.



(தொடரும்)



கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர் ஆலய வருடாந்த மஹோற்சவ கொடியேற்ற வைபவம் ஆலய பிரதம தர்மகர்த்தா டி. எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. சிவஸ்ரீ கண்ணன் குருக்கள் கிரியைகளை நடத்திவைத்து கொடியேற்றி வைப்பதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம். மாதுமையம்பாள் சமேத பொன்னம்பலவாணேஸ்வர், விநாயகர், முருகப்பெருமான் சண்டேஸ்வரர் வீதியுலா வருவதையும் கற்பூரச்சட்டி ஏந்திய பக்தர்களையும் காணலாம். (படப்பிடிப்பு எஸ்.எம். சுரேந்திரன்)

### வடக்கு ரயில் பாதை புனரமைப்பு

# இராஜாங்க அமைச்சர் செஹான் தலைமையில் விசேட கூட்டம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இந்திய அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் கீழ் தற்போது புனரமைக்கப்பட்டுவரும் வடக்கு ரயில் பாதை தொடர்பான விசேட கலந்துரையாடல் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தலைமையில் அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ரயில்வே திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் உள்ளிட்ட திணைக்களத்தின் உயர் அதிகாரிகளும் வடக்கு ரயில் பாதை புனரமைப்பு பணியுடன் தொடர்புடைய சகல தரப்பினரும் இந்திய நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.



ஒவ்வொரு தரப்பினரும் அங்கு காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தமது கருத்துக்களை முன் வைத்தனர். பிரச்சினைகளுக்கான தீர்வை காணும் நோக்கில் சகல தரப்பினரையும் இணைக்கும் வகையில் ஒருங்கிணைப்பு குழுவொன்றை ஏற்படுத்தி தற்போது காணப்படும் விரைவாக தீர்வைக் காண வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதன்போது தெரிவித்தார்.

வடக்கு ரயில் பாதை புனரமைப்பு பணிகள் தற்சமயம் நிறைவடையும் தருவாயில் காணப்படுவதுடன் இவ் வருடத்தின் நடுப்பகுதியில் அதனை நிறைவு செய்யமுடியுமென இதன் போது தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி)சந்தியா என்.ஜீ.அபேசேக்கர, அநுராதபுரம் மாநகர ஆணையாளர் ருவன் விஜேசேக்கர, பிரதேச செயலாளர்கள், உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## தினகரன் பத்திரிகை ஆற்றிவரும் பணிகள் போற்றத்தக்கவை

### அமைச்சர் டக்ளஸ் புகழாரம்



தினகரன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு 92 ஆண்டுகளாகின்றன. இந்த 92 ஆண்டு காலத்தில் தினகரன் ஆற்றிவரும் பணிகள் யாவும் போற்றுதலுக்குரியனவாக இருந்தன. 30 வருட யுத்த காலத்திலும் செய்திகளை வெளியிடுவதிலும் தகவல்களை வழங்குவதிலும் தினகரன் நடுநிலையாக நின்று மக்களுக்கு உண்மை நிலவரங்களை உடனுக்கு உடன் வழங்கி ஓர் உன்னதமான சேவையை ஆற்றியது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இது அரசாங்க பத்திரிகை அரசாங்கத்துக்கு சார்பான செய்திகளை மட்டும் தான் பிரசுரிக்கும் என்ற ஒரு குற்றச்சாட்டு நிலவுகிறது. இந்த குற்றச்சாட்டுகளை தவிடு பொடியாக்கிய ஒரு பத்திரிகையாக தினகரன் விளங்குகிறது.

தினகரன் யுத்த காலத்தில் எப்படி தங்குதடை இன்றி பத்திரிகையை வெளியிட்டு வந்ததோ, அதேபோல கொரோனா காலத்திலும் காலத்திற்கு ஏற்ற விதத்திலே இ பத்திரிகையாக வெளியிட்டு மக்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளிலேயே பத்திரிகையை வாசிக்கக்கூடிய விதத்தில் வழிவகை செய்தது.

எந்த காலகட்டத்திலும் ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்து வந்த தினகரன், ஜனநாயகத்தின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்த பெருமைக்குரியது என்றால் மிகையாகாது.

கடந்த 92 ஆண்டுகளாக பாரிய சேவையாற்றியது போல் தொடர்ந்தும் அரும்பணிகள் பல ஆற்றி வெற்றி நடை போட வாழ்த்துகிறேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வெலிகம மத்ரஸதுல் பாரியில் கத்முல் புகாரி மஜ்லிஸ்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இலங்கையின் முதல் அறபுக் கல்லூரியான வெலிகம மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரியில் கத்முல் புகாரி மற்றும் துஆ மஜ்லிஸ் வைபவமொன்று அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் ஏ.ஆர். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி) தலைமையில் இடம் பெற்ற இவ்வைபவத்தில், பிரதம பேச்சாளராக தஸ்கர ஹக்கானிய்யா அறபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.எச். ளபீர் ( முர்ஸி) ஹஸ்ரத் கலந்து கொண்டதோடு கத்முல் புகாரி மற்றும் விசேட துஆப் மஜ்லிஸ் நிகழ்ச்சியை தென்னிந்திய இராமநாதபுரம் மாவட்ட தாரூல் உலூம் ஹக்கானிய்யா அறபுக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் மௌலானா நுஸ்கி ஹஸ்ரத் நடாத்தி வைத்தார்.

இவ்வைபவத்தில் உலமாக்கள், உஸ்தாத்மார்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நிர்வாகிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## களுத்துறை மாவட்ட இணைப்புக்குழு கூட்டத்தில் அமைச்சர் பிரசன்ன பங்கேற்பு



**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

களுத்துறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன மற்றும் மாவட்ட செயலாளர் ஜீ.பீ. ஜனக குமார தலைமையில் மாவட்ட செயலக புதிய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூட்டத்தில் விஷேட பிரமுகராக கலந்துகொண்டார்.இராஜாங்க அமைச்சர்களான பியல் நிசாந்த, அநுப பஸ்குவல், பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, லலித் வர்ணகுமார மற்றும் அரச திணைக்கள பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள எதிர்கால திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டமை விசேட அம்சமாகும்.

## 'தினகரன்' தமிழ் பத்திரிகை உலகில் தவிர்க்க முடியாத நாளிதழ்

### கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்



இலங்கை தமிழ் பத்திரிகை உலகில் தன்னிகரற்று விளங்கும் தினகரன் தேசிய நாளிதழ் தனது 92ஆவது அகவையில் இன்று காலடி எடுத்து வைத்துள்ளது.

தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பாகவும் செய்திகளை துல்லியமாகவும் வழங்கும் தினகரன் இன்னும் பல்லாண்டுகள் அதன் சேவையை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்க வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

"தினகரன் நாளிதழ் நீண்ட வரலாற்று பாரம்பரியத்தை கொண்டது. பத்திரிகையொன்று 92வருடங்கள் தொடர்ந்து வெளிவருவது சாதாரண விடயமல்ல. சுதந்திரத்துக்கு முற்பட்ட காலம் மற்றும் சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலம் என தினகரனின் வரலாறு நீண்டு வந்துள்ளது. நாட்டின் தேசியப் பிரச்சினைகள், கலவரங்கள், சுதந்திரப் போராட்டம், யுத்தம், சமாதானப் பேச்சுகள், நல்லிணக்கத்துக்காக முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளை துல்லியமாக மக்களுக்கு வழங்கிய பெருமை தினகரனுக்கு உள்ளது.பக்கச்சார்பற்று நடுநிலை தன்மையுடன் ஆரம்பகாலம் முதல் தமிழ் பேசும் வாசகர்களின் நலனுக்காக பணியாற்றும் தினகரன் பத்திரிகை எனது மனமார்ந்த நன்றிகள்.

### குவைத் நலன்புரி அமைப்பின் நிதியுதவியில்;

## வட மாகாண பயனாளிகளுக்கு இலவச தள்ளுவண்டிகள் பகிர்ந்தளிப்பு

### இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அதிதியாக பங்கேற்பு



குவைத் நாட்டில் இயங்கி வரும் மிகவும் பிரபல்யமிக்க "நமா" இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் நிதியொதுக்கீட்டில் 'சுயதொழிலும் ஹலாலான சம்பாத்தியமும்' என்ற ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் அல் ஹிமா சமூக சேவை அமைப்பினால் வட மாகாண பிரதேசமான மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமை கோட்டின் கீழ் வாழுகின்ற ஐந்து குடும்பங்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்காக உணவு தள்ளுவண்டிகள் இலவசமாக பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா, வாழவைத்த குளம் செட்டிகுளத்தில் நடைபெற்றது.

அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அதிதியாக கலந்துகொண்டு இதனை வைபவரீதியாக பயனாளிகளுக்கு கையளித்தார்.

மேலும் இப்பிரதேசத்தின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கூடிய கவனம் செலுத்தி வருவதோடு, அல் ஹிமா சமூக சேவை அமைப்பினூடாகவும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை பிரதேசங்களுக்கு முன்னெடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### தமிழர் விடுதலைக் கூட்டணியின்

## தலைவராக அருண் தம்பிமுத்து, செயலாளராக ஆனந்த சங்கரி

### புதிய நிர்வாகிகள் தெரிவில் அறிவிப்பு



தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய தலைவராக அருண் தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலாளராக வீ.ஆனந்த சங்கரியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று (17) வவுனியாவில் நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 07ஆம் திகதி திருகோணமலையில் நடத்தப்படவுள்ள கட்சியின் மாநாடு தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 122 ஆவது நிகழ்வாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை அநுராதபுரம் கே.பீ.ரத்நாயக்க மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இடம்பெற்றபோது எடுத்த படம்.

(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)




# திருகோணமலை மாவட்டத்தில் வெப்பநிலை அதிகரிப்பு

**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெப்ப நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையினால் வெளியில் பொதுமக்களது நடமாட்டம் மிக குறைவாகவே காணப்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய்ப் பிரதேசத்தில் நேற்றைய (17) சராசரி வெப்ப நிலை 36 பாகை செல்சியஸாக பதிவாகியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர், மூதூர், கிண்ணியா, நிலாவெளி மற்றும் திருகோணமலை நகர்ப்பகுதிகளில் சராசரி வெப்பநிலை 31 பாகை செல்சியசாக பதிவாகியுள்ளது.

இப்பிரதேசங்களில் வெப்பநிலையின் தாக்கம் மாலை 5 மணி வரை காணப்படுவதால் பொதுமக்கள் வெள்ளரிப்பழம், இளநீர் மற்றும் தோடம்பழங்கள் மற்றும் பானவகைகளை அதிகளவில் அருந்துவதில் அக்கறை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

வெளியில் நடமாடுவோர் குடைகளை பயன்படுத்துமாறும் சிறுவர்கள் விளையாட்டு மற்றும்


කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අංශය / விவசாயப்பிரிவு/ Agriculture Division

Democratic Socialist Republic of Sri Lanka
Ministry of Agriculture
Agriculture Sector Modernization Project
IDA Credit No: 5873 LK

**PROCUREMENT NOTICE**

**Rehabilitation of Existing Building at Palampaasi as the Cluster Processing Center of papaya in Mullaitivu District**

**LK-MOA-PMU-365170-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture, and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Provincial Project Procurement Committee on behalf of the ASM Project, Ministry of Agriculture, now invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No | Description of Works | Estimated Cost including Contingencies but Excluding VAT Rs. (Mn) | Contract Period | Required Grade | Bid Security Amount Rs. | Bid security Validity | Non-Refundable Cash Deposit Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-365170-CW-RFB | Rehabilitation of Existing Building at Palampaasi as the Cluster Processing Center of papaya in Mullaitivu District, LK-MOA-PMU-365170-CW-RFB | 28.6 | 5 months | C5 or Above Buildings | 428,850.00 | 15th July 2024 | 5,000.00 |

3. Bidders are allowed to quote for the above work with Bid Security and Bid validity date as mentioned in the Bid document. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA)
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, 286, Nawalar Road, Jaffna Northern Province (T.P: 021 221 6358) and inspect the bidding documents at the same place on any working day from 18th March 2024 to 01st April 2024 from 9:00 hrs to 14:30 hrs.
7. Pre-Bid meeting will be held on 26th March 2024 at 10.00 am at Palampaasi PUC office, Mullaitivu, Sri Lanka. There will be a site visit to the proposed project site, after the pre-bid meeting.
8. Bid shall be valid up to 17th June 2024.
9. Bid shall be accompanied by a Bid security as per the information given in the Table.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Provincial Deputy Project Director Northern Province, Agriculture Sector Modernization Project, No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka from 18th March 2024 to 01st April 2024 from 9:00 hrs to 14:30 hrs upon payment of a non-refundable fee as mentioned in the above Table, within the below mention period. The method of payment should be by cash.
11. Closing date of the bid is **01st April 2024, 14.30 hrs.**
12. Bids must be delivered to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka on or before 14:30 hrs on the bid closing date as mentioned above.
13. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened immediately after bid closing, in the presence of the bidders' representatives who choose to attend one person at the above-mentioned address.
14. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'original' and 'duplicate' respectively in sealed envelope. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

Chairman,
Project Procurement Committee,
Provincial Deputy Project Director,
Northern Province,
Agriculture Sector Modernization Project,
No: 286, Nawalar Road, Anaipanthi,
Jaffna, Sri Lanka.
18th March 2024


## கிழக்கின் குரல்

# கல்விசார ஊழியர்கள் பிரச்சினைகள் அதாஉல்லா எம்.பியிடம் மகஜர் கையளிப்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

இலங்கை கல்வித்துறையின் கல்விசாரா ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் கடந்த சனிக்கிழமை (16) நாடாளுமன்ற உறுப்பினரின் அக்கரைப்பற்று வாசஸ்தலத்தில் வைத்து ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஐ.ஏ.சிறாஜினால் கையளிக்கப்பட்டது. மாகாண பாடசாலைகளில் நீக்கப்பட்ட பதவிகள் மீண்டும் உருவாக்கப்பட்டு நியமனம் வழங்கப்படல், கல்விசாரா ஊழியர்களின் கடமை நேரங்களில் காவலாளி தவிர்ந்த ஏனையோருக்கு நேர மாற்றம் கொண்டு வரப்படல், கஷ்டப்பிரதேசம் மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படல், பாடசாலை காவலாளிகளுக்கு அரச பொது விடுமுறை தினங்கள் விடுமுறையாக கணிக்கப்படல் போன்ற பத்து அம்சங்களை உள்ளடக்கிய மகஜரே நாடாளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா விடம் கையளிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை உடனடியாக சந்தித்து கல்விசார ஊழியர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வை காலதாமதம் இன்றி பெற்றுத்தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா இலங்கை கல்வித்துறை கல்விசாரா ஊழியர்கள் சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

# வவுணதீவில் நான்காம் கட்டமாக நடமாடும் சேவை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



அஸ்வசும நலன்புரி நன்மைகளில் தேசிய அடையாள அட்டை இல்லாத பயனாளிகளை மையமாக கொண்டு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளவதற்கான நடமாடும் சேவை மூன்றாம் கட்டமாக (14) புதுமண்டபத்தடியில் 4 கிராம உத்தியோகத்தர் பிரிவினை உள்ளடக்கியதாக பிரதேச செயலாளர் ந.சத்தியானந்தியின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றது.

இதில் 63 பயனாளர்களுக்கு தேசிய அடையாள அட்டையும் அஸ்வசும சம்பந்தமாக மற்றும் 29 பயனாளர்கள் பிறப்பு அத்தாட்சி பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான சேவையும் இடம்பெற்றுள்ளது.

இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுயானை தாக்கியதால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**பாசிக்குடா நிருபர்**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குளத்துவெட்டை திகிலிவெட்டையில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.நாகராசா முரளிதரன் வயது 32 என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழக்கம் போல் மீன்பிடித் தொழிலுக்கு சென்றவர் குளத்தில் மீன் பிடிப்பதற்காக கட்டு வலையினை கட்டிவிட்டு குளத்துக் கட்டில் உறங்கியபோது அங்கு வந்த காட்டு யானை அவரை தாக்கியுள்ளது.இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக திடீர் மரண விசாரணை அதிகாரி கி.பவளகேசன் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

# நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய வரலாற்று நூல் 'மரகதம்' வெளியீட்டுவிழா

**காரைதீவு குறூப் நிருபர்**



வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் 'மரகதம்' வரலாற்று நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந்நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் ஆலய தலைவ கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பித்தார். பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தார்.

ஆசியுரையை ஆலய பிரதமகுரு ஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். வெளியிட்டுரையை நூலாசிரியர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முதல் பிரதியை ஆலய தலைவர் கி.ஜெயசிறில் சுவாமி நீலமாதவானந்தா ஜீக்கு வழங்கி வைத்தார். ஏனைய பிரதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன .

நூலுக்கு அனுசரணை வழங்கிய லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த ரி.விஜயலதா, ரி.விஜயகரன் சார்பில் அவரது சகோதரர் சி.பிரேமச்சந்திரன் சிறப்புப் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக வெளியீடு விழா அடையாளமாக மீனாட்சி அம்மனின் திருவுருவப்படங்கள் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், கலாநிதி மூ.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆசிரிய தம்பதியினர் சுகுணமதி_ அருள்ராஜா, முதலைக்குடா ஆசிரியை திருமதி நளினி அகிலேஸ்வரன், அதிபர்களான பி.தயாநிதி,( வீரமுனை) செ.சிவயோகராஜா( காரைதீவு) ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை, 550 வருடகால வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான 'மரகதம்' நூல் வெளியீட்டு விழாவிற்கு முன்னதாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்து சிறப்பித்தனர்.

பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆலய செயலாளர் த.சண்முகநாதன் நன்றி தெரிவித்தார்.

# பட்டிருப்பு தேசிய பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு (களுவாஞ்சிகுடி) மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வலுனர் விளையாட்டுப் போட்டியானது சனிக்கிழமை(16.03.2024) வித்தியாலய அதிபர் பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு த்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து கொண்டிருந்தர்.

மேலும் இதன்போது பட்டிருப்பு கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிறிதரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இதயகுமார், ஓய்வு பெற்ற பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.வன்னியசிங்கமும் கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழர் கலை , கலாசார முறைப்படி ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வை உத்தியோக பூர்வமாக இராஜாங்க அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.










பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றை ஏற்படுத்தவும், வாடிக்கையாளரான உங்களுக்கு ஆண்டுதோறும் மிகப்பெரிய முதலீட்டு வருமானத்தை வழங்கவும் நாங்கள் எப்போதும் முயற்சி செய்கிறோம். புதுமையான மற்றும் எதிர்கால மூலோபாயத் திட்டங்கள் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களின் நிதி நலனுக்காக வடிவமைக்கப்பட்ட சிறந்த காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதே எங்கள் இலட்சியம்.

மேலதிக தகவல்களுக்கு இன்றே உங்கள் காப்புறுதி ஆலோசகரை அல்லது 1330 ஐ அழைக்கவும்!

1330 இணைவதற்கு unionassurance.com

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

# நிதிக் கூற்றுக்கள்

2023 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஒன்பது மாதங்களுக்கானது

NDB வங்கி

எதிர்கால வங்கியியல் முன்னோடி

## வருமான அறிக்கை

| 31 டிசம்பர் இல் முடிவுறும் வருடத்திற்கானது | வங்கி 2023 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | வங்கி 2022 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | % | குழுமம் 2023 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | குழுமம் 2022 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | % |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | 132,326,003 | 109,902,478 | 20 | 134,472,594 | 111,551,511 | 21 |
| வட்டி வருமானம் | 119,372,564 | 97,917,822 | 22 | 119,722,233 | 98,217,310 | 22 |
| கழி: வட்டிச் செலவீனம் | 87,425,434 | 67,174,164 | 30 | 87,341,751 | 67,086,940 | 30 |
| **நிகர வட்டி வருமானம்** | **31,947,130** | **30,743,658** | **4** | **32,380,482** | **31,130,370** | **4** |
| கட்டணம் மற்றும் வருமானம் | 7,164,891 | 6,274,698 | 14 | 8,566,191 | 7,438,752 | 15 |
| கழிப்பு: கட்டண மற்றும் தரகுப்பணச் செலவுகள் | 7,084 | 16,929 | (58) | 7,084 | 16,929 | (58) |
| **கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **7,157,807** | **6,257,769** | **14** | **8,559,107** | **7,421,823** | **15** |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான நிகர இலாபம்/(செலவீனம்) | 2,905,753 | (340,346) | 954 | 2,905,753 | (340,346) | 954 |
| நிதியியல் முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான நிகர இலாபம்/(செலவீனம்) | 1,745,982 | (389,767) | 548 | 1,947,286 | (340,388) | 672 |
| நிதிச் சொத்துகளின் அங்கீகாரத் தவிர்ப்பு மூலமான நிகர இலாபம்/(நட்டம்) | 4,057,348 | 15,127 | 26,722 | 4,108,332 | 15,127 | 27,059 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | (2,920,535) | 6,424,944 | (145) | (2,777,201) | 6,561,056 | (142) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **44,893,485** | **42,711,385** | **5** | **47,123,759** | **44,447,642** | **6** |
| கழி: கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | 21,144,038 | 29,291,660 | (28) | 21,137,016 | 29,276,538 | (28) |
| **தேறிய தொழிற்பாட்டு இலாபம்** | **23,749,447** | **13,419,725** | **77** | **25,986,743** | **15,171,104** | **71** |
| **கழி: தொழிற்பாட்டு செலவீனங்கள்** | | | | | | |
| தனிப்பட்ட செலவீனங்கள் | 6,633,355 | 5,650,176 | 17 | 7,379,192 | 6,277,028 | 18 |
| நிலைமாற்றம் தேய்மானம் | 984,510 | 846,634 | 16 | 1,054,459 | 926,034 | 14 |
| ஏனைய செலவினங்கள் | 6,035,825 | 4,886,836 | 24 | 6,649,013 | 5,296,103 | 26 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **13,653,690** | **11,383,646** | **20** | **15,082,664** | **12,499,165** | **21** |
| **நிதியியல் பணிகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 10,095,757 | 2,036,079 | 396 | 10,904,079 | 2,671,939 | 308 |
| கழி: நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 2,749,840 | 1,203,092 | 129 | 2,749,840 | 1,203,092 | 129 |
| **நிதியியல் பணிகள் மீதான வரிக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம்** | **7,345,917** | **832,987** | **782** | **8,154,239** | **1,468,847** | **455** |
| வரிக்கு முந்திய இலாபத்தில் இணைக்கம்பனிகளின் இலாபம்/(நட்டம்) | - | - | - | - | - | - |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 7,345,917 | 832,987 | 782 | 8,154,239 | 1,468,847 | 455 |
| கழி: வருமான வரிச் செலவினங்கள் | 1,975,590 | (2,076,058) | 195 | 2,296,029 | (1,606,957) | 243 |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **5,370,327** | **2,909,045** | **85** | **5,858,210** | **3,075,804** | **90** |
| **பங்குதாரர்களுக்கு உரிமையாக்கக்கூடிய :** | **5,370,327** | **2,909,045** | **85** | **5,759,436** | **3,008,737** | **91** |
| தாய் நிறுவனத்தின் உரிமை முதல் உரித்தாளர்கள் | - | - | - | 98,774 | 67,067 | 47 |
| நிறுவனத்தை கட்டுப்படுத்த முடியாதவர்களின் உரிமைப் பங்கு | 5,370,327 | 2,909,045 | 85 | 5,858,210 | 3,075,804 | 90 |
| **பங்கொன்றுக்கான வருமதி (ரூ)** | 13.44 | 7.28 | 85 | 14.42 | 7.53 | 91 |
| வலுக் குறைந்த சாதாரண பங்கொன்றுக்கான வருமதி (ரூ) | - | 2.50 | | | | |

## முழுமையான வருமானக் கூற்று

| 31 டிசம்பர் இல் முடிவுறும் வருடத்திற்கானது | வங்கி 2023 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | வங்கி 2022 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | % | குழுமம் 2023 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | குழுமம் 2022 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூ. '000 | % |
|---|---|---|---|---|---|---|
| **காலப்பகுதிக்கான இலாபம்** | 5,370,327 | 2,909,045 | 85 | 5,858,210 | 3,075,804 | 90 |
| மறுவகைப்படுத்தப்படும் அதிக வருமானம் தரும் பொருட்களுபவ் இலாபம் மற்றும் இழப்பு அறிக்கை | | | | | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளில் பணப் பரிமாற்றத்தின் மொழிபெயர்ப்பு | - | - | - | (67,465) | 191,168 | (135) |
| ஏனைய தொகுக்கப்பட்ட வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் கடன் பத்திரங்களின் முதலீட்டில் தேறிய இலபம்/(நட்டம்) | | | | | | |
| வருடத்தின் நியாய மதிப்பின் நிகர மாற்றம் | 5,259,686 | 2,420,880 | 117 | 5,268,192 | 2,421,371 | 118 |
| எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான கொடுப்பனவில் மாற்றங்கள் | - | (181,155) | 100 | - | (181,155) | 100 |
| மேலேயுள்ள நிதிக்கருவிகளில் ஆதாயங்கள்.'.(இழப்புகள்) மீதா ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | (1,577,905) | (675,432) | (134) | (1,577,918) | (675,432) | (134) |
| **முதலீடுகளின் நிகர இலாபங்கள்/(இழப்புகள்)** | **3,681,781** | **1,564,293** | **135** | **3,690,274** | **1,564,784** | **136** |
| பணப்புழக்க ஈநனபந இருப்பு மீதான ஆதாயங்கள்/(இழப்புகள்) | (3,191,786) | 4,385,238 | (173) | (3,191,786) | 4,385,238 | (173) |
| பணப்புழக்க ஈநனபந இருப்பு மீதான ஆதாயங்கள்/(இழப்புகள்) மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 957,535 | (1,315,571) | 173 | 957,535 | (1,315,571) | 173 |
| **பணப்புழக்க ஈநனபந இருப்பில் நிகர ஆதாயங்கள்/ (இழப்புகள்)** | **(2,234,251)** | **3,069,667** | **(173)** | **(2,234,251)** | **3,069,667** | **(173)** |
| நிகர மற்றும் விரிவான வருமானம் அல்லது இழப்பு அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படும் (அ) | **1,447,530** | **4,633,960** | **(69)** | **1,388,558** | **4,825,619** | **(71)** |
| **இலாபம் அல்லது இழப்பு அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படாத அம்சங்கள்** | | | | | | |
| சமபங்குக் கருவிகளில் முதலீடுகளின் நிகர இலாபங்கள்/(இழப்புகள்) – ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான மதிப்பு | 315,123 | (304,245) | 204 | 315,123 | (304,245) | 204 |
| இலவச நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீடு. | 50,483 | 249,651 | (80) | 92,531 | 316,789 | (71) |
| மறுமதிப்பீட்டு ஆதாயங்கள்/(இழப்புகள்) மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | (15,145) | (185,581) | 92 | (27,760) | (217,679) | 87 |
| **இலவச நிலம் மற்றும் கட்டிடங்களின் மறுமதிப்பீட்டின் நிகர இலாபங்கள்/(இழப்புகள்)** | **35,338** | **64,070** | **(45)** | **64,771** | **99,110** | **(35)** |
| வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் உண்மையான ஆதாயங்கள்/(இழப்புகள்) | (581,395) | 68,094 | (954) | (605,550) | 58,168 | (1,141) |
| ஆதாயங்கள்.'.(இழப்புகள்) மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | 87,606 | 42,044 | 108 | 94,853 | 45,022 | 111 |
| **வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் நிகர ஆதாயங்கள்/(இழப்புகள்)** | **(493,789)** | **110,138** | **(548)** | **(510,697)** | **103,190** | **(595)** |
| குறைபாடு கொடுப்பனவின் முதல் நாள் சரிசெய்தலில் வரி விகித மாற்றத்தின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு | - | - | - | - | - | - |
| **இலாபம் அல்லது இழப்பு அறிக்கைக்கு மறுவகைப்படுத்தப்படாத நிகர மற்றும் விரிவான வருமானம் (b)** | **(143,328)** | **(130,037)** | **(10)** | **(130,803)** | **(101,945)** | **(28)** |
| இநெவ ழக வயஒநள (யூடி) ஆண்டுக்கான மொத்தமான ஏனைய விரிவான வருமானம்ருபவ் நிகர வரிகள் (a+b) | 1,304,202 | 4,503,923 | (71) | 1,257,755 | 4,723,674 | (73) |
| ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம். | 6,674,529 | 7,412,968 | (10) | 7,115,965 | 7,799,478 | (9) |
| **உரித்தாக்கப்படக்கூடியது:** | | | | | | |
| தாய் நிறுவனத்தின் உரிமைதாரருக்கான இலாபம் | 6,674,529 | 7,412,968 | (10) | 7,029,011 | 7,685,035 | (9) |
| நிறுவனத்தை கட்டுப்படுத்தா வட்டி வீதம் | - | - | - | 86,954 | 114,443 | (24) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | **6,674,529** | **7,412,968** | **(10)** | **7,115,965** | **7,799,478** | **(9)** |

## 31.12.2023 இன் படி NDB பங்குகளில் இயக்குநர்கள் வட்டி

| பெயர் | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. ஸ்ரீயன் கூரே | - |
| திரு. பெர்னார்ட் சின்னையா | - |
| திரு. சுஜீவா முதலிகே | - |
| திரு. குஷன் டி அல்விஸ், பிசி | - |
| செல்வி. (FAY) பையச்சத்ர் சேட்னகர்ங்குல் | - |
| செல்வி. சண்டிமா தில்ருக்ஷி | - |
| திருமதி கஸ்தூரி வில்சன் | - |
| திருமதி ஷ்வேதா அப்ரமெயா | - |
| திரு. ஹசித்த பிரேமரத்ன | - |
| திரு. டிமந்த செனவிரத்ன (31. 01. 2024 முதல் கைவிடப்பட்டது) | 79,216 |
| திரு. கெலும் எதிரிசிங்ஹ (01.02.2024 அன்று நியமிக்கப்பட்டவர்) | பொருந்த மாட்டாது |

## உரிமை மூலதன மாற்ற கூற்று

| 31 டிசம்பர் இல் முடிவுறும் வருடத்திற்கானது | குறிப்பிட்ட பங்கு மூலதனம் ரூ. '000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. '000 | விற்பனை ஒதுக்கங்களுக்காக கிடைக்கக் கூடியவை ரூ. '000 | பங்கு அடிப்படையிலான கட்டண இருப்புக்கள் ரூ. '000 | காசுப் பாய்ச்சல் காப்பு வருவாய் ரூ. '000 | காசுப் பாய்ச்சல் காப்பு வருவாய் ரூ. '000 | நிறுத்தி வைத்திருப்பு வருவாய் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | கட்டுப்படுத்த முடியாத வட்டிகள் ரூ. '000 | மொத்த உரிமை முதல் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வங்கி** | | | | | | | | | | |
| **2022 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 18,263,609 | 2,571,479 | 44,479 | (2,483,938) | 1,402,195 | - | 39,134,382 | 58,932,206 | - | 58,932,206 |
| அதிக வரி | - | - | - | - | - | - | (2,456,403) | (2,456,403) | - | (2,456,403) |
| **ஜனவரி 01முதல் 2022 இல் சமநிலை சரிசெய்யப்பட்ட மீதி** | 18,263,609 | 2,571,479 | 44,479 | (2,483,938) | 1,402,195 | - | 36,677,979 | 56,475,803 | - | 56,475,803 |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | - | - | 2,909,045 | 2,909,045 | - | 2,909,045 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | 2,116,635 | 249,651 | 4,385,238 | (113,060) | 6,638,464 | - | 6,638,464 |
| ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | (675,432) | (185,581) | (1,315,571) | 42,044 | (2,134,540) | - | (2,134,540) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | - | - | - | 1,441,203 | 64,070 | 3,069,667 | 2,838,029 | 7,412,968 | - | 7,412,968 |
| **நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட சமபங்கு வைத்திருப்பவர்களுடன் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகள்** | | | | | | | | | | |
| சட்டபூர்வமான இருப்பு நிதிக்கு மாற்றவும் | - | 175,000 | - | - | - | - | (175,000) | - | - | - |
| Scrip 2021க்கான இறுதி பங்குலாபம் : பிரதியின் படி | 1,607,056 | - | - | - | - | - | (1,607,056) | - | - | - |
| Cash 2021க்கான இறுதி பங்குலாபம் : ரொக்கப் பணமாக | - | - | - | - | - | - | (357,124) | (357,124) | - | (357,124) |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | 4,215 | 4,215 | - | 4,215 |
| **31 டிசம்பர் 2022 நிலவரப்படி இருப்பு** | 19,870,665 | 2,746,479 | 44,479 | (1,042,735) | 1,466,265 | 3,069,667 | 37,381,043 | 63,535,863 | - | 63,535,863 |
| **2023 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 19,870,665 | 2,746,479 | 44,479 | (1,042,735) | 1,466,265 | 3,069,667 | 37,381,043 | 63,535,863 | - | 63,535,863 |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | | | | | | | | | |
| ஆண்டிக்கான லாபம் | - | - | - | - | - | - | 5,370,327 | 5,370,327 | - | 5,370,327 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | 5,574,809 | 50,483 | (3,191,786) | (581,395) | 1,852,111 | - | 1,852,111 |
| ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | (1,577,905) | (15,145) | 957,535 | 87,606 | (547,909) | - | (547,909) |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | 3,996,904 | 35,338 | (2,234,251) | 4,876,538 | 6,674,529 | - | 6,674,529 |
| **நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட சமபங்கு வைத்திருப்பவர்களுடன் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகள்** | | | | | | | | | | |
| சட்டபூர்வமான இருப்பு நிதிக்கு மாற்றவும் | - | 300,000 | - | - | - | - | (300,000) | - | - | - |
| Scrip 2022க்கான இறுதி பங்குலாபம் : பிரதியின் படி | 867,566 | - | - | - | - | - | (950,237) | (82,671) | - | (82,671) |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | 20,156 | 20,156 | - | 20,156 |
| **31 டிசம்பர் 2023 நிலவரப்படி இருப்பு** | 20,738,231 | 3,046,479 | 44,479 | 2,954,169 | 1,501,603 | 835,416 | 41,027,500 | 70,147,877 | - | 70,147,877 |
| **குழுமம்** | | | | | | | | | | |
| **2022 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 18,263,609 | 2,571,479 | 44,479 | (2,467,181) | 1,583,831 | - | 42,730,952 | 62,727,169 | 1,339,373 | 64,066,542 |
| அதிக வரி | - | - | - | - | - | - | (2,554,396) | (2,554,396) | (21,780) | (2,576,176) |
| **2022 ஜனவரி 01முதல் 2022 இல் சமநிலை சரிசெய்யப்பட்ட மீதி** | 18,263,609 | 2,571,479 | 44,479 | (2,467,181) | 1,583,831 | - | 40,176,556 | 60,172,773 | 1,317,593 | 61,490,366 |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | | | | | | | | | |
| ஆண்டிக்கான லாபம் | - | - | - | - | - | - | 3,008,737 | 3,008,737 | 67,067 | 3,075,804 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | 2,117,126 | 316,789 | 4,385,238 | 20,804 | 6,839,957 | 47,377 | 6,887,334 |
| Tஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | (675,432) | (217,680) | (1,315,571) | 45,022 | (2,163,661) | - | (2,163,661) |
| **அந்தக் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | 1,441,694 | 99,109 | 3,069,667 | 3,074,563 | 7,685,033 | 114,444 | 7,799,478 |
| **நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட சமபங்கு வைத்திருப்பவர்களுடன் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகள்** | | | | | | | | | | |
| சட்டபூர்வ ஒதுக்க நிதியத்திற்கான இடமாற்றம் | - | 175,000 | - | - | - | - | (175,000) | - | - | - |
| கட்டுப்படுத்தப்படாத வட்டிகளில் சுமத்தப்படக்கூடிய பங்குலாபங்கள் | - | - | - | - | - | - | - | - | (40,778) | (40,778) |
| Scrip 2021க்கான இறுதி பங்குலாபம் : பிரதியின் படி | 1,607,056 | - | - | - | - | - | (1,607,056) | - | - | - |
| 2021க்கான இறுதி பங்குலாபம் : ரொக்கப் பணமாக | - | - | - | - | - | - | (357,124) | (357,124) | - | (357,124) |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | 4,215 | 4,215 | - | 4,215 |
| **31 டிசம்பர் 2022 நிலவரப்படி இருப்பு** | 19,870,665 | 2,746,479 | 44,479 | (1,025,487) | 1,682,940 | 3,069,667 | 41,116,154 | 67,504,897 | 1,391,259 | 68,896,156 |
| **2023 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 19,870,665 | 2,746,479 | 44,479 | (1,025,487) | 1,682,940 | 3,069,667 | 41,116,154 | 67,504,897 | 1,391,259 | 68,896,156 |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | | | - | - | | | | | |
| ஆண்டிக்கான லாபம் | - | - | - | - | - | - | 5,759,436 | 5,759,436 | 98,774 | 5,858,210 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | 5,583,315 | 92,531 | (3,191,786) | (661,195) | 1,822,865 | (11,820) | 1,811,045 |
| ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | (1,577,918) | (27,760) | 957,535 | 94,853 | (553,290) | | (553,290) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | - | - | - | 4,005,397 | 64,771 | (2,234,251) | 5,193,094 | 7,029,011 | 86,954 | 7,115,965 |
| **நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட சமபங்கு வைத்திருப்பவர்களுடன் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகள்** | | | | | | | | | | |
| சட்டபூர்வமான இருப்பு நிதிக்கு மாற்றவும் | - | 300,000 | - | - | - | - | (300,000) | - | | - |
| கட்டுப்படுத்தப்படாத வட்டிகளில் சுமத்தப்படக்கூடிய பங்குலாபங்கள் | - | - | - | - | - | - | - | - | (53,283) | (53,283) |
| Scrip 2022க்கான இறுதி பங்குலாபம் : பிரதியின் படி | 867,566 | - | - | - | - | - | (950,237) | (82,671) | | (82,671) |
| Cash 2021க்கான இறுதி பங்குலாபம் : ரொக்கப் பணமாக (Note 19) | - | - | - | - | - | - | - | - | | - |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | 20,156 | 20,156 | | 20,156 |
| **31 டிசம்பர் 2023 நிலவரப்படி இருப்பு** | 20,738,231 | 3,046,479 | 44,479 | 2,979,910 | 1,747,711 | 835,416 | 45,079,167 | 74,471,393 | 1,424,930 | 75,896,323 |

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமை குறித்த அறிக்கை

| 31 டிசம்பர் இல் முடிவுறும் வருடத்திற்கானது | வங்கி 2023 (கணக்காய்வானது) ரூ. '000 | வங்கி 2022 (கணக்காய்வானது) ரூ. '000 | % | குழுமம் 2023 (கணக்காய்வானது) ரூ. '000 | குழுமம் 2022 (கணக்காய்வானது) ரூ. '000 | % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| பணம் மற்றும் பணம் நிகரானவை | 28,100,515 | 34,849,521 | (19) | 28,580,676 | 35,727,665 | (20) |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | 7,040,421 | 18,187,547 | (61) | 7,040,421 | 18,187,547 | (61) |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 33,743,602 | 4,108,989 | 721 | 33,743,602 | 4,108,989 | 721 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 3,083,815 | 7,909,252 | (61) | 3,083,815 | 7,909,252 | (61) |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாய பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 24,021,340 | 19,318,483 | 24 | 26,040,046 | 20,788,523 | 25 |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 452,660,461 | 545,873,027 | (17) | 452,739,928 | 545,919,824 | (17) |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதிச் சொத்துகள் - கடன் பத்திரங்கள | 125,672,370 | 135,047,886 | (7) | 125,672,370 | 135,047,886 | (7) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றினூடாக நியாயப் பெறுமதியியல் மதிப்பிட்ட நிதியியல் சொத்துக்கள் | 83,805,398 | 44,685,230 | 88 | 84,645,423 | 45,454,490 | 86 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 1,108,772 | 1,115,794 | (1) | - | - | - |
| இணை நிறுவனங்களில் முதலீடுகள் | - | - | - | - | - | - |
| முதலீட்டு ஆதனம் | - | - | - | 3,112,440 | 2,879,091 | 8 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3,141,117 | 3,261,362 | (4) | 3,817,097 | 3,907,994 | (2) |
| சொத்து பயன்பாட்டிற்கான உரிமை | 1,145,601 | 1,170,763 | (2) | 1,260,055 | 1,323,368 | (5) |
| புரிந்துகொள்ள முடியாத சொத்துகள் | 1,883,447 | 1,804,321 | 4 | 1,898,270 | 1,813,213 | 5 |
| தற்போதைய வரி வரவுகள் | - | - | - | 43,102 | 43,488 | (1) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 9,648,118 | 9,004,747 | 7 | 9,717,805 | 9,048,896 | 7 |
| ஏனைய சொத்துக்கள் | 4,844,183 | 6,435,328 | (25) | 5,563,827 | 7,037,671 | (21) |
| **மொத்த சொத்துக்கள்** | **779,899,160** | **832,772,250** | **(6)** | **786,958,877** | **839,197,897** | **(6)** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 7,679,195 | 20,251,657 | (62) | 7,679,195 | 20,298,844 | (62) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 93,361 | 96,246 | (3) | 93,361 | 96,246 | (3) |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 615,643,999 | 672,314,023 | (8) | 615,232,470 | 671,713,337 | (8) |
| - கடன் பத்திரதாரர்களுக்கு செலுத்துமதி | 15,632,569 | 130,541 | 11,875 | 15,632,569 | 130,541 | 11,875 |
| - ஏனைய கடன்படுனர்களுக்கு செலுத்துமதி | 24,636,539 | 32,372,265 | (24) | 24,636,539 | 32,372,265 | (24) |
| கடன்பத்திரங்கள் வழங்கல் | 29,388,875 | 27,979,631 | 5 | 29,388,875 | 27,979,631 | 5 |
| தற்போதைய வரிப் பொறுப்புக்கள் | 7,265,070 | 6,470,353 | 12 | 7,430,773 | 6,635,188 | 12 |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - | - | 921,189 | 873,280 | 5 |
| ஓய்வுகால அனுகூலக் கடப்பாடுகள் | 1,299,909 | 916,007 | 42 | 1,439,374 | 1,019,294 | 41 |
| பிற்போடப்பட்ட வரி | 8,111,766 | 8,705,664 | (7) | 8,608,209 | 9,183,115 | (6) |
| **மொத்த பொறுப்புக்கள்** | **709,751,283** | **769,236,387** | **(8)** | **711,062,554** | **770,301,741** | **(8)** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| அறிக்கையிடப்பட்ட முதலீடு | 20,738,231 | 19,870,665 | 4 | 20,738,231 | 19,870,665 | 4 |
| சட்டரீதியான ஒதுக்க நிதி | 3,046,479 | 2,746,479 | 11 | 3,046,479 | 2,746,479 | 11 |
| பொது ஒதுக்கங்கள் | 41,027,500 | 37,381,043 | 10 | 45,079,167 | 41,116,154 | 10 |
| Other reserves | 5,335,667 | 3,537,676 | 51 | 5,607,516 | 3,771,599 | 49 |
| **வங்கியின் சமபங்கு பங்குதாரர்களுக்கான மொத்தப் பங்கு** | **70,147,877** | **63,535,863** | **10** | **74,471,393** | **67,504,897** | **10** |
| நிறுவனத்தின் கட்டுப்பாடில்லா உரித்து | - | - | - | 1,424,930 | 1,391,259 | 2 |
| **மொத்த பங்கு மூலதனம்** | **70,147,877** | **63,535,863** | **10** | **75,896,323** | **68,896,156** | **10** |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புக்களும்** | **779,899,160** | **832,772,250** | **(6)** | **786,958,877** | **839,197,897** | **(6)** |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | 277,965,419 | 293,609,756 | (5) | 278,127,046 | 294,376,707 | (6) |
| **ஒரு சாதாரண பங்கிற்கான நிகர புத்தகப் பெறுமதி (ரூபா)** | 175.60 | 167.16 | 5 | 186.43 | 177.60 | 5 |
| **அமைப்புத் தகவல்கள்** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 2,756 | 2,929 | | | | |
| வங்கி கிளைகளின் எண்ணிக்கை | 113 | 113 | | | | |

இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் இலக்கம் 7 இன் தேவைகளுக்கு அமைவாக இருப்பதாக நாங்கள் சான்று அளிக்கிறோம்.

அவர்கள் பேராதனை அரச தாவரவியல் பூங்கா மற்றும் ஸ்ரீ தலதா மாளிகைக்கும் விஜயம் செய்தனர். இதன்போது ஸ்ரீ தலதா மாளிகையினரால், 'அபே சத்காரய' (எமது விருந்தோம்பல்) என்ற கருப்பொருளின் கீழ் மாணவிகளுக்கு பயிற்சி புத்தகங்களும் எழுதுபொருட்களும் வழங்கப்பட்டன.

## 13ஆவது யாழ் இந்துக்களின் போரில் 100 ஓட்டங்களால் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அபார வெற்றி







யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 13ஆவது இந்துக்களின் போர் துடுப்பாட்ட போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் அபார வெற்றியை பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் , கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் இடையிலான, "இந்துக்களின் போர்" என்று அழைக்கப்படும், துடுப்பாட்ட போட்டியின் 13 ஆவது ஆண்டு போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து , முதலாவது இன்னிங்ஸில் அனைத்து இலக்குகளையும் இழந்து , 80 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் 08 விக்கட்களை இழந்து, 240 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் தனது ஆட்டத்தை இடை நிறுத்தியது. அதனை தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக்கல்லூரி அணி அனைத்து விக்கட்களையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அதனால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்கள் அபார வெற்றியை பெற்றது. 13ஆவது இந்துக்களின் போரில் யாழ் இந்துக் கல்லூரி அபார வெற்றி

# வடக்கின் உதயம்

## தலைக்கவசம் அணியாது பயணித்த இளைஞன் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

தலைக்கவசம் அணியாது சென்று, மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பளையைச் சேர்ந்த சாந்தலிங்கம் நிரோசன் (வயது 21) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## தமிழக மீனவர்கள் 21 பேர் கைது

நாகர்கோவில் விஷேட நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நீரியல்வள திணைக்களத்தினர் அவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## குடமுருட்டியில் 360 ஏக்கரில் சிறுபோகம்

முல்லைத்தீவு குறூப் நிருபர்

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் கீழ் 360 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக இக்குளம் காணப்படுகின்றது. சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டம் நிறைவு பெற்று தற்போது பயிர்ச் செய்கை முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கூட்டத் தீர்மானத்தினை மீறி சில விவசாயிகள் மேலதிக விதைப்புகளில் ஈடுபட்டுள்ளதாக அதிகாரிகளிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குடமுருட்டிக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையின் போது கூடுதலான விதைப்புகளில் விவசாயிகள் ஈடுபடுவது தொடர்பாக சிறுபோக நெற்செய்கை கூட்டங்களில் காரசாரமான விவாதங்கள் இடம் பெறுவது வழமையாகும்.

ஆனால் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத் தீர்மானத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சட்டரீதியான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் கோரிக்கையாக காணப்படுகின்றது.

இதேவேளை குடமுருட்டிக் குளத்தினை முழுமையான புனரமைப்பிற்கு உட்படுத்துமாறும் நீண்ட காலமாக குளம் புனரமைக்கப்படாமல் உள்ளதாகவும் விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

## மக்கள் ஒத்துழைத்தால் தான் போதைவஸ்து, பாதாள உலகக் குழுக்களை இல்லாதொழிக்க முடியும்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

சாவகச்சேரி விசேட நிருபர்

மக்கள் ஒத்துழைத்தால் மாத்திரமே நாட்டில் உள்ள போதைவஸ்து மற்றும் பாதாள உலகக் குழுக்களை முற்றாக இல்லாதொழிக்க முடியும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

எமது நாட்டில் பிரதான பிரச்சினைகளாக பாதாள உலகக் குழுக்களும் போதைவஸ்து பிரச்சினை ஆகியன காணப்படுகின்றன. இந்த பிரச்சினைகள் காரணமாக பல்லாயிரம் குடும்பங்கள் சிதைவடைந்துள்ளன.

இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவே யுக்திய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். இது உங்கள் அனைவருக்குமான நடவடிக்கை. உங்கள் பிள்ளைகளின் நலன் கருதிய நடவடிக்கை.

எனவே பொதுமக்கள் இந்தப் பிரச்சினைகளை கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இது எமக்கு செய்யும் உதவி அல்ல. நீங்கள் உங்களுக்கு செய்கின்ற உதவி. உங்கள் குடும்பத்தில் போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்குச் செய்யும் உதவி.

யுக்திய நடவடிக்கை ஆரம்பித்ததில் இருந்து இன்றுவரை கடுமையான தீர்மானங்களை எடுத்து அதனை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தி வருகிறோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## யாழில். நண்பியுடன் கடலில் நீராட சென்ற சிறுமி உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

தனது நண்பியுடன் கடலில் நீராட சென்ற 11 வயது சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சாட்டி பகுதியை சேர்ந்த அவந்திகா விஜயகாந்த் (வயது 11) எனும் சிறுமியே உயிரிழந்துள்ளார். சிறுமியும் அவரது நண்பியும் தமது வீட்டுக்கு அருகில் உள்ள சாட்டி கடலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நீராடிக்கொண்டிருந்த வேளை, சிறுமி கடலில் அடித்து செல்லப்பட்டுள்ளார். உடனடியாக நண்பி கரையில் நின்றவர்களுக்கு தகவல் அளித்த போது , கடலில் அடித்து செல்லப்பட்ட சிறுமியை மீட்க முயற்சிகள் எடுத்த போதிலும் , சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# தொடரை தீர்மானிக்கும் பங்களாதேஷுடனான மூன்றாவது ஒருநாளில் இலங்கை இன்று களத்தில்




இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று சட்டொக்ராமில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் தலா ஒரு வெற்றியை பெற்றிருக்கும் நிலையில் இன்றைய தினம் வெற்றிபெறும் அணி தொடரை கைப்பற்றும். கடந்த இரண்டு போட்டிகளும் பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற நிலையில் இன்றைய போட்டி பகல் ஆட்டமாக இலங்கை நேரப்படி காலை 9.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் இலங்கையின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க உபாதைக்கு உள்ளான நிலையில் இன்றைய போட்டியில் அவர் ஆடாதது பின்னடைவாக உள்ளது. அவரது இடத்திற்கு சக லதுறை மிதவேகப்பந்து வீச்சாளர் சாமிக்க கருணாரத்ன அல்லது இரண்டாவது போட்டியில் ஆடாத சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன அழைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

மறுபுறம் பங்களாதேஷ் அணியிலும் அதிரடி மாற்றமாக அண்மைக் காலமாக சோபிக்கத் தவறி வந்த ஆரம்ப வீரர் லிட்டோன் தாஸ் நீக்கப்பட்டு அவருக்கு பதில் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான ஜகர் அலி அழைக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தன்சீன் ஹசன் ஷகீபும் காயம் காரணமாக இன்றைய போட்டியில் ஆட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய போட்டி நடைபெறும் சஹூர் அஹமது சௌத்ரி அரங்கு துடுப்பாட்டத்திற்கு சாதகமானது என்பதோடு அந்த ஆடுகளத்திற்கு பழகிக் கொண்டால் அதிக ஓட்டங்கள் குவிக்க முடியும். இன்றைய போட்டி பகல் ஆட்டம் என்பதால் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பு உள்ளது.




## நாடு திரும்புகிறார் மதுஷங்க



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது உபாதைக்கு உள்ளான இலங்கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தில் இருந்து விலகி இருப்பதோடு எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் முதல் சில போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையை எதிர்கொண்டுள்ளார்.

மதுஷங்கவின் காயம் தொடர்பில் எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ. சோதனையில் அவருக்கு இடது தொடை எலும்புக் காயம் ஏற்பட்டிருப்பது உறுதியாகி உள்ளாதாகும் அவர் நாடு திரும்பி குணமடைவதற்கான சிகிச்சைகளை பெறவிருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை நேற்று (17) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுஷங்க மும்பை இந்தியன்ஸ் அணியினால் வாங்கப்பட்டார். இந்திய பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.








கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நேற்று முன்தினம் (16) நிறைவடைந்த 105ஆவது பெருஞ்சமர் சமநிலையுற்ற நிலையில் கண்டி திரித்துவக் கல்லூரி அணித்தலைவர் மனுலகுலரத்ன (இடது) மற்றும் கண்டிபுனித அந்தோனியார் கல்லூரி அணித்தலைவர் திசரஏக்கநாயக்கவிடம் கௌரவஜோன் ஹலங்கொடஞாபகார்த்த கிண்ணத்தை சிறப்புவிருந்தினரான 1988ஆம் ஆண்டுதிரித்துவக் கல்லூரிகிரிக்கெட் அணித்தலைவர் சி.ஐ. பெர்னாண்டோமற்றும் டயலொக் ஆசிஆட்டாபிஎல்சியின் குழும பிரதம பகுப்பாய்வுமற்றும் செயற்கை நுண்ணறிவு அதிகாரிகலாநிதி. ரொமேஷ் ரணவனஆகியோர் கையளிக்கின்றனர்.



டேவிட் பீரிஸ் ரேசிங் அன்ட் லெஷர் நிறுவனம், இலங்கை மோட்டார் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து ACBT Kart Fight சம்பியன்ஷிப் 2024 போட்டியின் இரண்டாவது சுற்றைஅண்மையில் நடத்தியது. வயது மற்றும் எடையின் அடிப்படையில் 12 பிரிவுகளின் கீழ் 100ற்கும் அதிகமானபோட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர். இந்தப் போட்டியின்போது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.

## இலங்கை அணியின் வேகப்பந்து பயிற்சியாளராக ஆகிப் நியமனம்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ஆகிப் ஜாவிட் இலங்கை அணியின் வேகப்பந்து பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள டி20 உலகக் கிண்ணம் முடியும் வரை அவர் இலங்கை அணியுடன் பணியாற்றவுள்ளார்.

ஆகிப் ஜாவிட் பாகிஸ்தான் தேசிய அணிக்காக 163 ஒருநாள் மற்றும் 22 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 236 விக்கெட்டுகளை ஒட்டுமொத்தமாக வீழ்த்தியுள்ளார். 1992ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற பாகிஸ்தான் அணியிலும் அவர் இடம் பெற்றிருந்தார். அவர் இதற்கு முன் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டதுடன், ஐக்கிய அரபு இராச்சிய அணியின் பயிற்சியாளராகவும், ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அபிவிருத்திக்கான பொறுப்பொன்றிலும் செயற்பட்டுள்ளார். இவர் தற்போது பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் லாஹூர் கெலண்டர்ஸ் அணியின் பணிப்பாளர் மற்றும் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்



## காசா போர் நிறுத்தப் பேச்சு கட்டாரில் மீண்டும் ஆரம்பம்

### மோசமான ஊட்டச்சத்து குறைபாடு வேகமாக அதிகரிப்பு

காசாவில் இஸ்ரேலின் உக்கிரத் தாக்குதல்கள் நீடித்து அங்கு கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு வேகமாக அதிகரித்து வருதாக ஐ.நா. எச்சரித்திருக்கும் சூழலில் புதிய போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நேற்று (17) கட்டாரில் ஆரம்பமானது.

புனித ரமழான் மாதம் ஆரம்பித்த பின்னர் இஸ்ரேலிய அதிகாரிகள் மற்றும் ஹமாஸ் தலைவர்கள் மறைமுகப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருக்கும் முதல் சந்தர்ப்பமாக இது உள்ளது. ரமழானுக்கு முன்னர் ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு சர்வதேச மத்தியஸ்தர்கள் முயன்றபோதும் அது தோல்வி அடைந்த நிலையில் புதிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட்டின் தலைவர் டேவிட் பர்னி தலைமையில் இஸ்ரேலிய தூதுக் குழு ஒன்று கட்டார் சென்றுள்ளது. கட்டார் பிரதமர் மற்றும் எகிப்து அதிகாரிகளும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்று கைதிகள் பரிமாற்றம் மற்றும் மனிதாபிமான உதவி விநியோகம் தொடர்பில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில் இருக்கும் இடைவெளியை குறைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான மூன்று கட்ட திட்டம் ஒன்றை ஹமாஸ் அமைப்பு கடந்த வாரம் மத்தியஸ்தர்களுக்கு முன்மொழிந்தது. இதன் முதல் கட்டமாக ஆறு வார போர் நிறுத்த காலத்தில் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகளில் 35 பேர் விடுவிக்கப்பட்டு அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருக்கும் 350 பலஸ்தீன கைதிகளை விடுவிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் வடக்கு காசாவுக்கு திரும்புவதற்கு இஸ்ரேல் இரண்டு பிரதான பாதைகளில் இருந்து வாபஸ் பெறவும் ஹமாஸ் கோரியுள்ளது.

இதன் இரண்டாவது கட்டத்தில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்று அறிவிக்கப்பட வேண்டும் என்பதோடு கைதிகள் பரிமாற்றமாக ஹமாஸ் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிக்கும். மூன்றாவது கட்டத்தில் காசா மீதான முற்றுகையை அகற்றுவதற்காக தம்மிடம் உள்ள பணயக்கைதிகளின் உடல்களை ஹமாஸ் கையளிக்கும் என்பதோடு காசாவில் புனர்நிர்மாணப் பணிகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஹமாஸின் பரிந்துரையில் கூறப்பட்டுள்ளது.

ஹமாஸின் இந்த முன்மொழிவு யதார்த்தமானதாக இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டபோதும் புதிய பேச்சுவார்த்தை இந்த முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பக்கப்பட்டிருப்பதாக அது தொடர்பில் தெரிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

தமது அமைப்பின் பரிந்துரைகள் மிகவும் யதார்த்தபூர்வமானது என்றும் யாருக்கும் அதனை நிராகரிக்க முடியாது என்றும் ஹமாஸ் மூத்த அதிகாரியான ஒசாமா ஹம்தான், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்தார். இதற்கு மத்தியஸ்தர்கள் சாதகமாக பதிலளித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

டெல் அவிவில் சனிக்கிழமை கூடிய பணயக்கைதிகளின் குடும்பத்தினர் உடன்பாடு ஒன்றுக்கு செல்வதற்கு இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர். மறுபுறம் டெல் அவிவ் வீதிகளை மறித்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் புதிய தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தனர்.



#### ஊட்டச்சத்து குறைபாடு

நெதன்யாகு அரசு நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை நிராகரித்து வருவதோடு 'ஹமாஸை ஒழிக்கும்' தமது திட்டம் பூர்த்தி செய்யப்படும் என்று வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கு எகிப்து எல்லைக்கு அருகில் இருக்கும் தெற்கு நகரான ரபா மீது தாக்குதல் நடத்தும் இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கிடைத்ததாக நெதன்யாகு அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை கூறி இருந்தது.

ரபாவில் நிலைகொண்டிருக்கும் ஹமாஸ் படைப்பிரிவுகளை இலக்கு வைக்க இஸ்ரேல் திட்டமிடுகிறது. எனினும் ரபா மீதான தாக்குதல் பேரழிவை ஏற்படுத்தும் என்று இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்க உட்பட சர்வதேச நாடுகள் எச்சரித்து வருகின்றன.

காசாவில் இஸ்ரேலியப் படை இன்னும் நுழையாத பகுதியாக ரபா உள்ளது. என்றாலும் மற்ற இடங்களில் இஸ்ரேலின் வான், கடல் மற்றும் தரை மார்க்கமான தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

மத்திய காசாவின் டெயிர் அல் பலா நகரின் குடியிருப்பு கட்டடங்கள் மீது கடந்த சனிக்கிழமை (16) இரவு நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் 12க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். இதில் பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகம் என்று பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியது.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் மேலும் 92 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 31,640 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 73,676 பேர் காயமடைந்துள்ளனர்.

வடக்கு காசாவில் உள்ள இரண்டு வயதுக்குக் குறைவான மூன்றில் ஒரு குழந்தை கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'காசாவில் சிறுவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு வேகமாகவும் முன்னெப்போதும் இல்லாத மட்டத்திலும் அதிகரித்து வருகிறது' என்று அந்த ஐ.நா அமைப்பு சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில் எச்சரித்தது. காசாவில் உள்ள சில மருத்துவமனைகளில் சில குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நீரிழப்பு காரணமாக உயிரிழந்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த நான்கு மாதங்களில் முதல் முறையாக வடக்கு காசாவின் ஜபலியா, பெயித் ஹனூன் மற்றும் பெயித் லஹியா பகுதிகளுக்கு உதவி லொறிகள் சென்றடைந்திருப்பதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மாவை ஏற்றிய 13 லொறிகள் ஐ.நா. நிலையம் ஒன்றை அடைந்ததாக அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது. மேலும் உதவிகள் செல்ல அனுமதிக்கும்படி மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்து வருவதோடு, இஸ்ரேலின் தடைகள், கட்டுப்பாடுகள் மற்றும் பதற்றம் உதவிகள் செல்வதற்கு தடங்கலாக இருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சைப்ரஸில் இருந்து புறப்பட்ட தொண்டு அமைப்பின் உதவிக் கப்பல் கடந்த வெள்ளிக்கிழமை காசா கடற்கரையை அடைந்தது. இது காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதியை பாதையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் உணவுகளை நிரப்பிய இரண்டாவது உதவிக் கப்பல் சைப்ரஸில் இருந்து நேற்று முன்தினம் (16) காசாவை நோக்கி புறப்பட்டதாக சைப்ரஸ் ஜனாதிபதி நிகோஸ் கிறிஸ்டோடுலிடஸ் தெரிவித்துள்ளார். மறுபுறம் காசாவுக்கு வானில் இருந்து சர்வதேச நாடுகள் உதவிகளை போட்டு வருகின்றபோதும் தரை வழி உதவி விநியோகமே செயல்திறன் மிக்கதும் பொருத்தமானதாகவும் உள்ளது என்று தொண்டு நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன.

## ஒரே குடும்பத்தில் 36 பேர் பலி



மத்திய காசாவில் தபாதிபி குடும்பத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை நோன்பு பிடிப்பதற்காக ஒன்றிணைந்து அதிகாலை உணவு தயாரிக்கும் நேரத்தில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் அந்தக் குடும்பத்தின் 36 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நுஸைரத் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் இராணுவத்திடம் கேட்டபோது நுஸைரத்தில் பயங்கரவாதிகளின் இரு இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் பதிலளித்துள்ளது.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. மருத்துமனையில் உடல்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்ததோடு அதற்கு அருகில் 19 வயதான முஹமது அல் தபாதிபி நின்றிருந்தார்.

"இது எனது தாய், இது எனது தந்தை, இது எனது சித்தி மற்றும் இவர்கள் எனது சகோதரர்கள்" என்று தாக்குதலால் இடது கையில் காயம் ஏற்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருக்கும் உடல்களை காண்பித்தபடி அந்த இளைஞர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

"நாம் உள்ளே இருக்கும்போது அவர்கள் வீட்டின் மீது குண்டு போட்டார்கள். எனது தாய் மற்றும் சித்தி சஹர் உணவை தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் உயிர் தியாகம் செய்துவிட்டார்கள்" என்று உடல்கள் வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டு மையவாடிக்கு கொண்டு செல்லப்படும் முன்னர் அவர் கூறினார்.

இதில் தாக்குதலில் கொல்லப்பட்ட சிலரது உடல் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்பதாக தபாதிபி கூறினார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932-2024 ANNIVERSARY

# இலங்கைக்கான சுயமான தமிழ் இலக்கியத்தை தோற்றுவிக்க அடித்தளமிட்ட பத்திரிகை தினகரன்

## அமரர்கள் கைலாசபதியும், சிவகுருநாதனும் தினகரனின் இரு அடையாளச் சின்னங்கள்!






இலங்கைத் தலைநகரில் ஒன்பது தசாப்தங்களுக்கு முன்னர் உதயமாகிய தினகரன் பத்திரிகைக்கு இந்த ஆண்டு, 92 ஆவது பிறந்த தினம்.

ஒன்பது தசாப்த காலமாக, இலங்கையில் நேர்ந்த அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களையெல்லாம் ஊடகப்பெருவெளியில் தொடர்ந்தும் பதிவுசெய்து வந்திருக்கும் தினகரன், தென்கிழக்காசியாவில் குறிப்பிடத்தகுந்த நாளேடாகவும் பரிமளிக்கிறது.

காலிமுகத்தில் கடலோடு சங்கமிக்கும் சிற்றேரியின் அருகே தினகரனும் இதர ஆங்கில, சிங்கள ஏடுகளும் வெளியாகும் மாபெரும் கட்டடம் அமைந்திருப்பதனால், தினகரனுக்கும் ஏரிக்கரை பத்திரிகை ( Lake House) என்ற நாமம் கிட்டியிருக்கிறது.

தினகரன், 1932 ஆம் ஆண்டு முதல் நாளிதழாக வெளியாகிறது. 2305 1948 ஆம் திகதியன்று தனது முதலாவது தினகரன் வாரமஞ்சரியை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

ஏரிக்கரையிலிருந்து இயங்கும் Lake House என்ற பெரிய நிறுவனத்தின் ஒரே ஒரு தமிழ்த்தினசரி தினகரன்.

தினகரனை இலங்கையின் தமிழ்த் தேசியப்பத்திரிகையாக வளர்த்தெடுத்த பெருமை பேராசிரியர் க. கைலாசபதியையே சாரும். இவருக்கு முன்னர் கே.க.ப. நாதன் தினகரன் ஆசிரியராக பணியாற்றினார். பின்னாளில் இவர் கொழும்பில் தினபதி, சிந்தாமணி, வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜத்தின் தந்தி மாலைத்தினசரியின் ஆசிரியரானார். பாரதி இயல் ஆய்வாளராகவும் அறியப்பட்டவர் பேராசிரியர் க. கைலாசபதி. அக்காலப்பகுதியில் இருவேறு கருத்தியல்கள் இலக்கிய உலகில் நிலவியதாக இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கைலாஸ் பத்திரிகைத்துறையுட் புகுந்த காலம் மேலைத்தேய நாகரிகமும் ஆங்கில மொழியும் தம் ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கிய காலம். பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமின்றிப் பண்பாட்டுத் துறையிலும் அந்நிய ஆதிக்கம் தளரத் தொடங்கிய காலம்.

சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள், இந்நாட்டில் தங்கள் இருப்பு, வரலாறு, வருங்காலம், தனித்துவம் முதலானவை குறித்து உத்வேகத்துடன் உணர சிந்திக்கத் தலைப்பட்ட காலம்.

“தமிழ்மொழி உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சுதேச மொழி முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை, புதிதாக உருவான கலாசார அமைச்சு தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தமை, அதுவரை ஆங்கிலப் பத்திரிகைகளே பெற்றிருந்த அரசியல் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்களைப் பரவலாகச் சென்றடைந்த சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளும் பெறத்தக்க வாய்ப்புத் தோன்றியமை, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு காரணமாக இந்திய எழுத்தாளர்களுக்குப் பணம் அனுப்பும் வசதி கட்டுப்படுத்தப்பட்டமை போன்றவை யாவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவை” என்று விரிவாக கைலாசபதியின் தினகரன் பிரவேசம் பற்றி பேராசிரியர் சி. தில்லைநாதன் தனது பன்முக ஆய்வில் ‘கைலாசபதி’ என்ற கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

தினகரனின் தொடக்க காலப்பகுதியில் சிறுகதைகள், தொடர்கதைகள் படைத்தவர்கள் சென்னை மவுண்ட் ரோட்டையும் மெரீனா பீச்சையும் பகைப்புலமாகக் கொண்டு எழுதினார்கள். இதனால் அன்றைய ஈழத்து தமிழ்த்தேசிய படைப்பிலக்கியம் தேக்கம் கண்டது. அதனை மாற்றியவர்தான் கைலாசபதி.

அவர் இலங்கை எழுத்தாளர்களுக்கு தினகரனில் களம் தந்து ஊக்கமளித்தார். பத்திரிகையின் செல்நெறியை வகுத்தார்.

கைலாசபதிக்குப் பின்னர் தினகரன் ஆசிரியராக பொறுப்பேற்ற இ.சிவகுருநாதன், யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டம் பெறுவதற்காக சமர்பித்த ஆய்வில், ‘தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சிகாண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்’ என்று குறிப்பிட்டிருப்பதையும் பேராசிரியர் தில்லைநாதன் ஊடாக நாம் அறிகின்றோம்.

கைலாசபதி, தான் மாத்திரம் வளராமல், தன்னைச்சூழ இருந்தவர்களையும் வளர்த்தெடுத்தார். அவர்கள் பத்திரிகையாளர்களாயினும் படைப்பாளிகளாயினும் கலைஞர்கள், ஓவியர்கள், கார்டுனிஸ்ட்டுகளாயினும் சிற்றிதழ்காரர்களாயினும் அவர்கள் அனைவரும் தத்தமது துறைகளில் ஆரோக்கியமாக வளர்வதற்கு உற்றதுணையாக விளங்கியவர் கைலாசபதி.

மகாகவி பாரதியாரும் பத்திரிகையாளர்தான். பாரதியாரைச் சுற்றியும் எப்பொழுதும் நண்பர்கள் இருப்பர் என அவரது வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்கின்றோம். அவர்கள் இருக்குமிடத்தில் வாதங்களும் இடம்பெறும். யார் யார் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பது பற்றிய கலந்துரையாடல்கள் நிகழும். மொழிபெயர்ப்புகள் தொடர்பாக பேசப்படும்.

தமிழ் இலக்கிய உலகில் தாக்கத்தை ஏற்படுத்திய பாரதி சிந்தித்த கிருதயுகம் தொடர்பாக எழுதியிருக்கும் மு. தளையசிங்கத்திற்கு, கைலாசபதியின் மார்க்ஸீய சிந்தனைகளில் அபிப்பிராய பேதங்கள் இருந்தன. கைலாசபதியை விமர்சித்தவர்களில் மு.தளையசிங்கம் முக்கியமானவர். இவர் கண்டியிலிருந்து வெளியான ‘செய்தி’ எனும் பத்திரிகையில் எழுதிய ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி என்ற தொடரில் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்:

“தினகரன் ஆசிரியரான கைலாசபதி, இலக்கியத்தைப் பற்றிய ஓரளவுக்குத் தரமான பொதுவுடமைக் கருத்துக்களை மட்டும் புகுத்தவில்லை. கூடவே அதே வண்டியில் கா. சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரத்னா போன்ற இலக்கியம் பற்றிய தரமான கருத்துக்களையுடைய வேறு பலரின் செல்வாக்கையும் பக்கபலத்தையும் சேர்த்துக் கொண்டு வந்தார்.” இவ்வாறு தளையசிங்கம் பதிவு செய்துள்ளார். கைலாசபதியை தமது எழுத்துக்களில் விமர்சித்துவந்த மு.தளையசிங்கமும் கூட தினகரனை இலக்கியத்தரமாக வெளியிடுவதற்கு அவர் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முயற்சிகளை விதந்து பாராட்டியிருக்கிறார்.

இவர்கள் இருவரதும் சிந்தனைகளை பாரதியின் வெளிச்சத்திலிருந்தே இலக்கிய உலகம் அவதானித்திருக்கிறது.

கைலாசுக்குப் பின்னர், தினகரன் ஆசிரியப்பொறுப்பை ஏற்ற இ.சிவகுருநாதன் மாத்திரமே இங்கு நீண்ட காலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளராவார். இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக 1981 இல் தெரிவான சிவகுருநாதன், அதன் பின்னர் 1983 – 84 காலப்பகுதியிலும் அந்தப் பதவியை வகித்தவர். பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் அங்கு வெளியான ‘இளங்கதிர்’ என்னும் இதழின் ஆசிரியராகவும் இயங்கியிருக்கும் இவர், அங்கு ‘இந்து தர்மம்’ என்னும் மற்றும் ஒரு இதழ் வெளிவருவதற்கும் முக்கிய பங்காற்றியவர்.





ஈழத்து இலக்கிய உலகையும் இங்குள்ள படைப்பாளிகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்த சிவகுருநாதன், தினகரனில் பல சந்தர்ப்பங்களில் பாரதி தொடர்பான ஆசிரியத் தலையங்கங்களும் எழுதியுள்ளார்.

தினகரன் வாரமஞ்சரியும் காலத்துக்குக் காலம் பாரதி ஆய்வுகளை வெளியிட்டும் மறுபிரசுரம் செய்தும் வந்திருக்கிறது. ருஷ்ய எழுத்தாளர் ஏ. ஷெலிஷேவ், கைலாசபதி, செ. கணேசலிங்கன், இளங்கீரன், சி. மௌனகுரு, சொக்கன், க. நவசோதி, மு. கனகராசன், மு. சடாட்சரன், வேல் அமுதன், அராலி வெ.சு. நடராசா, அன்புமணி, க. கந்தசாமி, அந்தனிஜீவா, பொன்னி ஆனந்தன்,சகுந்தலா நல்லையா, ஏ. இக்பால், தமிழக எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் ஆகியோரின் பாரதி பற்றிய ஆக்கங்களும் ஸ்ரீதேவகாந்தன், ஷெய்கு இஸ்ஸதீன், மு. துரைசாமி, பாண்டியூரான், வளவை வளவன், சி. ஆறுமுகம், முதலான பலரின் கவிதைகளும் பாரதி நூற்றாண்டு காலத்தில் தினகரன் வாரமஞ்சரியை அலங்கரித்திருக்கின்றன. தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் காலம் அறிந்து அதற்குப் பொருத்தமாகவும் பல விடயங்களைச் செய்திருக்கிறார். பாரதி நூற்றாண்டு காலத்தில்தான் பேராசிரியர் கைலாசபதி கொழும்பு அரசினர் மருத்துவமனையில் 1982 டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி காலமானார். தினகரன் நாளேடு கடந்து சென்றிருக்கும், ஒன்பது தசாப்த காலத்தில் அரசியல், சமூகம், பொருளாதார, ஆன்மீகம், தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கியது போன்று , கலை, இலக்கிய செய்திகளுக்கும் பக்கங்களை ஒதுக்கியிருக்கிறது. தினகரன் வாரமஞ்சரி சிறுகதைகள், தொடர்கதைகள், மற்றும் இலக்கிய புதினங்களுக்கு போதியளவு களம் வழங்கியிருக்கிறது. தற்போது கனடாவில் ‘தமிழர் தகவல்’ மாத இதழை வெளியிட்டுவரும் எஸ். திருச்செல்வம் இலங்கையிலிருந்த காலப்பகுதியில் தினகரன் வாரமஞ்சரியில் ‘அறுவடை’ என்ற இலக்கியப்பத்தியை எழுதி வந்தார்.

தற்போது இங்கிலாந்தில் ‘புதினம்’ என்ற இதழை நடத்திவரும் ஈ. கே. ராஜகோபாலும், தினகரனில் பணியாற்றிய காலப்பகுதியில் கலை, இலக்கியப்பத்திகளை எழுதினார்.

இவ்வாறு தினகரன் பாசறையில் வளர்ந்தவர்களும் புலம்பெயர்ந்து சென்ற பின்னரும் இலக்கியப்பணியும் ஊடகப்பணியும் தொடருகின்றார்கள்.

சமகாலத்தில் இலங்கையில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளில் ஊடகக்கற்கை நெறியில் மாணவர்கள் ஈடுபடுகிறார்கள். பல மின்னிதழ்கள் தோன்றியிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஊற்றுக்கண்ணாக விளங்கியிருக்கும் தினகரனின் 92 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவோம். அதன் வெற்றிப்பயணம் நூற்றாண்டுகள் கடந்து தொடர வாழ்த்துவோம்!



முருகபூபதி
(அவுஸ்திரேலியா)

92வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் தினகரனுக்கு எமது நல் வாழ்த்துக்கள்!!




Ram Bros
ராம் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
இல, 140, மெயின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி : 0112323127, 0112447698, தொலைநகல் : 0112543424.
Email : rambros1967@gmail.com

தினகரன் பத்திரிகைக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!!



பண்டிகைக்காலத்தில் முழுக் குடும்பத்திற்குமான ஆடைத் தெரிவுகளுக்கு தலைநகரில் சிறந்த இடம்

ரஞ்சனாஸ்
பிரைவேட் லிமிட்டட்
127, மெயின் வீதி, கொழும்பு 11,
தொலைபேசி : 0112320824, 0112320834, 0112320900. Fax : 0112331714
Mail : info@ranjanas.lk, Web : www.ranjanas.lk

தினகரன் THINAKARAN வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள் 1932–2024 ANNIVERSARY

# சர்ச்சைகளை தூண்டாமல் என்றும் நிதானமான பயணத்தில் தினகரன்

நாட்டின் தேசிய நாளிதழான தினகரனின் வரலாறு 92 வருடங்களைத் தொட்டு நிற்கும் இந்நாளில், இப்பத்திரிகையின் பயணம் எவ்வாறு அமைகிறது என்பதை சமூகநோக்கில் ஆராய்வது அவசியம். வாசகர்கள் மத்தியில் இது பற்றிய புரிதல்கள் இருப்பது அவசியம்.

தார்மீகப் பொறுப்புடன் சகலரையும் ஒரே குடும்பத்தினர் என்ற கோணத்தில் தினகரன் நோக்குகிறது. ஊடக தர்மத்தின் குறிக்கோள்களை உயிரூட்டி வளர்க்கும் தினக ரின் பணிகளுக்கு வாசகர்களின் ஒத்துழைப்புக்களே உற்சாகமாக அமைகின்றன.

பல்லின சமூகங்கள், பல்வேறு சமயங்கள் மற்றும் கலாசார நம்பிக்கைகள் உள்ள மக்கள் வாழும் நாடு இலங்கை. இம்மக்களின் நம்பிக்கைகளைப் பாதுகாக்கும் பணிகளை தினகரன் நேர்த்தியுடன் செய்கிறது. தினகரன் பத்திரிகையின் 92 வருடப் பயணங்களை பின்னோக்கிப் பார்ப்போர் இதைப் புரிந்து கொள்வர்.

அபிமான வாசகர்களாலும், தினகரனின் கடந்த காலச் செய்திகளை வாசித்து உணர்வோராலும் இந்த உண்மையை உணர முடியும்.

திறமையான ஆசிரியர்களுடன், பொறுப்புமிக்க ஊழியர்கள் பத்திரிகையின் உன்னத நோக்கை உயிரூட்டுவதற்கு உழைப்பதும் தினகரனின் சமூக நோக்கிலான பயணம் வெற்றியளிக்கப் பங்களித்துள்ளது.

பத்திரிகையின் ஆரம்பத்தில் கட்டமைக்கப்பட்ட சமூக நோக்கிலான பத்திரிகையின் பார்வை, இன்றளவும் அதே இலக்கில் உச்சந்தொட உழைத்துக் கொண்டிருக்கிறது. கல்வி, கலாசார மற்றும் சமூக முன்னோடிச் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கட்டுரைகள், ஆசிரியர் தலைப்புச் செய்திகள் மற்றும் முன்பக்கச் செய்திகள் என செய்திகளைப் பிரசுரித்து, பிரபல்யப்படுத்தி சமூகங்களை விழிப்பூட்டுவதுடன், இத்தகைய எழுத்தாளர்களுக்கும் சிறந்த இடமும்,களமும் இங்கு வழங்கப்படுகின்றன.

இது தொடர்பில், சுவாரஸ்யங்கள் அடங்கிய கட்டுரைகள் ஆக்கங்களை கால, நேரங்கள் கருதி பொருத்தமான சூழலில் வெளியிடுகிறது தினகரன் பத்திரிகை. இதனால், பல அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டும், இன்னும் சில உடன் நிறுத்தப்பட்டும் உள்ளன. போட்டி மனநிலையில் சகலதும் வர்த்தகமயமாகிப் போன இன்றைய உலகில், தினகரன் பத்திரிகை மாத்திரம் சமூக நோக்கிலேயே செயற்படுகிறது.

ஊடக தர்மத்திலிருந்து நெறி பிறழாமல் வாசகர்களை வழிப்படுத்துவதில் தினகரன் பத்திரிகைக்கு தனியிடமுண்டு. பத்திரிகை உலகில் தினகரனின் வகிபாகம் தனித்துவமாக உள்ளமைக்கு காலவோட்டம் கருதிய இதன் கடமைப்பாடுகள், செயற்பாடுகள் களம் அமைத்துள்ளன.

மத நம்பிக்கைகளை அவமதித்தல், சமூகங்களை சீண்டி விடுதல், அரசியலுக்காக மக்களை பிளவுபடுத்தல் மற்றும் கட்சிசார் நிலைப்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற பக்கச்சார்பான செயற்பாடுகளிலிருந்து விடுபட்டுச் செயற்படுவதால், பலரும் தினகரனின் நம்பகத்தன்மையில் திருப்தியுடன் உள்ளனர்.

தவிர்க்கப்பட வேண்டியவை, தணிக்கைக்கு உட்பட வேண்டியவை மற்றும் தெளிவாக வாசகர்களிடம் சென்றடைய வேண்டியவை என்றெல்லாம் செய்திகளைத் தரம் பிரித்து பொறுப்புடன் செயற்படுவதால்தான், வாசகர்களின் நம்பிக்கையை தினகரன் வென்றுள்ளது. உள்ளதை, உள்ளவாறு வாசகர்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் ஒரு பக்குவம், நிதானத்தைப் பேணுவதற்கு தினகரன் தவறுவதில்லை.

வெளியிடப்போகும் செய்திகளால் வரவுள்ள விபரீதங்கள் கருதி, சில செய்திகள் சிலேடையாக அல்லது மேலெழுந்தவாரியாக பிரசுரிக்கப்படுவதுண்டு. இதனால்,அரச சார்புப் பத்திரிகை என்ற சாயலுக்குள் இப்பத்திரிகை சிலரால் நோக்கப்படுகிறது .

வியாபாரப் போட்டிகளால் எழும் வேறுபாடுகளால் ஒரு சிலர், இச்சாயத்தை பூசி விடுகின்றனர். நாட்டை அமைதியாக வழிநடத்துவதில் அரசாங்கத்துக்கு எந்தளவு பொறுப்புள்ளதோ, அதேயளவு பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடமைப்பாடு தேசிய பத்திரிகையான தினகரனுக்கு உள்ளதை வாசகர்கள் மறத்தலாகாது.

பொறுப்புள்ள அரசாங்கப் பத்திரிகையாகச் செயற்படும் தினகரன் தனியே அரசியல் சார்பு நிலையுடன் செயற்படவில்லை. ஆட்சி மாற்றங்களுக்கு ஏற்ப பத்திரிகையின் போக்கு மாற நேரிட்டாலும், சமூக நோக்கிலிருந்து விடுபடும் தேவைகள் எமக்கு எழுவதில்லை. அரசாங்கத்தின் சமூக நலன் சார்ந்த விடயங்களை பிரதானப்படுத்தியே பத்திரிகை செயற்படுகிறது. சில வேளைகளில், ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் அரசாங்கம் வேறு கட்சியாகவும் இருந்த சந்தர்ப்பங்களிலும் சமநிலை மற்றும் நடுநிலை பேணப்பட்டே வருகிறது.

சில நேரங்களில், தீர்மானம் எடுப்பது கூட சங்கடமாகத் தோன்றிய காலங்களையும் இப்பத்திரிகை கடந்து வந்துள்ளது. சாமர்த்தியமான ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையிலேயே, தர்மசங்கடமான கட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இந்த அனுபவங்களின் பதிவுகளுடன் இன்றும் சில ஊழியர்கள் இங்கு பணியாற்றுவதைக் குறிப்பிட வேண்டும்.

வெளியாரின் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது சமூக நோக்கிலான பயணத்தை முன்னெடுப்பதில், தினகரன் ஆசிரியர் குழாம் எடுக்கும் முயற்சிகளே போதுமானவை.

கடந்த 92 வருடங்களில் எதிர்கொண்டதை விடவும் இன்னும் பல மடங்கு சவால்களை இப்பத்திரிகை எதிர்நோக்கவுள்ளது. விஞ்ஞானம்,தொழினுட்பங்களின் அதீத வளர்ச்சி, உள்ளங்கையில் உலகை பார்ப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டுள்ள யுகமிது. இதனால், பத்திரிகைகளுடன் மட்டுமல்ல சமூகவலைத்தளங்களிலிருந்தும் சவால்கள் வரவுள்ளன.

ஏற்கனவே வந்த இவ்வாறான சவால்களை சமாளிப்பதில் சில நடைமுறைச் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்ததையும் வாசகர்களின் புரிதலுக்கு விடுகிறோம். இந்நிலையில், பத்திரிகையின் எதிர்கால பயணத்தில் சந்திக்க நேரும் சவால்களை வெல்வதற்கான வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன. நம்பிக்கையான, நடுநிலையான பத்திரிகை என்ற நற்பெயரின் அடித்தளத்திலிருந்தே, இந்த சவால்கள் தகர்க்கப்படவுள்ளன.

ஏ.ஜி.எம். தௌபீக்
தினகரன் ஆசிரியபீடம்



# இலங்கை தமிழ் இதழியலும் தினகரன் ஊடக ஆளுமையும்

உலக மொழிகளில் இன்றளவும் தனது சீரிளமைத் திறன் குன்றாது உயிர்ப்புடன் வாழ்வது தமிழ் மொழியே. இந்தப் பெருமை நீடித்து வளர்ந்தோங்கச் செயல்பட வேண்டியது நமது நீங்காத வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், உயிர்ப்புடன் வாழ்வதற்கும் பத்திரிகைகளின் பங்கு அளப்பரியது. மக்களை மிக அதிகளவில் சென்றடையும் எழுத்தாவணங்களாக பத்திரிகைகள் விளங்குகின்றன.

தொல்காப்பியரும், திருவள்ளுவரும் எந்த மொழியில் எழுதினார்களோ, பேசினார்களோ அந்த மொழியை இன்றளவும் நாமும் பேசுகிறோம், எழுதுகிறோம் என்பதுதான் நமக்குள்ள தலையாய பெருமையாகும்.

அந்தப் பெருமைகளுக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் பத்திரிகைகள் சான்று பகர்கின்றன. கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகைகளின் செல்வாக்கு குறைத்து மதிப்பிட முடியாதது.

வரலாறு எழுதுதலில் முதல்நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகளின் உசாத்துணை அடிப்படையானதும் முக்கியமானதும் ஆகும். மக்களின் சிந்தனையில் பத்திரிகைகள் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன என்பதும் உண்மையே.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த நோக்குடன் மக்களுடன் உறவு கொண்டாடி, உலக கண்ணோட்டத்துடன் வாழ்ந்த தமிழர்கள், இன்று மொழியையும் பண்பாட்டினையும் சிறிது சிறிதாக இழந்து வாழும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இல்லை என்றால், காலப்போக்கில் தமிழ்மொழி அருகி அழிந்து விடும்.

ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகைத் துறை என்பது மிக முக்கிய கூறுகளில் ஒன்றாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையைப் பார்த்தோமானால், செய்தி மற்றும் தகவல்கள் எவ்வாறு சமூகத்தின் அடிப்படை அம்சமாக விளங்கியுள்ளது என்பதனை அறியமுடிகின்றது.



வாசிப்பினைப் பரவலாக்கியதன் மூலம் கல்வியறிவில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்திய இப்பத்திரிகைகள் செய்திகளையும் தகவல்களையும் மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதில் முக்கிய பங்களிப்பினை ஆற்றியுள்ளன.

செய்யுள் நடையிலிருந்து உரைநடைக்குத் தமிழ் மாறிக் கொண்டிருந்த காலத்தில் வெளியாகத் தொடங்கிய இப்பத்திரிகைகள் தொடர்ச்சியாகத் தமிழ் உரைநடையின் போக்கில் முக்கிய செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

இன்று பத்திரிகைகளே உலகளாவிய தொடர்பு மொழியாகப் பேருருவம் எடுத்துள்ளன. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு மொழிகளில் பத்திரிகைகள் வெளிவந்தாலும், அவற்றின் பொதுக்கருத்து மக்கள் தொடர்பு என்பதேயாகும்.

பல்வேறு நாடுகளில் தமிழ்மொழியை அறியாமலேயே தமிழ்ப் பெற்றோரின் எதிர்காலக் குழந்தைகள் வளர வேண்டிய அவலம் நேர்கிறது. வெளிநாடுகளில் வாழ நேர்ந்துள்ள குழந்தைகளுக்கு தமிழ்மொழி மட்டுமல்ல, மொழியின் அடிப்படையில் உருவான பண்பாடு, இசை உள்ளிட்டவை எதுவும் தெரியாது முற்றிலும் அந்நியமான சூழ்நிலையிலே வளர நேரிட்டுள்ளது.

தற்போது அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்தியா, இலங்கை, மியான்மர், மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, அமெரிக்கா, கனடாவில் பிறக்கும் மழலைகளை எடுத்துக் கொண்டால் தாய்மொழியான தமிழில் பேசவும், எழுதவும் தெரிந்தவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது.

ஒரு மொழியின் பயன்பாடு, அந்த மொழி பேசும் மக்களிடையே குறைந்துகொண்டு போவது, இறுதியில் அந்த மொழியின் அழிவுக்கே வழிவகுக்கும் என்பது திண்ணம்.

இலங்கை பத்திரிகைகளின் தோற்றம்:

இலங்கை பத்திரிகை வரலாற்றில் முதலாவதாக, வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமாரால் 1841 இல் 'உதயதாரகை' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் *The morning star* என்றும் தமிழில் 'உதயதாரகை' என்றும் அழைக்கப்பட்ட இப்பத்திரிகை, இரு மொழிகளிலும் வெளிவந்தது. அமெரிக்க மிஷனரியின் இப்பத்திரிகை வெளியீடு மற்றைச் சமயத்தவரையும் பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது.




1876 இல் *The catholic Gardian* என்ற 'சத்திய வேத பாதுகாவலன்' என்ற பத்திரிகை கத்தோலிக்கத் திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டது. இதன்பின் இந்து சமயச்சார்பான 'இந்துசாதனம்' 11.09.1889 இல் *Hindu organ* என்ற பத்திரிகையாக வெளிவரத் தொடங்கியது. சுவாமி விவேகானந்தரின் சர்வசமய மாநாட்டு வெற்றியை முதன் முதலில் சிறப்பாகக் கொண்டாடிய தமிழ்ப்பத்திரிகை என்ற சிறப்பையும் இப்பத்திரிகை பெற்றது.

உதயமாகிய தினகரன் :

இலங்கை பத்திரிகையியலில் தினகரன் தனக்கென தனிமுத்திரை பதித்துள்ளது. இலங்கையின் தலைநகர் கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு தேசியத் தமிழ் நாளிதழ் தினகரன் ஆகும்.

இப்பத்திரிகை 1932 இல் மார்ச் 15 ஆம் நாள் தலைநகர் கொழும்பில் இருந்து முதன் முதலாக வெளியிடப்பட்டது. இலங்கையின் முன்னணி வெளியீட்டு நிறுவனமான 'லேக் ஹவுஸ் நிறுவனம்' இதனை வெளியிட்டு வருகிறது. 1948 மே 23 முதல் தினகரன் வாரமஞ்சரி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியாகத் தொடங்கியது.

தினகரன் பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக கே. மயில்வாகனம் பணியாற்றினார். அவருக்குப் பின்னர் வி. ராமநாதன், எஸ். ஈஸ்வர ஐயர், எஸ். கிருஷ்ண ஐயர், ரி. எஸ். தங்கையா, வீ. கே. பீ. நாதன், பேராசிரியர் க. கைலாசபதி, ஆர். சிவகுருநாதன் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




இலங்கையில் பல பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்தின் பின்னர் மூடப்பட்டு விட்டன. ஆயினும் அமரர் டி.ஆர். விஜேவர்தனவால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகள் முக்கியமாக டெயிலி நியூஸ் (*Daily News*), தினமின, சிலுமின, தினகரன், தினகரன் வாரமஞ்சரி, ஒப்சேவர் போன்ற பத்திரிகைகள் இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிலைத்து நிற்கின்றன.

விஜேவர்தனவின் வரலாற்றுப் பணி:

இலங்கையில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பெயரும், புகழும் பெற்று இன, மத பேதங்களைக் கடந்து ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய பத்திரிகைகள் அமரர் விஜேவர்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மக்கள் பயனடையும் முறையிலே அவர்களின் விருப்புகளை நன்கு ஆராய்ந்து அவர் செயற்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

அக்காலகட்டத்தில் பெயரும், புகழும் பெற்று விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம், சேர். முத்துக்குமாரசுவாமி, சேர். வைத்தியலிங்கம் துரைசாமி, டொக்டர் ஆனந்தகுமாரசாமி, சேர். பாரன் ஜயதிலக்க, டொக்டர் ரி.பி. ஜாயா, ஈ. டபிள்யூ பெரேரா, டி. எஸ். சேனநாயக்கா, எப். ஆர். சேனநாயக்கா போன்ற பெருமக்களோடு இணைந்து மூன்று மொழிகளிலும் இப்பத்திரிகைகளை ஆரம்பித்து வெற்றியும் கண்டார்.

தமிழ்ப் பத்திரிகையான 'தினகரன்' சிறந்த பத்திரிகை ஆசிரியர்களால் திறம்பட நடத்தப்பட்டு வந்தமையை இங்கு குறிப்பிடவேண்டும். முக்கியமாக பேராசிரியர் கைலாசபதி, அமரர் சிவகுருநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இன்றைய தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஊடகத்துறையில் சிறப்பான அனுபவம் பெற்றவர். தினகரன் பத்திரிகையின் முன்னேற்றத்திற்காகவும், இளம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியும் பல செயற்பாடுகளை நெறிப்படுத்தி வருகின்றமையைக் காணலாம்.

அதேவேளை தினகரன் பத்திரிகையில் பணிபுரியும் சகலரும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு பத்திரிகையின் வளர்ச்சிக்காக தம்மால் இயன்ற ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருவதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா
அவுஸ்திரேலியா இலங்கை தமிழ் இதழியலும்

# தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932-2024 ANNIVERSARY

# மக்களின் நலனுக்காக தினகரன் ஆற்றிய அர்ப்பணிப்புகள் ஏராளம்!

## சமூகப் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்தியம்புவதில் முன்னணிப் பத்திரிகை தினகரன்






இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் பேரபிமானம் பெற்ற தினசரியாக வீறுநடை போட்டு வெளியாகிக் கொண்டிருக்கின்றது தினகரன் பத்திரிகை.

இப்பத்திரிகையானது தனது 92 ஆவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றதென்பது தமிழ் கூறும் நல் உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு முக்கிய செய்தியாகின்றது.

ஒரு தினசரிப் பத்திரிகை ஒன்பது தசாப்த காலத்தை வெற்றியுடன் கடந்து 92 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதென்பது சாதாரண விடயமல்ல.

தனது 92 ஆண்டுகாலப் பயணத்தில் பலவிதமான சவால்களையும் இடர்களையும் கடந்து துவண்டு விடாமல் வெற்றியுடன் நடைபோட்டு வருகின்ற அபிமான பத்திரிகையாக தினகரன் விளங்குகின்றது.

அனைத்து வாசகர்களுக்கும் போதிய விருந்தளிக்கின்ற தமிழ் இதழாகப் பவனி வருகின்றது இப்பத்திரிகை.

நாம் நவீனத்துவத்துக்குள் காலடி எடுத்து வைத்தாலும், அச்சு வடிவில் ஊடகத்தைப் பார்க்கின்ற போது அடையும் திருப்தியும் தெளிவும் மட்டற்றவை.

தினகரன் பத்திரிகையானது சமுதாயத்தில் சகல மட்டங்களிலுமுள்ள மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றிருக்கும் நிலையில்தான் , 92 ஆவது அகவையில் காலூன்றுகிறது.

வாசகர்கள் மத்தியில் தினகரன் பத்திரிகை நன்மதிப்பைப் பெற்றமைக்கு பல காரணங்களை கூறலாம்.

குறிப்பாக சமூகம் சார்ந்த பிரச்சனைகளை முன்னிலையில் முன்வைப்பதில் தினகரனுக்கு நிகர் தினகரனே!

நான் ஒரு சுயாதீன ஊடகவியலாளன். ஊடகத்துறையில் 40 வருட கால வரலாறு கொண்டவன் நான். இதுவரை ஆயிரக்கணக்கான செய்திகள் கட்டுரைகளை தினகரனில் எழுதியுள்ளேன்.

**தொடரட்டும் தினகரனின் வெற்றிப்பயணம்! எமது அபிமான பத்திரிகையின் 92 ஆவது பிறந்தநாளில் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.**

குறிப்பாக சமூகம் சார்ந்த பல்வேறான விடயங்களை கட்டுரை வடிவில் பெருமளவில் பிரசுரித்தது தினகரன் பத்திரிகை என்பதில் நான் நன்றி கலந்த பெருமிதம் கொண்டுள்ளேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளை உலகத்துக்கு வெளிக்கொணர்ந்த ஊடகம் தினகரன் எனலாம்.

குறிப்பாக ஒரு விவகாரத்தை இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நீண்ட காலம் தொடர்ந்த பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்களின் போராட்டத்தை உலகுக்கு வெளிப்படுத்திய முதன்மையான பத்திரிகை தினகரன் என்பதில் சந்தேகமில்லை. இது தொடர்பாக நிறைய கட்டுரைகளை நான் எழுதியுள்ளேன். அனைத்துக் கட்டுரைகளையும் தினகரன் பிரசுரித்து உதவியது. அதன் பயனாக இந்த அப்பாவி மக்களின் பிரச்சினையை ஒட்டுமொத்த நாடுமே அறிந்து கொண்டது.

மேலும் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் தமிழர்கள் எதிர்கொண்ட இன்னல்கள், உயிரழிவுகள் போன்ற சம்பவங்கள் தொடர்பாக ஏராளமான கட்டுரைகளை தினகரன் வெளிக்கொணர்ந்து வந்துள்ளது. இக்கட்டுரைகள் அதிகளவில் என்னாலேயே எழுதப்பட்டன.

வீரமுனை படுகொலை, திராய்க்கேணி படுகொலை, உடும்பன் குள படுகொலை மற்றும் சூறாவளி, சுனாமி, பெருவெள்ளம் போன்ற அனர்த்தங்கள் அத்தனையையும் கட்டுரைகளாகப் பிரசுரித்த பெருமை தினகரனுக்கு உள்ளது. உதவிக் கல்விப்பணிப்பாளராக, ஊடகவியலாளராக, எழுத்தாளராக, சமூகசெயற்பாட்டாளராக, இந்துசமயப் பணியாளனாக என்றெல்லாம் பல்வேறு தளங்களில் நான் இன்று சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருவதற்கு தினகரன் பத்திரிகை வழங்கி வருகின்ற ஆதரவும் பிரதான காரணமாகும்.


ஒரு சமூகத்தின் அளவுகோல் ஊடகம் என்பார்கள். அது உண்மை. மக்களை அரசியல் மயப்படுத்தி வழிநடத்துவதில் ஊடகங்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஜனநாயக விழுமியங்கள் இதற்கு வித்திட்டு வழிகாட்டி நிற்கின்றன. உலகெங்கும் இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பினால் இருந்த இடமே தெரியாமல் மறைந்து போன பத்திரிகைகள் ஏராளம். இலங்கையில் கூட பல பத்திரிகைகள் நிரந்தரமாகவே மூடப்பட்டுவிட்டன. அவற்றில் ஓரிரு தமிழ்ப் பத்திரிகைகளும் அடங்குகின்றன.

ஆனால் இலத்திரனியல் ஊடகங்களின் படையெடுப்புக்கு மத்தியிலும் தோல்வியுறாமல் நிமிர்ந்து நிற்பதென்பது தினகரனின் பெரும் சாதனையாகும். தொடரட்டும் தினகரனின் வெற்றிப்பயணம்! எமது அபிமான பத்திரிகையின் 92 ஆவது பிறந்தநாளில் வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.



**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
(ஊடகவியலாளர்/ உதவிக் கல்விப்பணிப்பாளர்)



New Sri Lanka Muslim Congress
புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
නව ශ්‍රී ලංකා මුස්ලිම් කොංග්‍රසය
سريلانكا مسلم كونجرس الجديد
NEW SLMC
258/1, Wolfendhal Street, Colombo-13, Sri Lanka. T.P : 0777-570639 / 076-6473725

தேசிய தமிழ்ப் பத்திரிகை தினகரனின் 92 ஆம் ஆண்டு பிறந்ததின நிகழ்வையொட்டி எமது கட்சி சார்பில் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.
முபாறக் முப்தி, ஸ்தாபக தலைவர், சிரேஷ்ட ஆலோசகர்
முஸம்மில் அபூசாலி, தேசிய தலைவர்
முஸ்னத் முபறாக், செயலாளர்
'புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்', New SLMC,
258/1, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13,
0777570639

# தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932–2024 ANNIVERSARY

## தினகரன் எனும் ஆலமரத்தின் விழுதுகளாக நின்றோர் ஏராளம்

மனிதனை மனிதனோடு இணைப்பது செய்தியே. ஆதிமனிதன் தொடங்கி இன்றுவரை செய்தி முக்கியத்துவம் வாய்ந்தது. மனிதன் அக்காலத்தில் தான் சொல்ல வந்ததை சைகை முலமே தெரிவித்தான். காலம் செல்லச் செல்ல மனித நாகரிகம் வளர்ச்சி அடையத் தொடங்கியது.

அதேவேளை மனிதர்களுக்கு இடையிலான தொடர்பாடலும் பல பரிமாணங்களைக் கடந்து வந்தது. இறுதியாக இன்று நாம் ஊடகம் என்ற ஒரு மைல்கல்லில் நிற்கின்றோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனர்கள் தங்களுடைய தொடர்பாடலை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றார்கள். அவர்கள் துணியில் தங்களுடைய சித்திரங்கள் மற்றும் எழுத்துக்களை வடிவமைத்தார்கள். தற்போது நாம் பயன்படுத்தும் கடதாசி அவர்களின் அடுத்த கண்டுபிடிப்பாகும்.

ஊடகம் தற்போது அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் தனது எண்ணங்களை பிரதிபலித்த மனிதவாழ்வில் பத்திரிகை என்னும் ஊடகம் பிரித்தானியர் காலத்திலேயே இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் பத்திரிகை வரலாற்றின் ஆரம்ப காலம் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலமாகும். 1802 ஆம் ஆண்டு 'த கவர்ன்மென்ட் கெஸட்' என்னும் ஆங்கில வாரஇதழினை இலங்கையின் ஆங்கிலேய ஆட்சி நிர்வாகம் வெளியிட்டது. அரசின் அறிவித்தல்கள் அரசின் விளம்பரங்களைக் கொண்ட வர்த்தமானி பத்திரிகையாகவே இது அமைந்தது.

கோல்புறூக் பரிந்துரைகளில் காணப்பட்ட குறைகளை சுட்டிக்காட்டி அதிருப்தியைத் தெரிவிக்க கொழும்பு வாழ் ஆங்கில வர்த்தகக் குழுவினால் 1834 ஆம் ஆண்டு 'Observer and Commercial Advertiser ' என்னும் பத்திரிகை ஜோர்ச் வின்டர் என்பவரை ஆசிரியராகக் கொண்டு இலங்கையில் முதன்முதலாக பத்திரிகையாக வெளியிடப்பட்டது.

1918 இல் டி. ஆர்.விஜேவர்த்தன டெய்லி நியூஸ் நாளிதழை ஆரம்பித்தார் 1923 இல் சிலோன் ஒப்சேவரையும் தொடர்ந்து தினமின சிங்கள நாளிதழையும் விலைக்கு வாங்கினார். அவர் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன் லிமிடெட் அதாவது பத்திரிகையின் தாய்வீடான லேக்ஹவுஸ் நிறுவனத்தை உருவாக்கினார்.

அந்நிறுவனத்தால் 1932 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதன் முதலாக தினகரன் எனும் தமிழ்மொழி பத்திரிகை வெளியிடப்பட்டது. 1948 மே 23 ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்பட்டது.

தினகரன் பத்திரிகையின் பெரும் வளர்ச்சிக்காக ஆசிரியப் பீடத்தில் பணியாற்றியவர்கள் பலர்.

தினகரன் பத்திரிகை திறம்பட தொடர்ந்து வெளிவருவதற்காக தோளோடு தோள் நின்று உழைத்தவர்கள் ஆயிரக்கணக்கானோர். ஆலமரத்தின் விழுதுகளான அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களேயாவார்.

**வீ.ஆர்.வயலட்**
**தினகரன் ஆசிரியபீடம்**

## தமிழ்பேசும் மக்கள் உள்ளத்தில் ஒளியேற்றியவன் தினகரன்!

தேன் தமிழ்
பேசும் தினகரனே!
இலங்கை சூழ்ந்த
இருள் அகற்றவும்,
காரிருள் கலையவும்
கதிரவனாக
உருவெடுத்தவனே!
விஜயன் குறி பார்த்த
அம்பு போன்று,
அமரர் விஜேவர்தன
கையிலெடுத்த
தினகரன் என்ற அம்பும்
தமிழ் மக்களின் மனங்களில்
உண்மைகளை விளம்பியது!
தசாப்தங்கள் ஒன்பது
தாண்டி இன்று வரை,
வானத்தின்
தினகரன் போலவே
தமிழ்பேசும் மக்களின்
உள்ளத்தில்
ஒளியேற்றுகின்றாய்!
மூவின இனங்களை
ஒன்றாக்கி, ஒருதாயின்
பிள்ளைகளாய்
எழுத்தால்
ஒன்றிணைத்துள்ளாயே!
கட்டுரையால் வழிகாட்டும்
ஊடகக் கலையை
பல்வேறு ஆக்கசிந்தனையால்
அலங்கரித்தவனே!
உரைநடையால்
தேசியப்பற்றை
உருவாக்கியவனே!
இலைமறைகாய் கவிஞர்களை
கவி பாட வைத்தவனே!
ஆய்வு கட்டுரைகளால்
மக்கள் மனங்களில்
விளக்கேற்றியவனே!
வார்த்தைகளால் உன்
புகழ்பாட இயலாது!
ஏரிக்கரை வீடு
பெற்றெடுத்த உனக்கு
இன்று அகவை
தொண்ணூற்று இரண்டு,
இன்னும் இளமை மாறாது
வெற்றியுடன்
பயணிக்கின்றாய்!
எத்தனை வார்த்தைகள்
புனைந்தாலும்
உன் புகழ் பாடுவதற்கு
வார்த்தைகளுக்கு
பஞ்சமில்லை!

**கவி பாரதி**

## வடமாகாணத்தில் முன்னணி கல்வி நிறுவனம் SLIIT NORTHERN UNI


SLIIT NORTHERN UNI ஆனது வடமாகாணத்தில் முன்னணி கல்விநிறுவனமாக திகழ்வதோடு வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்வியியல் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்திக்கான முழுமுயற்சியையும் வழங்கி கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள SLIIT NORTHERNUNI ஆனது வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்களையும், கல்விக்கடன் வசதிகளையும் யாழ் கல்வி மேம்பாட்டு நிதியூடாக (YES Fund) வழங்கிவருகிறது.


இம் மேன்மை பங்கெடுப்பின் ஓர் அங்கமாக உயர்தரத்தில் மாவட்ட ரீதியில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் SLIIT NORTHERN UNI யில் உயர் கற்றல் அடைவுகளை பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வுகளையும் MANAGE FEST எனும் பாடசாலை மாணவர்களுக்கான நுண்ணறிவு போட்டிகளையும் நடத்தி வருகிறது.

அதன் படி எமது Chairman இந்திரகுமார் பத்மநாதனால் யாழ் இந்துக்கல்லூரியை சேர்ந்த மாவட்ட ரீதியில் உயர்தரத்தில் முதலிடத்தை பெற்ற உயிரியல் மற்றும் கணித பிரிவுகளை சேர்ந்த மாணவர்களான செல்வன். ஆனந்தஜோதி வித்தியாசாகர் மற்றும் செல்வன். ஸ்ரீ பண்டகரன் சினேகன் என்போருக்கும், சாதாரண பரீட்சையில் சிறப்பு தேர்ச்சி பெற்ற யாழ் வேம்படி மகளிர் கல்லூரியை சேர்ந்த செல்வி அக்சயா ஆனந்தசயனனுக்கும், எமது SLIIT NORTHERNUNI யில் சிறப்பு தேர்ச்சி எய்திய இரண்டாம் வருட மாணவன் செல்வன் முரளிதரன் பிரனீஷுக்கும் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

அத்துடன் உயர்தர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற கிளி/முழங்காவில் மகாவித்தியாலத்தை சேர்ந்த செல்வி. குபேந்திரன் துஷாமினிக்கும், எம் SLIIT NORTHERNUNI ஆல் நிகழ்த்தப்பட்ட MANAGE FEST நுண்ணறிவு போட்டிகளில் பங்குபற்றி முதலிடத்தை பெற்ற மாணவி வேம்படி மகளிர் கல்லூரியை சேர்ந்த செல்வி சண்முகி கருணாநிதிக்கும் நான்கு வருட பட்டப்படிப்பை SLIIT NORTHERN UNI யில் தொடர்வதற்கான புலமைப்பரிசில் வசதியும் அவரின் சிறப்பு தேர்சிக்கான கௌரவிப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் அப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.




92 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் தினகரனுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்

MD. Al Haj. M.J.M.Rifath
AMAANI GEMS (PVT) LTD
No, 553 2/1, Trincomalee Street, Matale, Srilanka. Tel : + 9466 - 2054575, +9475-6559439

92 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் தினகரனுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்
M Manamagal
Fancy & Textiles
Dealers in all kind of Fancy Goods, Gift Items, Covering Jewellery & Indian Textiles

No,612A, Main Street, Matale.
Tel : 066 2222075

92 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் தினகரனுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்

ROYAL ENGLISH SCHOOL
No, 33/22, Royal Gardens, Mandandawela, Matale.
Tel : 066 2228866, 071 8241913, 077 3378768.
Email : royal_matale@live.com

வெற்றிநடை போடும் தினகரனுக்கு வாழ்த்துக்கள்!!
92nd Anniversary
SKS
S.K.SONS
AUTHORISED AGENT FOR PRIMA LIVE STOCK FEEDS
Dealers in Forage, Fetilizer, Animal Feeds And Medicines
25, Wolfendhal Street, Colombo - 13. Tel: 011 - 2433105, Mob: 077 - 7396162

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம் ஹரே கிருஷ்ணா

வெற்றிநடை போடும் தினகரனுக்கு வாழ்த்துக்கள்!!
BANK - HATTON NATIONAL BANK
BRANCH - JAMPETTAH STREET
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 207010000891
SWIFT CODE - HBLILKLX
BANK - COMMERCIAL BANK
BRANCH - KOTAHENA
ACCOUNT NAME - ISKCON
ACCOUNT NO - 1050669901
SWIFT CODE - CCEYLKLX
ஆலய அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி வைப்பினூடாகவோ நன்கொடைகளை வழங்கலாம்
ISKCON
No, 188 New Chetty St, Colombo 15,
T.P: 0112433325/ 0772288166/ iskcon@slt.lk

## வரலாற்று சாதனையில் 92 ஆண்டுகள்

ஊடகத்துறையான "தினகரன்" பத்திரிகை ஒரு தனித்தவமான, பாரம்பரியத்துடன் 92 வருடங்கள் தொடர்ச்சியாக சளைக்காமல் தனது தனித்துவத்தை இழக்காமல் ஓர் தரமான செய்தி பத்திரிகையாக முன்னணி வகித்து வருவதையிட்டு பெரு மகிழ்ச்சியாக இருக்கிறது.

தினகரன் பத்திரிகையானது தனது நீண்ட பயணத்தில் அனைத்து செய்திகளையும் அவ்வப்போது வெ ளியிட்டு வருவதுடன், கலை, கலாசாரம், கல்வி, அரசியல், விளையாட்டு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறிவுசார்ந்த செய்திகளை பிரசுரித்து வாசகர்களுக்கு ஊக்கத்தை கொடுத்து வரும் தினகரன், ஊடகத்துறையில் தற்போது 92 வருடங்களை பூர்த்திசெய்து, தொடர்ந்து வாசகர்களுக்கு சேவையாற்றி இருப்பது பெருமகிழ்ச்சியே!

அத்தோடு தினகரனின் நீண்ட பயணத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கலைத்துறையைச் சார்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் என அனைத்து துறையைச் சார்ந்தவர்களையும் வெ ளி உலகத்திற்கு அறிமுகப்படுத்தி ஊக்குவித்து செயலாற்றி வருவதை என்றும் மறக்கமுடியாது.

அந்தவகையில் நீண்ட வரலாற்றைக் கொண்ட தினகரன் பத்திரிகை 92வது வயதை அடைந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும், முதன்மையான, சிகரம் தொட்ட பத்திரிகையாகும். தினகரனுக்கும், தினகரன் நிறுவனத்திற்கும், செய்தி ஆசிரியர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கலாபூஷணம், கலைமாமணி,**
**மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்**




கல்வி அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்ட SLIIT NORTHERNUNI இன்
நான்கு வருட பட்டப்படிப்புகள் தற்போது யாழ்ப்பாணத்தில்,

## SLIIT NORTHERN UNI இனால் வழங்கப்படும் கற்கைநெறிகள்

### Computing

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

### Business

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

### International Programs (University of Bedfordshire- UK)

- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- BA (Hons) Business Administration.

### Graduate Studies & Research

- PGDE Programs
- MSc Programs
- MBA Programs

### Foundation Programs

- Foundation in Information Technolgy
- Foundation in Business Management

### Professional Development Programs

- Certificate Program in IT Applications.
- Certificate Program in Business Management.
- Certificate Program in General English.

NORTHERN UNI

Call us now :
077 147 1471 , 076 141 2881

northernuni.lk
apply@northernuni.com

# தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932–2024 ANNIVERSARY

# 'விழி' நூல் வெளியீடு இன்று

**தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் காவேரி கலாமன்றத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியல் நடத்திய தொழுநோய் விழிப்புணர்வுக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் கட்டுரைகள் அடங்கிய 'விழி' கட்டுரை நூல் தொகுப்பு இன்று தினகரனின் 92ஆவது ஆண்டுவிழாவில் வெளியிடப்படுகின்றது.**



## ஆசியுரை



கிளிநொச்சி காவேரிக் கலா மன்றம் தினகரன் வாரமஞ்சரி /தினகரன் நாளிதழ் பத்திரிகை ஆகியன இணைந்து "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கு இணங்க இலங்கையில் தொழுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய கட்டுரைகளின் பிரதிகளை நூலாக்கி தினகரன் பத்திரிகையின் 92 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வெளிக்கொணர்வதில் நாம் புளகாங்கிதம் அடைகின்றோம்.

முழுமையான தொழு நோய் அற்ற நாட்டை உருவாக்குவதற்கான முயற்சியில் கடந்த 20 வருடங்களாக காவேரி கால மன்றம் செயற்பட்டு வருகின்றது. இதன் நடவடிக்கைகள் தனித்துவம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. அந்த வகையிலே நாட்டு மக்களிடையே தொழுநோய் குறித்த விளைவுகளை விழிப்புணர்வூட்டுவதற்காக எமது தினகரன் வாரமஞ்சரி/ தினகரன் நாளிதழ் பத்திரிகையுடன் இவ்வமைப்பு இணைந்து நாடளாவிய ரீதியில் தொழுநோய் தொடர்பான கட்டுரைப் போட்டியை மிக முக்கியமான விடயமாகக் கருத்திற் கொண்டு நடத்தியது. இதில் 100 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கட்டுரைகளைத் தொகுத்து இன்றைய தினத்தில் நூலாக வெளிக்கொணரப்படுவதையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். இந்நூல் தொழுநோய் குறித்த சரியான சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதற்கு பயனுள்ளதாக அமையும் என்பது திண்ணமாகும். மேலும் இப்போட்டியில் பங்கேற்று பரிசில்களைப் பெறும் கட்டுரையாளர்கள் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓர் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மனிதன் வாழ்வதற்கும் இக்கட்டுரைத் தொகுதி ஓர் உறுதியான ஊடுகடத்தியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே இத்தகைய நிகழ்வினை எம்மோடு இணைந்து நடத்துவதற்கு முன்வந்த காவேரி கலா மன்றத்தின் இயக்குனர் அருட் தந்தை வண பிதா யோசுவா அடிகளார் நல்கிய ஒத்துழைப்புக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்கு இணைப்பதிகாரியாக செயற்பட்ட இந்நூலின் ஆசிரியரும் எமது சிரேஷ்ட ஊடவியலாளருமான இக்பால் அலி மற்றும் எமது ஆசிரியர் பீடத்தின் முன்னாள் பிரதம உதவி ஆசிரியர் எஸ். ஸ்ரீகாந்த் ஆகிய இருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் எமது நாட்டில் தொழு நோயை இல்லாதொழிப்பதற்கு பரந்த பங்களிப்பை வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் அதேவேளையில் இந்நோய் குறித்து முன்னெச்சரிக்கையுடன் இருப்பது மிக மிக அவசியம். வந்தபின் நொந்து போவதை விட வருமுன் காப்பதே சிறந்தது ஆகும்.

*தே. செந்தில்வேலவர்.*
பிரதம ஆசிரியர் தினகரன்

## வாழ்த்துரை



நண்பர் இக்பால் அலி கவேரி கலா மன்றத்துடன் இணைந்து தொழுநோய் கட்டுப்படுத்தலுக்கான ஊடகத்துறையின் விழிப்புணர்வு குறித்த பல ஒன்று கூடல்கள் நடத்தியுள்ளார். கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் ஒன்றுகூடலில் தொழுநோய் கட்டுப்படுத்தலுக்கான சமூக விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்றை தினகரன் பத்திரிகை ஊடாக செய்வதற்கான பரிந்துரையை அவர் முன்வைத்து அதற்காக தொடர்ச்சியாக பணியாற்றியதன் விளைவாக தற்போது 'விழி" என்ற இந்த மக்கள் விழிப்புணர்வு அனுபவ கட்டுரைகள் தொகுப்பு நூலாக வெளிவந்திருக்கின்றது.

சமூக மாற்றத்துக்கான எந்தப் பணியிலும் ஆரோக்கியம் குறித்த முன்னெடுப்புக்கள் முதன்மை இடம் பிடிக்கின்றன. ஆரோக்கியம் குறித்து சிந்திக்காத ஒர் சமூகத்தில் அரசியல், சமூக, பொருளாதார மேன்மைகள் குறித்து சிந்திக்க முடியாது. குறிப்பாக தொற்றும்நோய்கள் குறித்த விடயங்களில் அதிகபட்ச விழிப்புணர்வு அவசியமானது என்பதை இலங்கையில் வருடாந்தம் இரண்டாயிரம் பேர் இந்நோய் தாக்கத்துக்கு உள்ளாவது எடுத்துக் காட்டுகின்றது.

காவேரி கலா மன்றம் கடந்த இருபத்தாறு வருடங்களாக தொழுநோய் கட்டுப்படுத்தலுக்கும் தொழுநோயினால் பாதிக்கப்படுகிறவர்கள் நல்வாழ்வு மற்றும் தொழுநோய் கட்டுப்பாட்டுக்கான ஆராச்சி, மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த தொழுநோய் பணிகளுக்கான ஆதரவு குறித்த பணிகளிலும் ஈடுபடுகின்றது. தொழுநோயாளர் மறுவாழ்வு சங்க உருவாக்கமும் அதற்கூடாக அதன் அங்கத்தவர்களை சமூகத்தில் தொழுநோய் கட்டுப்படுத்தலுக்கான கருவியாக பாவிப்பது குறித்த பணிகளை செய்து வருகிறது. இந்தப் பணிகளில் ஒர் அங்கமாக சமூக விழிப்புணர்வுக்கான கட்டுரை போட்டியை தினகரன் பத்திரிகை நடத்துவதற்கு தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. இலங்கையிலிருந்து தொழுநோயை முற்றாக இல்லாதொழிக்கும் செயற்திட்டத்துக்கான ஊடகங்களின் பங்களிப்பு குறித்த வரலாற்றில் இக்பால் அலியின் முயற்சியும் தினகரன் ஆசிரியர் தே.செந்தில்வேலவரின் அர்ப்பணிப்பும் என்றும் நினைவுகூரப்படும்.

இந்த கட்டுரை போட்டியில் பங்குபற்றிய அனைவரையும் வாழ்த்துவதோடு வெற்றி பெற்ற அனைவருக்கும் எனது பாராட்டையும் தெரிவிப்பதோடு இதில் பங்குகொண்ட யாவரும் இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்க தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*வண. T.S. யோசுவா*
இயக்குனர்
காவேரி கலா மன்றம்

## பதிப்புரை



இந்நாட்டின் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் கிளிநொச்சி காவேரிக்காலமன்றமும் அச்சு ஊடகத்துறையில் 92ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நீண்ட வரலாற்றைக் கொண்ட தினகரன் வாரமஞ்சரி /தினகரன் நாளிதழ் பத்திரிகையும் இணைந்து தொழுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து "விழி" எனும் பெயரில் சுகாதார சேவைக்கு அத்தியாவசியமான இந்நூல் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சுகாதார உலகில் நாம் தொழுநோய் என்றால் அச்சமுற்று வாழ்ந்திருந்த நிலை மாறி அவற்றிலிருந்து மக்கள் பாதுகாப்புடன் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அறிவுபூர்வமான ஆலோசனைகளையும் நோயுற்றவர்கள் சமூகத்தோடு சேர்ந்து சரி சமனாக எல்லா மனிதர்களுடம் அடிக்கடி சந்தித்து உறவாடி சாதனைகளையெல்லாம் நிலை நாட்டலாம் என்ற அபூர்வமானதும் மகிழ்ச்சிகரமானதுமான செய்திகளைச் சொல்லக் கூடிய பிரமிக்கத்தக்க சிறந்த கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக பொது மக்களும் சிறார்களும் தொழு நோய் குறித்த முழுமையான தகவல்களை படித்து அறிந்து கொள்ளலாம். இன்றைய கால கட்டத்தில் தொழு நோய் பற்றி அறிந்து கொள்வதற்கும் அது பற்றிச் சிந்தித்து விழிப்புணர்வுடன் செயலாற்றுவதற்கும் இந்நூல் இன்றியமையாததாகும்.

இந்நோய் தொடர்பில் ஆரம்ப காலகட்டங்களில் மக்களிடையே விழிப்புணர்வு காணப்படாமையினால் இந்நாட்டின் சுகாதார நிலை திருப்திகரமானதாகக் காணப்படவில்லை. எனினும் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் அருட்தந்தை வணபிதா கவிஞர் ரீ. எஸ் யோசுவா தொழு நோயைக் கட்டுப்படுத்துவதில் பல மகத்தான வேலைத் திட்டங்களை துணிந்து மேற்கொண்டார். அவை அவருக்கு பெருமளவில் சுகாதார துறையில் வெற்றியை அளித்தன. அவருடைய வழிகாட்டலுடன் அந்நிறுவனம் தொழு நோயாளர்களுக்காக நாடளாவிய ரீதியில் வினைத்திறனான செயற் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்கிறது என்பதற்கான வெளிப்படையான அடையாளம்தான் தினகரன் பத்திரிகையுடன் இணைந்து வெளியிடுகின்ற இந்நூலாகும்.

நாட்டு மக்களிடையே தொழு நோய் தொடர்பில் காணப்பட்ட மிகப் பயங்கரமான அச்ச நிலை பெருமளவில் இல்லாமற் செய்யப்பட்டுள்ளது. நோய் அறிகுறிகள் தென்பட்டால் அதற்கு எவ்வகையிலான சிகிச்சைகளையும் அறிவுரை களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வூட்டல்களை கிராமம் கிராமமாகச் சென்று காவேரிக் கலா மன்றம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்நூலிலுள்ள தொழு நோய் கட்டுரைகள் யாவும் வெறும் எழுத்துக்களோ வசனங்களோ அல்ல. பொது மக்கள் மத்தியிலும் பாடசாலை பிள்ளைகள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான சிறந்த கட்டுரைகளே இந்நூலில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. தினகரன் பத்திரிகையில் காவேரிக் கலா மன்றம் தொழு நோய் தொடர்பில் முன்னெடுக்கும் செயற் திட்டங்களை பத்தி எழுத்துக்களாக எழுதுதவற்கு தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் களம் அமைத்துத் தந்தார்.

அதேவேளையில் அதனைத் தொடர்ந்து காவேரிக் கலா மன்றம் தினகரனுடன் இணைந்து போட்டியினை நடத்த முன்வந்ததுடன் இரு தரப்பினரும் சேர்ந்து போட்டியில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுடைய கட்டுரைகளைத் தொகுத்து இப்படியானதொரு நூலுக்கு என்னையே பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிக்கொணர்வதற்கு அங்கீகாரம் வழங்கியமைக்கும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*இக்பால் அலி*
சிரேஷ்ட ஊடகவியலாளர்

## இன்றைய விழாவில் பரிசு பெறுவோர்

தினகரன் நாளிதழ் தினகரன் வாரமஞ்சரி ஆகியன இணைந்து நடத்திய தொழுநோய் தொடர்பிலான கட்டுரைப் போட்டியில் பரிசுகள் பெற்ற கட்டுரைகளைத் தெரிவு செய்து "விழி" எனும் பெயரில் இன்றைய தினகரனின் 92 ஆவது ஆண்டு தின விழாவில் நூலாகத் தொகுக்கப்பட்டு வெளியிடுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

பாடசாலைப் பிள்ளைகள் பொது மக்கள் மத்தியில் தொழு நோய் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதலை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் வெற்றி பெற்ற கட்டுரையாளர்களின் கட்டுரைத் தொகுப்புத் தான் இந்நூல். இது எமது நாட்டு மக்களின் ஆரோக்கியமான சுகாதார சுகவாழ்வுக்கான ஒரு முக்கியமான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவதற்காவே இந்த "விழி" எனும் கட்டுரைத் தொகுதியினை உங்கள் முன் கொண்டு வந்திருக்கின்றோம். இந்நூலின் பதிப்பாசிரியர் இக்பால் அலி ஆவார்.

நூலுக்கான ஆசியுரையினை தினகரன் நாளிதழ், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செல்தில்வேலவரும், வாழ்த்துரையினை கிளிநொச்சி காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வண பிதா எஸ் யோசுவா அடிகளாரும் எழுதியுள்ளனர். அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் நூலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைப் போட்டி தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டது. ரூபா 50000.00 பணப் பரிசினையும் சான்றிதழையும் யாழ். பிரதேச அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி ஜுட் அல்போன்சஸ் மேவிஸ் ஜின்யா பெற்றுக் கொள்கின்றார். ரூபா 25000.00 என்ற இரண்டாம் பணப் பரிசிலையும் சான்தழையும் வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவன் செல்வன் எஸ்.அஸ்வின் பெற்றுக் கொள்கின்றார்.

இப்போட்டியில் பங்குபற்றிய 10 பேருக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்படும். என். ஜெசிந்தன் கொக்குவில் யாழ்ப்பாணம், கே. புஸ்பசாரா வட்டுக் கோட்டை யாழ்ப்பாணம், எம். எம். சப்னா, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், வவுனியா, எஸ். மேரி நிரோஜனா, தாதியர் மாணவி, தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம், எஸ் மேனுஜன், தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. முஹமட் தஸ்லிம் அப்துர் ரஹ்மான் காத்தான்குடி, பி. புஸ்பராஜு அளுத்மாவத்தை. கொழும்பு. எஸ். அனுஜன், பொது சுகாதார பரிசோதகர். எஸ். கேதாஜினி மூன்று முறிப்பு, வவுனியா, எஸ். சங்கவி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பத்துப் பேர் ஆறுதல் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.


**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரலுக்கான அழைப்பு**

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் தேயிலை விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF TEA SALES SHOPS IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

**விலைக்கோரல் இலக்கம். 0119/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் தேயிலை விற்பனை நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. ஐந்து (05) இடங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன என்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் பிரத்தியேக மற்றும் அழகு பராமரிப்பு கடைகளை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF PERSONAL AND BEAUTY CARE SHOPS IN THE DEPARTURE/ TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

**விலைக்கோரல் இலக்கம். 0122/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் பிரத்தியேக மற்றும் அழகு பராமரிப்பு கடைகளை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. நான்கு (04) இடங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன என்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் நடமாடும் தொலைத்தொடர்பாடல் சேவை கருமபீடமொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A MOBILE COMMUNICATION SERVICE COUNTE IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

**விலைக்கோரல் இலக்கம். 0123/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் நடமாடும் தொலைத்தொடர்பாடல் சேவை கருமபீடமொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. ஒரு (01) இடத்திற்காக கேள்வி கோரப்படுகின்றது.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மரமுந்திரிகை (கஜு) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF A CASHEW SHOP IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

**விலைக்கோரல் இலக்கம். 0124/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் மரமுந்திரிகை (கஜு) கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. ஒரு (01) இடத்திற்காக கேள்வி கோரப்படுகின்றது.

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் வர்த்தகநாம துணைப்பாகங்கள் கடைகளை நடாத்திச் செல்வதற்காக தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்
**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF BRANDED ACCESSORIES SHOPS IN THE DEPARTURE/TRANSIT AREA AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

**விலைக்கோரல் இலக்கம். 0130/T/2023**
மூன்று (03) வருட காலத்திற்கு கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேசத்தில் வர்த்தகநாம துணைப்பாகங்கள் கடைகளை நடாத்திச் செல்வதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், ஸ்தாபனங்கள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. ஐந்து (05) இடங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன என்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்

ஒரு விலைமனுதாரருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களை ஒதுக்குவது வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சிறப்பு ஆர்வம் என்பதைக் கவனத்திற்கொள்ளவும். கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் தற்போது புறப்படுதல் / போக்குவரத்து இடம்மாறல் பிரதேச பகுதியில் ஒரு கடையை நடாத்தி வரும் எந்தவொரு நடத்துநரிடமிருந்தும் எந்தவொரு விலைமனுக்களையும் பெற்றுக்கொள்ள நிறுவனம் கவனத்திற் கொள்ளாது. இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் என்பன இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். அக்குறித்த விலைக்கோரல் ஆவணங்களை 2024 மார்ச் 15ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 08ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அலை இல. 37, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 0119/T/2023 | ரூபா 30,000.00 |
| 0122/T/2023 | ரூபா 25,000.00 |
| 0123/T/2023 | ரூபா 35,000.00 |

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 0124/T/2023 | ரூபா 35,000.00 |
| 0130/T/2023 | ரூபா 26,000.00 |

விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மேற்கூறிய மீளளிக்கப்படாத கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வழங்கப்படும் விலைக்கோரல் மாதிரிப் படிவங்களில் மாத்திரம் விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு கடைக்காகவும் இயைபுடைய விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணைமுறி விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியிலிருந்து 150 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணை முறியாக அல்லது ரொக்கப் பணமாக முன்வைக்கலாம்.

விலைக்கோரல்களை முன்வைப்பது தொடர்பான முன்னோடிக் கூட்டம் 2024 மார்ச் 24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், வர்த்தகம் மற்றும் ஆதனப் பிரிவில் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து அமைவிட விஜயம் இடம்பெறும்.

விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், தொடர் வழங்கல் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் தளம், அறை இல. 37, வர்த்தகம் மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து 011-2264000, 011-2264002, 011-2252744 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.alid@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**நிலை 30, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு -01**

# தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932–2024 ANNIVERSARY

# தமிழ்பேசும் மக்கள் உள்ளத்தில் தாயகப்பற்றை வளர்ப்பதற்கு அடித்தளமிட்ட பத்திரிகை தினகரன்

## இன, மத பேதங்களுக்கு அப்பால், அனைத்து மக்களின் உள்ளத்திலும் ஊடகம் ஊடாக தேசியவாதத்தை வளர்த்த பெருமகன் அமரர் டி.ஆர். விஜேவர்தன

ஒரு நாட்டினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டுக்கும் பத்திரிகைகள் அளப்பரிய பங்களிப்பை நல்கக் கூடியனவாகும். அந்த வகையில் இலங்கையின் சுதந்திரத்திற்கும், சமூக, பொருளாதார, கலாசார, கலை, இலக்கிய, அறிவியல் மேம்பாட்டுக்கும் தினகரன் அளித்துவரும் பங்களிப்புக்கள் அளப்பரியன.

அதன் ஊடாக இலங்கையின் வரலாற்றிலும் பத்திரிகை உலகிலும் அழியாத்தடம் பதித்திருக்கிறது தினகரன்.

தமிழ் பேசும் நல்லுலகில் இரண்டு தினகரன் தினசரிகள் வெளிவருகின்றன. அவற்றில் ஒன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிவருவது. மற்றையது இலங்கையில் வெளிவருவது.

இற்றைக்கு ஒன்பது தசாப்தங்களுக்கு முன்னர் 'அசோசியேட்டட் நியூஸ் பேர்ப்பஸ் சிலோன் லிமிட்டட்' என்கின்ற லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் டி.ஆர் விஜேவர்தன தினகரன் பத்திரிகையை ஆரம்பித்தார்.

இலங்கையின் சுதந்திரத்திற்கு அச்சு ஊடகத்துறையின் ஊடாக அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ள அமரர் டி.ஆர் விஜேவர்தன சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிப் பத்திரிகைகளைப் போன்று தினகரன் பத்திரிகையையும் இலக்கையும் நோக்கையும் கொண்டதாகவே தொடங்கினார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு இந்நாடு உள்ளாகியிருந்த காலப்பகுதியில் அதாவது 1932 மார்ச் 15 ஆம் திகதி தொடங்கப்பட்ட இப்பத்திரிகையின் இலக்கு நாட்டின் சுதந்திரத்திற்கு பங்களிப்பதேயாகும்.

அமரர் டி.ஆர் விஜேவர்தன, தமிழ்மொழி பேசும் சமூகத்தை சாராதவராக இருந்த போதிலும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இந்நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது.

ஆனால் அன்றைய காலப்பகுதியில் இந்நாட்டின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்பட்ட ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் மற்றும் அது தொடர்பிலான



செய்திகளும் தகவல்களும் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு சொல்லப்படாத நிலை காணப்பட்டது.

அக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில்தான் டி. ஆர். விஜேவர்தன தமிழ் பேசும் மக்களுக்காக தினகரன் பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகைக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நல்ல ஆதரவும் வரவேற்பும் கிடைக்கப் பெற்றன.

நாட்டின் சுதந்திரத்திற்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் குறித்த தகவல்களும் செய்திகளும் இப்பத்திரிகையின் ஊடாக தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்லப்படலாயின. சுதந்திரத்தின் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக தினகரன் கடுமையாக உழைத்தது. இதற்கு இப்பத்திரிகையில் அன்றைய காலப்பகுதியில் வெளியான செய்திகளும் ஆக்கங்களும் தகவல்களும் நல்ல சான்றுகளாக உள்ளன.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு இலங்கையர் என்ற அடையாளத்துடன் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான களத்தை தயார் செய்யும் பணியை இப்பத்திரிகை கனகச்சிதமாக முன்னெடுத்தது. அதற்கு இப்பத்திரிகையின் முதலாவது பதிப்பில் 'நமது நோக்கம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கம் நல்ல ஆதாரமாக விளங்குகிறது.

'இப்பத்திரிகை யாருக்காகப் பிரசுரம் செய்யப்படுகின்றதோ அவர்கள் எம்மீது வைக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கு நாங்கள் பாத்திரங்களாக இருப்பதற்கு மனப்பூர்வமாக முயல்வோம். இலங்கையிலேனும் வேறெந்த நாட்டிலேனும் உள்ள கட்சியாளர்களில் எவராவது ஒரு கட்சியினரின் முகமனைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது பத்திரிகை கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எவராவது ஒருவருக்கு மாத்திரம் பணியாற்றுவதற்கு அன்றி ஏதாவது விஷேட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இது தோன்றியதன்று. தமிழ் பாஷையைப் பேசும் மக்கள் எவரெவரோ அவரவர்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதே இப்பத்திரிகையின் பெரும் பணியாகும். ஆகவே எல்லோருக்கும் பொதுவாக நன்மைகள் பயக்கத்தக்க வழியில் நடப்பதே எமது நோக்கம்.'

இந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக தினகரன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதன் நோக்கமும் இலக்கும் தெளிவாகிறது. அந்த நோக்கத்தின்படி, ஆரம்ப காலம் முதல் செயற்பட்டுவரும் தினகரன், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சுதந்திரம் தொடர்பில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக இன, மத, மொழி பிரதேச ரீதியிலான பார்வைகளுக்கு அப்பாலான தேசிய பார்வைக்கு வித்தூன்றியது தினகரன்.

அந்த வகையில் 1948 இல் இன, மத, மொழி பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒன்றுபட்டு சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள தினகரன் ஏற்படுத்திய விழிப்புணர்வும் பாரிய பங்களிப்பு நல்கியுள்ளது.

இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது. தினகரனானது தாம் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்தோடு மாத்திரம் தம் பணிகளை சுருக்கிக் கொள்ளவில்லை.

மாறாக இந்நாட்டின் தமிழ்ப் பத்திரிகைத்துறை வளர்ச்சிக்கும் சமூக, பொருளாதார, கலை, கலாசார,







இலக்கிய, அறிவியல் மேம்பாட்டுக்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகிறது.

குறிப்பாக தினகரன் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இந்நாட்டு தமிழ்பேசும் மக்களுக்கு கிடைக்கப்பெற்ற தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழகத்தின் மொழி, கலை, இலக்கிய, கலாசார செல்வாக்கு மிக்கவையாகக் காணப்பட்டன. தமிழக மண்வாசனையே அவற்றில் இருந்தது.

அதனால் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் மொழி, கலை, இலக்கிய மற்றும் கலாசாரப் பாரம்பரியங்கள் தமிழகத்தின் மொழி, கலை, இலக்கிய கலாசாரப் பாரம்பரியங்களுக்குள் கரைந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருந்தது.

இந்த அச்சுறுத்தல் குறித்து கவனம் செலுத்திய அமரர் டி.ஆர் விஜேவர்தன உள்நாட்டு தமிழ் பேசும் மக்களின் மொழி, கலை, இலக்கிய, கலாசார விழுமியங்களுக்கு தினகரனில் முன்னுரிமை அளித்தார். அதற்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் தினகரனின் அன்றைய ஆசிரியர்களுக்கு அவரே வழங்கினார். இது உள்நாட்டு எழுத்தாளர்கள் உருவாக வழிவகுத்தது. இந்தப் பின்புலத்தில் உள்நாட்டு எழுத்தாளர்களின் களமாகியது தினகரன். இதன் ஊடாக உள்நாட்டு இலக்கியம் செல்ல வேண்டிய பாதையை செப்பனிட்ட தினகரன் தேசிய இலக்கியம் தோற்றம் பெறவும் உறுதுணையாக நின்றது.


இந்நாட்டுக்குரிய தமிழ்மொழிப் பாரம்பரியம், கலை, இலக்கிய மண்வாசனை கொண்ட தனித்துவம் மிக்க பத்திரிகையாக தினகரனைக் கட்டியெழுப்புவதில் டி.ஆர் விஜேவர்தன உறுதியாக இருந்தார். அதன் ஊடாக ஆயிரக்கணக்கான எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் உள்நாட்டில் உருவாகியுள்ளார்கள்.

இந்நாட்டின் கலை, இலக்கிய மேம்பாட்டுக்கு மாத்திரமல்லாமல் அறிவியல் வளர்ச்சிக்கும் கூட அளப்பரிய பங்களிப்புக்களை தினகரன் நல்கியுள்ளது. இப்பத்திரிகையில் கடந்த 25 வருட காலப்பகுதியில் வெளியான பல அறிவியல் கட்டுரைகள் தேசிய மட்டத்தில் விஞ்ஞான, சுகாதார துறைகளுக்கான விருதுகளையும் வென்றெடுத்துள்ளன. தினகரன் பாசறையில் வளர்ந்த பல எழுத்தாளர்கள், இந்நாட்டின் அரச சாஹித்திய விருதுகளையும் கூட பெற்றுள்ளனர். இதன்படி இந்நாட்டின் சுதந்திரத்திற்காக உழைக்க ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை இலங்கை தமிழ் பத்திரிகை துறை வளர்ச்சிக்கும் ஏனைய துறைகளின் முன்னேற்றங்களுக்கும் அளப்பரிய பங்களிப்புக்களை நல்கி வருகிறது.

ஆகவே இந்நாட்டின் பத்திரிகைத்துறை வளர்ச்சிக்கும், சமூக, கலாசார, கலை, இலக்கிய, அறிவியல் முன்னேற்றங்களுக்கும் தினகரன் அளித்துவரும் பங்களிப்புக்கள் இந்நாட்டு வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்படும் என்றால் அது மிகையாகாது.



**மர்லின் மரிக்கார்**
தினகரன் ஆசிரியபீடம்



92வது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும்
தினகரன் நாளிதழுக்கு
எமது வாழ்த்துக்கள்





GANESH Since 1976
கணேஷ்
டெக்ஸ்டைல்ஸ் (பிரை) லிமிட்டட்
81- 83, மெயின் வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 0112 325128, 0112 343078

**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

கட்டுநாயக்க, சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) பயண சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF TRAVEL SERVICE COUNTERS AT ARRIVAL PUBLIC CONCOURES (LOBBY), BANDARANAIKE INTERNATIONAL AIRPORT (BIA), KATUNAYAKE**

**கேள்வி இல. 138/T/2023**

மூன்று (03) ஆண்டு காலத்திற்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) பயண சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள், தனி நபர்கள் மற்றும் தொடர்புடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆறு (06) கருமபீட இடங்கள் கேள்வியில் உள்ளன.

கட்டுநாயக்க, சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) ஹோட்டல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF HOTEL SERVICE COUNTERS AT ARRIVAL PUBLIC CONCOURES (LOBBY), BANDARANAIKE INTERNATIONAL AIRPORT (BIA), KATUNAYAKE**

**கேள்வி இல. 139/T/2023**

மூன்று (03) ஆண்டு காலத்திற்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) ஹோட்டல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள், தனி நபர்கள் மற்றும் தொடர்புடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆறு (06) கருமபீட இடங்கள் கேள்வியில் உள்ளன.

கட்டுநாயக்க, சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) மொபைல் தொடர்பாடல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION MOBILE COMMUNICATION SERVICE COUNTERS AT ARRIVAL PUBLIC CONCOURES (LOBBY), BANDARANAIKE INTERNATIONAL AIRPORT (BIA), KATUNAYAKE**

**கேள்வி இல. 140/T/2023**

மூன்று (03) ஆண்டு காலத்திற்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (BIA), வருகை பொது திறந்த அரங்கில் (முகப்பு அறை) மொபைல் தொடர்பாடல் சேவை கருமபீடங்களை செயற்படுத்துவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள், தனிநபர்கள் மற்றும் தொடர்புடைய சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஐந்து (05) கருமபீட இடங்கள் கேள்வியில் உள்ளன.

எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களுக்கு விலைக்கேட்பு மேற்கொள்ள முடியும் என்றபோது, குறிப்பிட்ட விலைமனுதாரர் ஒரு கருமபீடத்தை மாத்திரம் செயற்படுத்துவற்கு அனுமதி/ வழங்கல் மேற்கொள்ளப்படும். விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்துகின்ற ஏனைய விடயங்கள் குறித்த கேள்விமனுக்களின் விலைமனு ஆவணத்துடன் வழங்கப்படும். கீழ் குறிப்பிடப்பட்டவாறு ரொக்கப்பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி விலைமனுதாரரின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத்தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆவது மாடி, 31ஆம் இலக்க அறை, வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவு அலுவலகத்தில் இருந்து 2024 மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப 2.30 வரை வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை பெறலாம்.

| கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 0138/T/2023 | ரூபா 25,000.00 |
| 0139/T/2023 | ரூபா 12,000.00 |
| 0140/T/2023 | ரூபா 20,000.00 |

ஒன்லைன் கொடுப்பனவு மூலம், மேல் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் மூலம் www.airport.lk என்ற விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் (AASL) இன் இணையதளத்தில் இருந்து விலைமனு ஆவணத்தையும் கொள்வனவு செய்ய முடியும். கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய (BIA), விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் இன்றி பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் கிடைக்கப்பெறும்.

நிறுவனத்தால் வழங்கப்பட்ட குறித்த கேள்விமனுக்களின் விலைமனு படிவங்களில் மாத்திரம் விலைமனுக்கள் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அவை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியில் இருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியான இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி அல்லது உரிமம் பெற்ற சிறப்பு வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட வங்கி வரைவு அல்லது வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தில் அல்லது ரொக்கப்பணத்திலான குறித்த விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய கூட்டம் இடங்களுக்கான பயணம் ஒன்றைத் தொடர்ந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆவது மாடி, வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவில் 2024 மார்ச் 27ஆம் திகதி நடைபெறும்.

விலைமனுக்களை ஏற்பது 2024 ஏப்ரல் 10ஆம் திகதி பி.ப. 2.00க்கு நிறைவடைவதோடு அதனைத் தொடர்ந்து கொழும்பு 01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், கட்டம் 30, துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் பகிரங்கமாக திறக்கப்பட்டு வாசிக்கப்படும். விலைமனு மூடப்படும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கும் எந்த ஒரு விலைமனுவும் திறக்கப்படாது நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

மேலதிக விபரங்களை head.cp@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது 011-2264000, 011-2264005, 011-2252744 என்ற தொலைபேசி இலக்கங்களில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆவது மாடி, 31ஆம் இலக்க அறை, வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவில் இருந்து பெற முடியும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**கட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம்**
**கொழும்பு 01**

# தினகரன் வெற்றிப் பயணத்தில்... 92 ஆண்டுகள்

1932-2024 ANNIVERSARY

## தினகரனைத் தேடி வந்த கௌரவங்களில் சில...




தினகரன்

தினகரன் வாரமஞ்சரி

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 18ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## பிழை திருத்தம்
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்**

**செயற்றிட்டம் IDP: 163305**

**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு**

மேற்படி தலைப்பில் கடந்த **06.03.2024ம்** திகதிய தினகரன் நாளிதழ் IIIம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் அட்டவணையின் இரண்டாம் நிரலில் வேலைகளின் விளக்கம் பற்றிய விலைமனு இல. பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

1. செங்கலடி பொதுச் சந்தையில் ஆடைகள் மற்றும் Fancy பொருட்கள் விற்பனைக்கான கடைத்தொகுதி நிர்மாணித்தல்

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர், மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு.**
**கிழக்கு மாகாணம்.**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்.**
**உள்ளூராட்சித் திணைக்களம்.**
**வரோதய நகர், திருகோணமலை.**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 155,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மார்ச் 20ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124F212 | LKA18224I205 | LKA36425C217 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 70,000 | 40,000 | 155,000 |

ஏல விற்பனைத் திகதி : 2024 மார்ச் 20
தீர்ப்பனவுத் திகதி : 2024 மார்ச் 22
வழங்கப்படும் திகதி : 2024 மார்ச் 23
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 மார்ச் 20 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பதில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

## கேள்விக்கான அழைப்பு
**(இலங்கை அரசின் மானிய செயற்றிட்டங்கள்)**
**விவசாயத் திணைக்களம்**

பேராதனை விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் இரத்தினபுரி, கரபிஞ்ச விவசாயக் கல்லூரியின் கேட்போர் கூடத்திற்கு கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.03.19 முதல் 2024.04.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான ரூ. 1000.00 செலுத்திய பின்பு மாதிரிகள் அடங்கிய ஆவணங்களை கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இது பற்றிய மேலதிக விபரங்களை www.doa.gov.lk இணைய தளத்தில் மற்றும் கீழேயுள்ள தொ. பே. இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.04.09 ஆகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**
**தொ.பே. இல. 081-2389127**
**பெக்ஸ்: 081-2387403**

---

**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
## இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

**கேகாலை மாவட்டத்தில் மாபிடிகம தோட்ட, அமிதிரிகல, ருவன்வெல்ல பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அகழ்வு (அ) தெகுதியில் கருங்கல் அகழ்வு செயற்றிட்டம் விரிவுபடுத்தல் தொடர்பான ஆரம்ப சூழல் அறிக்கை (ஆசூஅ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற் கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22ஆம் இலக்க வர்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக இலக்கம் 35, மாபிடிகம தோட்டம், அமிதிரிகல, ருவன்வெல்ல ஜே. அன்ட் எஸ் மெடல் கிரசர்ஸ் தனியார் கம்பனிக்கு மேற் கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற் கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**'பரிசர பியச',**
**இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

## சுற்றுலாத்துறை அமைச்சு
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)**
## விலைக்கோரல் அழைப்பு – தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறான பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணைத் தேவைப் படுத்தல்கள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| சேவை | | | | | |
| 1 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை SLTDA/SLTPB/SLITHM/SLCB மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுராதபுரம், பண்டாரவளை, கதிர்காமம், நுவரெலியா, பெந்தோட்ட, பாசிக்குடா, கல்பிட்டி தேசிய விடுமுறை விடுதி மற்றும் ரசூல் தோட்டம் காணி மற்றும் மிட்வே ஸ்டேட் என்பவற்றுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் SLTDA/Resort/S/NCB/Security/2024/6 | 20,000.00 | 150,000,000.00 | 2024 மார்ச் 26ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு | 2024 ஏப்ரல் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

2. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தகைமை தகவுத் திறன்களின் பிரகாரம் இயைபுடைய வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கொழும்பு-03, இல. 80, காலி வீதி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சபை அறையில் (1ஆம் தளம்) விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112426800 (நீடிப்பு 305, 277), sagarikaw@srilanka.travel / sltdaproc@srilanka.travel மின்னஞ்சல் முகவரியில் இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. 2024 மார்ச் 19ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 08ஆம் திகதி வரையில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை (விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில்) sagarikaw@srilanka.travel / sltdaproc@srilanka.travel எனும் மின்னஞ்சல் முகவரிகள் ஊடாக சமர்ப்பித்ததன் பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும்.
6. மீளளிக்கப்படாத கட்டணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையினால் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7119413 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: வரவுத் துண்டில் வைப்பாளர்களின் விபரம் மற்றும் வைப்பிற்கான காரணம் எனும் இடத்தில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' எனக் குறிப்பிட்டு விலைமனுவுடன் மூலப் பிரதியை இணைக்கவும்) கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்களை முடிவுறுத்தப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, (4ஆம் மாடி) பெறுகைப் பிரிவில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (PCA3 படிவம்) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான் பிரகாரம் விலைமனு செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி பிரகாரம் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தின் ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளும் தகுதியை இழந்து விடுவார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு கிரயச் செலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

---

**வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை**
## பயன்படுத்தப்பட்ட வாகன விற்பனைக்கான கேள்வி மனு கோரல்

**கேள்வி மனு இலக்கம் ITN /Q /139/2021 - 1**

வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையில் பயன்படுத்தப்பட்ட கீழ் வரும் மோட்டார்கார் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விமனு கோரப்படுகின்றது.

| இலக்கம் | விபரம் | பதிவிலக்கம் | உற்பத்தி ஆண்டு | எஞ்சின் கொள்ளளவு |
|---|---|---|---|---|
| 01 | GEELY மோட்டார்கார் | kl- 3290 | 2009 | 1498.00 CC |

பத்தரமுல்ல விக்ரமசிங்கபுர வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைமையகத்தின் மேல் உள்ள வாகனம் 2024 ஏப்ரல் முதலாம் திகதி வரை வார நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பார்வையிடலாம்.

குறித்த விலைமனுக்கள் மேல் உள்ள வாகனத்திற்காக ரூ. 1180.00 மீள் செலுத்தும் கட்டணம் (வரி உட்பட) மற்றும் பத்தாயிரம் ரூபா மீள செலுத்தும் கேள்விமனு தொகை வைப்பிலிடப்பட்டு பத்தரமுல்ல விக்ரமசிங்கபுரவிலுள்ள வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முகாமையாளர் (கொள்வனவு) இற்கு பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் கேள்வி மனுக்களினால் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். கேள்வி மனுக்கள் 2024 ஏப்ரல் முதலாம் திகதி வரை வார நாட்களில் பொதுவான வேலை நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3மணி வரை வழங்கப்படும். அவ்வாறு ஒரு கேள்வி மனுவுக்கு ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். கேள்விமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளான ஏப்ரல் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் முத்திரையிடப்பட்ட கேள்வி மனுக்கள் தலைவர் கொள்முதல் குழு வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை விக்ரமசிங்கபுர பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது அம்முகவரியிலுள்ள முன்பாதுகாப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனு பெட்டியில் வைப்பிலிட முடியும். கேள்விமனுக்களை அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்விமனு இலக்கத்தை கட்டாயம் குறிப்பிட வேண்டும். அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு பின்னர் அனுப்பப்படும் கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

2024 ஏப்ரல் 2 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு மேலுள்ள முகவரியின் பொறியியல் பிரிவு அலுவலகத்தில் கேள்வி மனுக்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்தில் கேள்விமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ள முடியும்.

இது தொடர்பாக தெளிவு தேவைப்படின் 0112774594 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவையின் நிருவாக உத்தியோகத்தர் 0112775493 எனும் தொலைபேசியுடன் கொள்முதல் முகாமையாளரையோ தொடர்புகொள்ள முடியும்.

**தலைவர் கொள்முதல் குழு**
**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவை**
**விக்ரமசிங்கபுர,**
**பத்தரமுல்ல.**

---

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### கேள்வி அறிவித்தல்

2024ஆம் வருடத்தில் நுவரெலியா வசந்த கால கொண்டாட்ட வேளையில் வீதியின் ஒதுக்கப்பட்ட பகுதிகளை வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குதல்.

நுவரெலியா பிரதான பொறியியலாளர் பிரிவிற்குரித்தான பின்வரும் வீதிகளின் ஒதுக்கப்பட்ட பகுதிகளை 2024 ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையில் வியாபார நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்துள்ளது.

கீழே காட்டப்பட்டுள்ள வீதியின் ஒதுக்கப்பட்ட பகுதிகள் கேள்வி நடைமுறையின் பிரகாரம் கேள்விகளைக் கோரி குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகைக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.

குறித்த இடத்திற்கான கேள்விப் பிணை முறி முறையாக சமர்ப்பிக்கப்பட்டிராத விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

வியாபாரக் கூடங்களை நிர்மாணிக்கும் போது நடைபாதை அல்லது வீதிக்கு அண்மையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள எந்தவொரு இடத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது. தரை இடப்பரப்பை தவிர்த்து தூண்களை நிர்மாணிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. நிர்மாணங்களை மேற்கொள்ளும்போது நிறைவேற்றுப் பொறியியலாளர் (நுவரெலியா) அலுவலகத்தினால் பெயரிடப்படும் அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியது கட்டாயமாகும்.

இடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச கேள்வித் தொகையின் அளவு

1. பேராதனை - பதுளை - செங்கலடி வீதியில் நுவரெலியா மாநகர எல்லையில் மதகு இலக்கம் 68/2 - 68/3 வரையான 804.83 சதுர மீற்றர் வீதியின் ஒதுக்கப்பட்ட பகுதி (நுவரெலியா காமினி தேசிய பாடசாலைக்கு அண்மையில்)
   எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச கேள்வித் தொகை 2,035,250.00 ரூபா.

   கேள்விப் பிணை முறித் தொகை 50,000.00 ரூபாவாகும். இதை வங்கி கட்டளையொன்றின் மூலமாக வழங்குதல் வேண்டும்.

2. பேராதனை - பதுளை - செங்கலடி வீதியில் நுவரெலியா மாநகர எல்லையில் 66+200 - 66+500 கி.மீ. வரையான 469.5 சதுர மீற்றர் வீதியின் ஒதுக்கப்பட்ட பகுதி (தர்மபால சுற்றுவட்டம் முதல் நகரம் வரை)
   எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச கேள்வித் தொகை 1,200,000.00 ரூபா.

   கேள்விப் பிணை முறித் தொகை 24,000.00 ரூபாவாகும். இதை வங்கி கட்டளையொன்றின் மூலமாக வழங்குதல் வேண்டும்.

3. பேராதனை - பதுளை - செங்கலடி வீதியில் நுவரெலியா மாநகர எல்லையில் மதகு இலக்கம் 67/3 - 67 வரையான 75.225 சதுர மீற்றர் வீதியின் ஒதுக்கப்பட்ட பகுதி (பௌத்த மந்திரயவிற்கு முன்னால்)
   எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச கேள்வித் தொகை 200,000.00 ரூபா.
   கேள்விப் பிணை முறித் தொகை 4,000.00 ரூபாவாகும். இதை வங்கி கட்டளையொன்றின் மூலமாக வழங்குதல் வேண்டும்.

- முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதான பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கிரேன்டன் விலேஜ், நுவரெலியா எனும் முகவரிக்கு 2024 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்விப் படிவங்களுடன் குறித்த கேள்விப் பிணை முறித் தொகையை ''பணிப்பாளர் நாயகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை'' எனும் பெயருக்கு எழுதப்பட்ட வங்கிக் கட்டளையொன்றில் ஊடாக வழங்குதல் வேண்டும். கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
- இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2024 மார்ச் 19ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பின்வரும் அலுவலகங்களுக்கு மீளளிக்கப்படாத ரூபா 1,210.25 (சகல வரிகள் சகிதம்) தொகையைச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

  1. மாகாணப் பொறுப்பு பணிப்பாளர் அலுவலகம்,தொலைபேசி இல. 081-2222906, 081-2231937 மத்திய மாகாணம், அஸ்கிரிய, கண்டி.
  2. பிரதான பொறியியலாளர் அலுவலகம், தொலைபேசி இல. 052-2222552, 052-2222553 கிரேடன் விலேஜ், நுவரெலியா

கேள்வியை வெற்றிகொள்பவரினால் குறித்த இடத்திற்காக தீர்மானிக்கப்படும் கேள்விப் பெறுமதியை ''பணிப்பாளர் நாயகம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை'' எனும் பெயரில் பெற்றுக்கொண்ட வங்கிக் கட்டளையொன்றின் மூலம் 2024 ஏப்ரல் மாதம் 04ஆம் திகதிக்கு முன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நுவரெலியா பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தி குறித்த ஒதுக்கப்பட்ட பகுதியில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பிரதான பொறியியலாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**நுவரெலியா.**

---

**The Housewives' companion**
**Classifieds on**
